

2014, July 01 - 15

எக்ஸ்பிரஸ் நியூஸ் பேப்பர்ஸ் வெளியீடு

# சமகாலம்

Registered in the Department of Posts of Sri Lanka under No: QD/146/News/2014





யார் கையில் அரச அதிகாரம்?

பொதுபலசேனாவை
தடுத்து நிறுத்துவது எப்படி?

இலங்கை மீண்டும்
ஒரு கொலைக்களமாக மாறுமா?

ஜாதிக ஹெல உறுமயவின்
சியோனிச தந்திரோபாயம்

அமெரிக்காவின் மூன்றாவது ஈராக் போர்?

ஊடக சுதந்திரத்தின் வரையறைகள்

## அளுத்கமவுக்கு பிறகு...

| | | | | | |
|---|---|---|---|---|---|
| INDIA................IN₹ | 50.00 | CANADA........CAN$ | 10.00 | USA...........US$ | 10.00 |
| SRI LANKA....SLR | 100.00 | AUSTRALIA...AUS$ | 10.00 | UK.............GB£ | 5.00 |
| SINGAPORE...SG$ | 14.00 | SWISS.............CHF | 10.00 | EUROPE..EU€ | 5.00 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# THE BEST SOURCE FOR ALL YOUR NEWS





**Subscribe Today**

**THE HINDU**
INDIA'S NATIONAL NEWSPAPERS SINCE 1878

Call : 0712 269 442, 0117 322 783, 0117 322 781
ENCL 185, Grandpass Road, Colombo - 14, Sri Lanka.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தேசாபிமானம் எங்களது இறுதி ஆன்மீகத் தங்குமிடமாக இருக்க முடியாது. நான் ஒருபோதுமே வைரத்தின் விலைக்கு கண்ணாடியை வாங்கமாட்டேன். நான் உயிருடன் இருக்கும் வரை மனிதாபிமானத்தை தேசாபிமானம் வெற்றிக்கொள்வதற்கு அனுமதிக்கமாட்டேன்.


- ரவீந்திரநாத் தாகூர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





எக்ஸ்பிரஸ் நியூஸ் பேப்பர்ஸ் வெளியீடு
சமகாலம்
2014, ஜூலை 01 - 15
பக்கங்கள் - 68



10 இரண்டு ஆண்டுகால நீட்சியில் 'சமகாலம்'

15 யார் கையில் அரச அதிகாரம்?

20 அளுத்கமவும் போர்வெற்றிக் குதூகல அணிவகுப்பும்

24 அளுத்கமவுக்கு அப்பாலும்

28 இலங்கை மீண்டும் ஒரு கொலைக்களமாக மாறுமா?

32 அரசாங்கத்தின் மூன்று கடப்பாடுகள்


34 ஈராக்கில் அமெரிக்காவின் புதிய போக்கு

44 ஜாதிக ஹெல உறுமயவின் சியோனிச தந்திரோபாயம்

48 ஊடகச் சுதந்திரத்தின் வரையறைகள்


52 மோடி அரசின் 30 நாட்கள்

56 மோடியின் ஒரு மாத ஆட்சி; தேவையற்ற சர்ச்சைகள்









*Samakalam focuses on issues that affect the lives of people of Sri Lanka, the neighbourhood and the world*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியரிடமிருந்து...

# இனவாதச் சுவாலை

1983 ஜூலையில் தமிழர்களுக்கு எதிராக கட்டவிழ்த்து விடப்பட்டதைப் போன்ற ஒரு இன வன்முறை இப்போது முஸ்லிம்களுக்கு எதிராக நடத்தப்பட்டிருக்கின்றது. களுத்துறை மாவட்டத்தில் முஸ்லிம்கள் அதிகமாக வசிக்கும் அளுத்கம, தர்க்கா நகர், பேருவளை பகுதிகளில் முஸ்லிம்களின் வணக்கத் தலங்கள், வர்த்தக நிலையங்கள், வீடுகள் என்பன தேடி அழிக்கப்பட்டுள்ளன. நான்கு முஸ்லிம்கள் கொல்லப்பட்டிருக்கின்றார்கள். 100 பேர் வரையில் காயமடைந்திருக்கின்றார்கள்.

முஸ்லிம்களுக்கு எதிராக கடந்த சில வருடங்களாக சிங்கள-பௌத்த தேசியவாதிகளால் முன்னெடுக்கப்பட்டு வந்த இனவாதச் செயற்பாடுகளின் உச்சகட்டமாக இந்த வன்முறை இடம்பெற்றிருக்கின்றது. இது நன்கு திட்டமிடப்பட்ட தாக்குதல். அரச தரப்பு இதனை விரைந்து கட்டுப்படுத்துவதற்குத் தவறிவிட்டது என்பது குறித்து கடுமையான விமர்சனங்கள் எழுந்திருக்கின்றன.

இலங்கையைப் பொறுத்தவரையில் சிறுபான்மையினத்தவர்களுக்கு எதிரான செயற்பாடுகள் புதிதல்ல. சுதந்திர இலங்கையின் வரலாறு என்பது சிங்கள இனவாதத்தினதும் அதற்கு எதிரான சிறுபான்மை இனத்தவர்களின் போராட்டங்களினதும் வரலாறாகத்தான் உள்ளது. சிறுபான்மையினத்தவர்கள் மீதான ஒடுக்குமுறைகள் இந்த நாட்டை ஆட்சி செய்த இரு பிரதான கட்சிகளினாலுமே போட்டி போட்டு முன்னெடுக்கப்பட்டது.

விடுதலைப் புலிகளுடனான போர் முடிவுக்கு வந்த பின்னர் சிங்களத் தேசியவாதிகளின் பார்வை முஸ்லிம்களின் பக்கம் திருப்பியுள்ளமையும் நன்கு அவதானிக்கப்பட்டுள்ளது. முஸ்லிம்கள் இலக்கு வைக்கப்பட்டமைக்கு வர்த்தகத் துறையில் அவர்களுடைய கைகள் மேலோங்கியிருப்பதும் ஒரு காரணம். முஸ்லிம்களை இலக்கு வைக்கும் நோக்கிலேயே இனவாத அமைப்புக்கள் பல உருவாக்கப்பட்டன. பொதுபல சேனா இதில் முக்கியமானது. இந்த அமைப்புகளுக்கு உதவியும் ஒத்தாசையும் அரசாங்கத்திற் குள் இருக்கும் செல்வாக்கு மிகு பிரிவினரிடமிருந்து கிடைக்கிறது என்பது ஒன்றும் இரசியமானதல்ல.

அளுத்கம எரிந்துகொண்டிருந்த போது மத முரண்பாடுகளைத் தவிர்ப்பதற்காக என அமைக்கப்பட்ட பொலிஸ் தூங்கிக்கொண்டிருந்தது. இந்த பொலிஸ் பிரிவு அமைக்கப்பட்டபோதே அதற்கு எதிராக பெருமளவு விமர்சனங்கள் முன் வைக்கப்பட்டன. முக்கியமாக இது ஒரு கண்துடைப்பு என்றே ஊடகங்களும் சிறுபான்மையினக் கட்சிகளும் விமர்சித்திருந்தன.

அளுத்கமவில் வன்முறைகள் கட்டவிழ்த்துவிடப்பட்ட போது மத முரண்பாடுகளைத் தடுப்பதற்கான பொலிஸ் பிரிவு செயலிழந்துபோயிருந்தமை அந்த விமர்சனங்கள் உண்மை என்பதை உறுதிப்படுத்துகின்றது. 1983ஆம் ஆண்டு கறுப்பு ஜூலையைப் போலத்தான் இப்போதும் வன்முறையைக் கட்டுப்படுத்துவதற்கு எதனையும் செய்யாத பொலிஸார் வெறுமனே பார்வையாளர்களாகவே இருந்துள்ளார்கள். இது வன்முறைகளுக்கு அவர்களும் துணைபோயுள்ளார்கள் என்பதை வெளிப்படுத்துவதாகவே அமைந்திருக்கின்றது.

சிறுபான்மையின மக்களுக்கு இந்த நாட்டில் எந்தவிதமான உரிமைகளும் இல்லை என்பதை அழுத்தியுரைப்பதாகவே இந்தச் சம்பவங்கள் அமைந்திருக்கின்றன. சிறுபான்மையின மக்கள் அச்சத்துடன் வாழும் நிலை இதனால் உருவாகியிருக்கின்றது. அச்சத்துடன் வாழும் முஸ்லிம் மக்களுக்கு நம்பிக்கையைக் கொடுக்கும் வகையில் அரசாங்கத்தின் செயற்பாடுகள் எதுவும் அமைந்திருக்கவில்லை.

அமைச்சர் பதவிகளை வகிக்கும் முஸ்லிம் தலைவர்களோ பதவிகளில்தான் கவனமாக இருக்கின்றார்களே தவிர, மக்களுக்காக குரல் கொடுக்கத் தயங்குகின்றார்கள். தாம் சார்ந்த மக்களுக்காகக் குரல் கொடுப்பதோ அவர்களுக்காகப் போராடுவதோ தமது அமைச்சர் பதவிகளுக்கு ஆபத்தானதாகிவிடலாம் என்பது அவர்களுடைய அச்சம் போலும். இந்த நிலையில் நம்பிக்கையிந்தவர்களாகவே முஸ்லிம் மக்கள் உள்ளார்கள்.

இந்நாட்டில் முதல் முதலாக முஸ்லிம்களுக்கு எதிராகத்தான் இனக்கலவரம் தூண்டிவிடப்பட்டது. 1815ஆம் ஆண்டில் இந்தக் கலவரம் இடம்பெற்றது. இந்தக்கலவரம் இடம்பெற்று 100 ஆண்டுகள் நிறைவடையும் நிலையில் மீண்டும் முஸ்லிம்கள் இலக்கு வைக்கப்பட்டிருக்கின்றார்கள். ஒரு நூற்றாண்டு காலத்தில் மனித சமூகம் பெருமளவுக்கு முன்னேற்றமடைந்துவிட்டது.

ஆனால், இலங்கையில் இனவாதமும் இனத்துவேசமும் இன்றும் கோலோச்சிக்கொண்டுதான் இருக்கின்றன என்பதை தற்போதைய நிலை உணர்த்துகின்றது. இனத்துவேசம் மேலோங்கும் நிலையில் அபிவிருத்தி சாத்தியமானதல்ல. மீண்டும் மீண்டும் இரத்தக்களரி ஏற்படுவது நாட்டின் ஸ்திரத் தன்மையையும் பாதிக்கும். சிறுபான்மையினரின் போராட்டங்களுக்கும் இது வழிவகுக்கும்.

கடந்த காலப்பாடங்களிலிருந்து கற்றுக்கொள்ள வேண்டிய அரசு இவ்வாறான நிலைமைகளுக்கு இனிமேலும் இடமளிக்கக்கூடாது. வன்முறைகளில் சம்பந்தப்பட்டவர்கள் யாராக இருந்தாலும் சட்டத்தின் முன்பாக நிறுத்தப்பட வேண்டும். இனத்துவேசத்தைத்துண்டும் அமைப்புகளுக்குத் தடை விதிக்கத் தயங்கக்கூடாது.

சட்டத்தையும் ஒழுங்கையும் பாதுகாக்கத் தவறும் பொலிஸார் மீதும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். இவை அனைத்தையும் செய்வதற்கு அரசாங்கம் முன்வரவில்லையென்றால் இந்நாட்டில் இரத்த ஆறு மீண்டும் ஓடுவதைத் தடுப்பதற்கு அரசாங்கம் விருப்பமற்றிருக்கின்றது என்றுதான் கருத வேண்டும். ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடிதங்கள்













## வல்லரசுகளின் போட்டாபோட்டி

மத்திய கிழக்கில் இரு ஜனாதிபதித் தேர்தல்களும் மேற்குலகின் பிரதிபலிப்புகளும் எனும் தலைப்பில் சமகாலத்தின் கடந்த இதழில் செய்தி ஆய்வு ஒன்று வெளியாகியிருந்தது. இதில் சிரிய மற்றும் எகிப்து ஜனாதிபதித் தேர்தல்களின் பெறுபேறுகள் மற்றும் அவற்றின் உண்மையான பிரதிபலிப்புகள் பற்றி ஆராயப்பட்டிருந்தது. அதிலும் சிரிய ஜனாதிபதி அஸாத்தின் வெற்றி பற்றியே இதில் அதிகம் பேசப்பட்டிருக்கிறது. எது எவ்வாறிருப்பினும், அமெரிக்காவும் ரஷ்யாவும் அன்று தங்களது பலம் என்னவென்பதை நிரூபித்துக் காட்டவும் பரஸ்பர ஆத்திரங்களைத் தீர்த்துக்கொள்ளவும் வெளிப்படையாகவே கொரிய மற்றும் வியட்நாம் யுத்தங்களைப் பயன்படுத்தியது போன்று இன்று சிரிய யுத்தம் அதற்கான களமாக அவ்விரு நாடுகளுக்கும் அமைந்திருக்கிறது என்பது மட்டும் உண்மை. ஜனாதிபதி அஸாத்தின் அரச படையினருக்கு ரஷ்யா உதவி வரும் அதே நேரம், அரச படையினருக்கு எதிரான கிளர்ச்சியாளர்களுக்கு அமெரிக்கா உதவியிருந்தமை இதற்கு சிறந்த உதாரணமாகும். ஆனாலும், சிரியாவில் அமெரிக்கா உதவி செய்த கிளர்ச்சியாளர்கள் தற்போது ஈராக்கில் அவர்களுக்கே தலைவலியாகியிருப்பதுவும் இங்கு குறிப்பிடத்தக்கது.

சின்னத்தம்பி சூரியகுமார், யாழ்ப்பாணம்.

## கல்வியும் அரசியலும்

குமார் யதுர்ஷனாவின் கல்வியினால் சிறந்த தலைமைத்துவப் பண்புகளை உத்தரவாதம் செய்ய முடியுமா? என்ற கட்டுரை சிறந்த வாதப் பிரதிவாதங்களுடன் சிந்தனையைத் தூண்டுவதாக அமைந்திருந்தது. 'குடிப்பவர்கள் எல்லாருமே கெட்டவர்களுமல்ல, குடிக்காதவர்கள் அனைவருமே நல்லவர்களுமல்ல' இதே போன்று தான் கல்வி கற்றவர்கள் அனைவரும் காரியவாதிகளுமல்ல கல்வி கற்காதவர்கள் அனைவருமே முட்டாள்களுமல்ல. கல்வித்தகைமை தொடர்பில் சர்ச்சைக்குள்ளான இந்தியாவின் மனித வள மேம்பாட்டுத்துறை அமைச்சரான ஸ்மிருதி இரானி கூறிய எனது செயற்பாடுகளை வைத்து என்னை மதிப்பிடுங்கள்' என்பது போல் கல்வி, பதவி, புலமைகளை மட்டும் வைத்து ஒருவரை மதிப்பிடாது அவரின் செயற்பாடுகளையும் வைத்து மதிப்பிடவேண்டும்.

உஷா புஷ்பராஜா, அவிசாவளை.

## வாசுதேவவின் அரசியல் இலட்சணம்

சமகாலத்தின் கடந்த இதழில் வெளியான வாக்குமூலம் பகுதியில் அமைச்சர் வாசுதேவ நாணயக்காரவின் கூற்றொன்று வெளியாகியிருந்தது. அடுத்த ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்பாக நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சிமுறை குறித்து சர்வஜன வாக்கெடுப்பொன்று நடத்

## ஒரே ஆட்கள்

சமகாலம் சஞ்சிகையில் பிரசுரமாகிற அரசியல் கட்டுரைகள் மிகவும் காத்திரமானவை. ஆனால் எழுதுபவர்கள் அனேகமாக ஆரம்பத்திலிருந்தே ஒரே ஆட்களாக இருக்கிறார்கள். இதனால் ஒரே விதமான கருத்துக்களே தொடர்ச்சியாக வாசகர்கள் மத்தியில் செல்கின்ற ஒரு குறைபாடு இருப்பதாக நான் உணர்கிறேன். இந்த குறைப்பாட்டை ஆசிரியர் குழு கவனத்திலெடுக்கும் என்று நம்புகிறேன்.

பொன்னையா சசிதரன், தெமட்டக்கொட.

விளம்பரங்களுக்கு : தொலைபேசி; 011-7767702, 011-7767703, 011-7322736

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தப்பட வேண்டும் என்ற தனது யோசனைக்கு மக்களினதும் அமைச்சரவை சகாக்களினதும் ஆதரவு இருப்பதாகவும் ஜனாதிபதி ஆட்சிமுறையை ஒழிப்பதற்கு ஆதரவாக பிரசாரம் செய்ய பல அமைச்சர்கள் தயாராக இருப்பதாகவும் அவர் அதில் குறிப்பிட்டிருக்கிறார். ஆனால், நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை ஒழிப்பதாகக் கூறி ஆட்சிக்கு வந்த எந்தவொரு அரசியல்வாதியும் ஆட்சி பீடம் ஏறியதும், அதை ஒழிப்பதற்கு முன்வந்திருக்கவில்லை என்பதே வரலாற்றுச் சான்று. அதற்குப் பதிலாக தங்களது பதவிக்காலத்தை நீடித்துக் கொள்வதிலேயே ஆர்வம் காட்டியிருக்கின்றனர். தற்போதைய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அதை சாத்தியமாக்கியும் கொண்டுள்ளார். ஆனால், சிரேஷ்ட அரசியல்வாதியான வாசுதேவ நாணயக்கார அதே மகிந்த ராஜபக்ஷவின் அரசாங்கத்தின் அமைச்சரவையில் அங்கம் வகிப்பதுடன் மட்டுமல்லாது, ஜனாதிபதியின் பதவிக் காலத்தை நீடிப்பதற்கு ஆதரவாகவும் வாக்களித்து விட்டு இன்னும் பழைய கதைகளையே கூறி வருவதுதான் அபத்தமாக இருக்கிறது.

சுப்பிரமணியம் கமலேஸ்வரன், பருத்தித்துறை.

## நெருக்கடிகளுக்குக் காரணம்

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி பற்றிய இஸெத்ஹுசெய்னின் கட்டுரை அருமை. மோடியை இலங்கை அரசு எவ்வாறு கையாள வேண்டுமென்பதை உதாரணங்களுடன் விளக்கியுள்ளார். ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு ஆலோசனைகள் வழங்குவதற்காக 38 பேர் ஆலோசகர்களாக நியமிக்கப்பட்டுள்ளதாகவும் இவர்களுக்காக வருடாந்தம் கோடிக்கணக்கான ரூபா பணம் செலவிடப்படுவதாகவும், அரசு அண்மையில் பாராளுமன்றத்தில் வெளிப்படுத்தியது. ஆனால், இந்த ஆலோசகர்களினால் நாடு நன்மை பெற்றதாகத் தெரியவில்லை. வெளிநாட்டு இராஜதந்திர சேவைகளில் பல வருடகால நேரடி அனுபவம் கொண்டவரான இஸெத் ஹுசெய்ன் போன்றவர்கள் எல்லாம் ஏன் ஆலோசகர்களாக நியமிக்கப்படவில்லையென்ற கவலை அவரின் கட்டுரையைப்படித்த பின்னர் எழுகின்றது. திறமையானவர்களின் சேவையும் ஆலோசனையும் பெறப்படாததே எமது நாட்டின் இன்றைய நெருக்கடிக்குக் காரணம்.

குபேனி ஞானசேகரம், திருகோணமலை.

## ஒரு சந்தேகம்

பேராசிரியர் ரஜீவ விஜேசிங்கவின் கட்டுரைகள் அனேகமாக வெளியுறவு அமைச்சின் செயற்பாடுகளில் குறைகண்டு பிடிப்பவையாகவும் குறிப்பாக வெளியுறவு அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பிரிஸை கடுமையாக சாடுபவையாகவும் இருப்பதை சமகாலத்தை ஆரம்பகாலத்திலிருந்தே வாசிக்கும் ஒருவன் என்ற வகையில் அவதானிக்கக்கூடியதாக இருக்கிறது. அரசில் வெளியுறவு அமைச்சர் பதவியை விஜேசிங்க எதிர்பார்த்தாரோ என்று சந்தேகிக்க வேண்டியிருக்கிறது.

ராசபுத்திரம் குணேஸ், மண்டூர்.




இருவாரங்களுக்கு ஒருமுறை

ISSN : 2279 - 2031

மலர் 03 இதழ் 01

2014, ஜூலை 01 - 15

A Fortnigtly Tamil News Magazine


எக்ஸ்பிரஸ் நியூஸ் பேப்பர்ஸ் (சிலோன்) (பிரைவேட்) லிமிடெட்
185, கிராண்ட்பாஸ் ரோட்,
கொழும்பு-14,
இலங்கை.
தொலைபேசி : +94 11 7322700
ஈ-மெயில்: samakalam@expressnewspapers.lk

**ஆசிரியர்**
வீரகத்தி தனபாலசிங்கம்
(e-mail : suabith@gmail.com)

**உதவி ஆசிரியர்**
தெட்சணாமூர்த்தி மதுசூதனன்

**பக்க வடிவமைப்பு**
எம்.ஸ்ரீதரகுமார்

**ஒப்பு நோக்கல்**
என்.லெப்ரின் ராஜ்



ஆட்கள் உண்மையில் என்ன நினைக்கிறார்கள் என்பதைத் தெரிந்து கொள்ள, அவர்கள் என்ன சொல்கிறார்கள் என்பதில் அல்ல அவர்கள் என்ன செய்கிறார்கள் என்பதிலேயே கவனம் செலுத்துங்கள்.


- ஜோர்ஜ் சண்டயானா

வாசகர் கடிதங்களை அனுப்ப வேண்டிய முகவரி:
ஆசிரியர்,
**சமகாலம்**
185, கிராண்ட்பாஸ் ரோட்,
கொழும்பு -14.
இலங்கை.
மின்னஞ்சல் : samakalam@expressnewspapers.lk

பெக்ஸ்; 011 7778752, 011-7767704, 011-2327827,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாக்குமூலம்....



அரசாங்கத்தில் நாங்கள் தொடர்ந்தும் தொங்கிக் கொண்டிருப்பதில் ஏதாவது அர்த்தம் இருக்கிறதா என்று அளுத்கமவில் முஸ்லிம் சமூகத்தினர் என்னைக் கேட்டார்கள். அரசாங்கம் சர்வதேச நெருக்குதல்களை எதிர்நோக்குகின்ற வேளையில் நாம் அதிலிருந்து வெளியேறமாட்டோம். ஆனால், சட்டம், ஒழுங்கைப் பேணுவதற்குப் பொறுப்பானவர்கள் செயற்படாமல் இருக்கின்றதை எம்மால் பொறுத்துக்கொள்ளவும் முடியாமல் இருக்கிறது.

**நீதியமைச்சர் ரவூப் ஹக்கீம்**



பிரச்சினையொன்று இருப்பதனால்தான் நாம் குரல்கொடுக்கிறோம். என்னைக் கைது செய்வதன் மூலம் அல்லது எனக்கு களங்கம் கற்பிப்பதன் மூலம் அல்லது என்னைக் கொலை செய்வதன் மூலம் அந்தப் பிரச்சினையைத் தீர்த்து வைக்க முடியுமாக இருந்தால் இவையெல்லாவற்றுக்கும் முகங்கொடுக்க நான் தயாராயிருக்கின்றேன்.

**பொதுபலசேனா பொதுச்செயலாளர் கலபொட அத்த ஞானசார தேரர்**



பொதுபலசேனாவுக்கும் அதன் காப்டன் கலபொட அத்த ஞானசார தேரருக்கும் எதிராகவே முதலில் நடவடிக்கை எடுக்க வேண்டும்.கட்டவிழ்த்துவிடப்பட்டிருக்கின்ற அநியாயங்கள் சகலதினதும் முகமாக அவரே விளங்குகிறார். ஞானசார தேரரையும் அவரை நெருக்கமாக ஆதரிப்பவர்களையும் உடனே கைது செய்ய வேண்டும்.


**அமைச்சர் வாசுதேவ நாணயக்கார**

அளுத்கமவிலும் பேருவளையிலும் இடம்பெற்ற வன்முறைகள் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியினால் அரசியல் அனுகூலங்களுக்காகத் தூண்டிவிடப்பட்டவையாகும். ஜனாதிபதித் தேர்தல் பிரசாரங்களை ஆளும் கட்சி அளுத்கமவில் இருந்து ஏற்கனவே தொடங்கிவிட்டது.

இனவாத வன்முறைகளுக்கு அரசாங்கமே பொறுப்பு. அமெரிக்காவோ அல்லது சவூதிஅரேபியாவோ அல்ல.




**ஐ.தே.க.எம்.பி.மங்கள சமரவீர**



ஒரு பௌத்த பிக்குவுக்குப் பொருத்தமான முறையில் கலபொட அத்த ஞானசாரதேரர் நடந்துகொள்ள வேண்டும். உணர்ச்சிவசமாகவும் ஆத்திரமூட்டும் வகையிலும் உரையாற்றி இனங்கள் மத்தியில் பதற்ற நிலையை அவர் தோற்றுவிக்கக்கூடாது. அவரின் நடத்தையும் பேச்சுகளும் பௌத்த மதகுருவுக்குப் பொருத்தமானதாக இல்லை. பௌத்தமதம் என்பது அகிம்சை, சமாதானம் மற்றும் இரக்கத்தை பரப்புவதாகும்.

**பொதுபலசேனாவின் தலைவர் கிராம விமலஜோதி தேரர்**

நான் விரைவில் பாராளுமன்ற உறுப்பினர் பதவியை இராஜினாமா செய்யப்போகிறேன். இனவெறியைக் கட்டுப்படுத்த எதையும் எம்மால் செய்ய முடியவில்லையென்றால், பாராளுமன்ற உறுப்பினராக இருப்பதில் எந்த அர்த்தமும் இல்லை.

**ஐக்கிய தேசியக்கட்சி எம்.பி.பாலித தேவரப்பெரும**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தி ஆய்வு

# ஊடக சுதந்திரத்திற்கு எதிரான மோசமான தாக்குதல்

எகிப்தில் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டிருக்கும் அல்ஜசீரா தொலைக்காட்சி சேவையின் மூன்று ஊடகவியலாளர்களும் விடுவிக்கப்படவேண்டுமென்று கோரிக்கை விடுத்து மனித உரிமைகள் மற்றும் அடிப்படைச் சுதந்திரங்களின் ஆதரவாளர்கள் ஒருமைப்பாட்டை வெளிக்காட்டியிருக்கிறார்கள்.



பாஃமி, பஹிர், கிரெஸ்ட்

முஸ்லிம் சகோதரத்துவ இயக்கத்துக்கு ஆதரவாகச் செயற்பட்டார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரிலேயே எகிப்திய அதிகாரிகள் முஹமட் அடெல் பாஃமி, பஹிர் முஹமட் மற்றும் பீட்டர் கிரெஸ்ட் என்ற ஊடகவியலாளர்களை கடந்த டிசம்பரில் கைதுசெய்து சிறையிலடைத்தனர். முஸ்லிம் சகோதரத்துவ இயக்கம் ஒரு பயங்கரவாத இயக்கமென்று பிரகடனப்படுத்தப்பட்ட உடனடியாகவே இக்கைதுகள் மேற்கொள்ளப்பட்டன. 'பொய்யான செய்திகளை' வெளியிட்டனர் என்பது இந்த ஊடகவியலாளர்களுக்கு எதிரான பிரதான குற்றச்சாட்டு. ஜனாதிபதி முஹமட் முர்சியை இராணுவம் அதிகாரத்திலிருந்து தூக்கியெறிந்ததற்குப் பிறகு எகிப்திய நிலைவரங்கள் குறித்து இவர்கள் செய்தி சேகரித்துவந்தவர்கள்.

அவுஸ்திரேலியப் பிரஜையான கிரெஸ்ட் முன்னர் பிரிட்டிஷ் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்துக்காகப் பணியாற்றியவர். சி.என்.என்.னுக்காக முன்னர் பணியாற்றிய பாஃமி அல்ஜசீரா தொலைக்காட்சி சேவையின் கெய்ரோ பணியக தலைமை அதிகாரியாவார்.

கடந்த மாதம் 15 ஆம் திகதி கெய்ரோ நீதிமன்றமொன்று இவர்கள் இருவருக்கும் 7 வருடச் சிறைத் தண்டனை விதித்தது. பஹிர் முஹமட்டுக்கு 'ஆயுதம்' வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் மேலதிகமாக மூன்று வருட சிறைத் தண்டனையும் விதிக்கப்பட்டது. (ஆர்ப்பாட்டமொன்றின்போது செய்தி சேகரிக்கச் சென்ற பஹிர் நிலத்தில் கிடந்த வெற்றுத்தோட்டா ஒன்றை எடுத்து வைத்திருந்தார்)

வேறு மூன்று ஊடகவியலாளர்களுக்கு அவர்கள் நீதிமன்றில் சமூகமளிக்காத நிலையிலேயே 10 வருட சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. அல்ஜசீரா அராபிக் சேவையின் ஊடகவியலாளரான அப்துல்லா எல் ஷாமி 2013 ஆம் ஆண்டிலிருந்து சிறையில் அடைக்கப்பட்டிருந்தார். அவர் மூன்று மாதங்களுக்கும் மேலாக உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டதையடுத்து மருத்துவ பரிசோதனைக்குப் பிறகு கடந்த மே மாதம் வெளிக்காட்டப்படாத இடமொன்றுக்கு மாற்றப்பட்டார்.

இந்த ஊடகவியலாளர்கள் சகலருக்கும் எதிரான சான்றாக வழக்குத் தொடுநர் தரப்பினால் முன்வைக்கப்பட்ட சான்றுகளில் எகிப்தின் பல்வேறுபட்ட அரசியல் கட்சிகளையும் அமைப்புகளையும் சேர்ந்த அரசியல் வாதிகளுடனான இவர்களின் நேர்காணல்களின் வீடியோக்களும் அடங்கும். முஸ்லிம் சகோதரத்துவ இயக்கத்துக்கு சார்பானமுறையில் இவர்கள் செய்திகளை வெளியிட்டார்கள் என்ற குற்றச்சாட்டை நிரூபிக்கக் கூடியதாக அந்த வீடியோக்களில் எந்தப் பதிவும் இல்லை. வேறு தொலைக்காட்சி அலைவரிசைகளில் இருந்து எடுக்கப்பட்ட வீடியோ பதிவுகளும் இவற்றில் உள்ளடக்கப்பட்டிருப்பது முக்கியமாகக் கவனிக்கப்படவேண்டியதாகும்.

ஊடகவியலாளர்களுக்காக ஆஜரான சட்டத்தரணிகளினால் வீடியோக்கள் சகலதையும் பார்க்கக்கூடியதாகவும் இருக்கவில்லை. சில வீடியோக்களை வழக்குத் தொடுநர் தரப்பு நீதிபதிக்கு மாத்திரமே காண்பித்ததாகக் கூறப்படுகிறது.

நீதிமன்றத்தின் தீர்ப்பு ஊடக சுதந்திரத்துக்கு எதிரான பாரதூரமான தாக்குதலாகும். எகிப்தின் குழப்ப நிலையைப் பற்றி செய்தி சேகரிக்கும் ஊடகவியலாளர்களைப் பயமுறுத்துவதற்காகவே இத்தகைய தீர்ப்பு வழங்கப்பட்டிருக்கிறது என்பது தெளிவானது.

(23ஆம் பக்கம் பார்க்க...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# இரண்டு ஆண்டு நீட்சியில் சமகாலம்

## ஒரு நீள் முகப்பார்வை

**விளையாட்டிலிருந்து சினிமாவரை அனைத்தும் அரசியல் உட்கிடக்கை கொண்டவை. அரசியல் தோயாத பண்பாட்டுக்கூறுகள் எதுவும் இல்லை. சிலவற்றில் அரசியல் வெளித்துலங்கும். சிலவற்றில் மறைந்து நிற்கும். அரசியலில் பரந்த கவிப்பை பெரும்பாக நிலையிலும் நுண்பாக நிலையிலும் 'சமகாலம்' உள்ளடக்கி நிற்கிறது.**

போருக்குப் பிந்திய அறிகையாழம் மிக்க கருத்தாடல்களை முன்னெடுக்கும் இதழ்களுள் 'சமகாலம்' தனித்துவமானது. பொருள் பொதிந்த கருத்து வினைப்பாடுகள் (DISCOURSES) வாசிப்பு நிலையில் மட்டுமன்றி, சமூக நிலையிலும் முக்கியத்துவம் பெறுகின்றன. ஒடுங்கிய உணர்ச்சி நிலையில் இருந்து விடுபட்டு, அகன்ற அறிகைத் தளத்தை நோக்கி நகர்ந்து, ஆக்கபூர்வமான செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டிய சமூக எதிர்பார்ப்பை நிறைவிப்பதற்கும் அவை துணை நிற்கின்றன.

இலங்கை அரசியல், பிராந்திய அரசியல், உலக அரசியல் ஆகியவை ஒன்றுடன் ஒன்று தொடர்புபட்டும் இடைவினை கொண்டுமுள்ளன. அவை அனைத்தையும் ஒருங்கே புலக்காட்சி கொள்ளும் அமைப்பியல் வலுவுடன் 'சமகாலம்' கட்டமைப்புச் செய்யப்பட்டுள்ளது.

விளையாட்டிலிருந்து சினிமா வரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பேராசிரியர் சபா ஜெயராசா

அனைத்தும் அரசியல் உட்கிடக்கை கொண்டவை. அரசியல் தோயாத பண்பாட்டுக் கூறுகள் எதுவுமில்லை. சிலவற்றில் அரசியல் வெளித்துலங்கும். சிலவற்றில் மறைந்து நிற்கும். அரசியலின் பரந்த கவிப்பை பெரும்பாக நிலையிலும் நுண்பாக நிலையிலும் 'சமகாலம்' உள்ளடக்கி நிற்கின்றது.

சமகாலத்தின் ஆசிரியர் தலையங்கம் அல்லது ஆசிரியரின் எடுத்துரைப்பு, அறிகை நிலையில் பகுப்பாய்வாகவும், பிரச்சினைகள் நிலைப்பட்ட புதிய புலக்காட்சியின் உருவாக்கலாயும், மாற்றுச் சிந்தனைத் தளத்துக்கோ, புதிய சிந்தனைத் தளத்துக்கோ, வாசகரைப் பெயர்த்துச் செல்வதாயும் அமைந்துள்ளது.

ஆசிரியர் தலையங்கத்துக்கு இருக்க வேண்டியதான கருத்து நிலைத்துணிவுக்கு ஓர் எடுத்துக்காட்டு வருமாறு;

***'சிங்கள அரசியல் சமுதாயம் சிறுபான்மை இனத்தவர்களினதும், மதத்தவர்களினதும் நியாயபூர்வமான அபிலாசைகளுக்கு எதிரான அதன் தவறான கொள்கைகளையும் செயற்பாடுகளையும் தென்னிலங்கை மக்கள் மத்தியில் நியாயப்படுத்துவதற்கு மகாசங்கத்தினரைக் காலங்காலமாகப் பயன்படுத்தியதன் விளைவே பொதுபலசேனா போன்ற அமைப்புகளின் தோற்றமும் அடாவடித்தனமான செயற்பாடுகளுமாகும்'.***

**(மே 1-15,2014)**

'வாக்குமூலம்' என்ற இதழ் பகுதி கருத்துகளின் முன்னீடாக மட்டுமன்றி, குறித்த ஆளுமைகளின் கூர்ந்த பரிமாணத்தையும் வெளிப்படுத்தும் விதத்தில்; அமைப்பிலே குறுகலாகவும், கருத்தில் நெருடலாகவும் கட்டுமை செய்யப்படுவதில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. வகை மாதிரிக்கு ஓர் எடுத்துக்காட்டு வருமாறு;

***'அண்மையில் வெலிவேரியாவில் இடம்பெற்ற கொலைகள் தொடர்பாகவும் அரசாங்க அனுசரணையுடனான பயங்கரவாதம் தொடர்பாகவும் சர்வதேச விசாரணை வேண்டுமென்று கேட்க நாம் நிர்ப்பந்திக்கப்பட்டோம். ஏனென்றால், இதுவரையான உள்நாட்டு விசாரணை எதுவுமே பயனைத்தரவில்லை'***

**திஸ்ஸ அத்தநாயக்க எம்.பி**

***(2013-ஆகஸ்ட், 16-30)***

'செய்திவாசிப்பு' என்பது ஒரு தொடர் செயல்முறை, அதன் அடுத்தகட்ட நீட்சியாக அமைவது செய்தி ஆய்வு. செய்தி என்பது வெறும் தகவலாகவே அமையும். தகவலில் இருந்து அறிவை உருவாக்கிக்கொள்ள ஆய்வுதுணை செய்யும். செய்தி ஆய்வின் பிரதான இலக்கு கற்றுக்கொள்ளல் (TO LEARN) என்பதாகும். பேச்சு வழக்கில் அது படிப்பினை என்று குறிப்பிடப்படும்.

செய்தி ஆய்வின் வழியாகத் தரப்படும் படிப்பினை ஒன்றின் பதிவு வருமாறு,

***'அரச அதிகாரம் அதிகரிக்கும் போக்கையும், தனிப்பட்டவர்களின் விவகாரங்களில் அரச அதிகாரத்தின் ஊடுருவல் தீவிரமடையும் போக்கையும் எங்குமே இன்று காணக்கூடியதாக இருப்பதால், இந்த விவகாரம் அமெரிக்காவுக்கு மாத்திரமல்ல உலக நாடுகள் சகலவற்றுக்குமே பொருத்தமான ஒன்றாகும்.'***

***செய்தி ஆய்வு, சரியான தருணத்தில் கொடுத்த விருது (2014 மே 1-15)***

போருக்குப் பிந்திய உள்நாட்டு அரசியல் தொடர்பான அவதானிப்புகளும் அவை தொடர்பான கருத்து வினைப்பாடுகளும் போரின் வடுவிலிருந்து மீண்டெழுவதற்கான கருத்து வலுவை உருவாக்கிக் கொள்வதற்குத் துணை நிற்கும் குறுகிய அரசியல் இலாபங்களைக் கருத்திலே கொள்ளாது அறிகை நிலையில் சமூக நீதியையும் நடப்பியலையும் வலியுறுத்தும் பன்முகச் சிந்தனைகள் உள்நாட்டு அரசியல் பிரிவில் இடம்பெற்றுள்ளன. ஆனால் அவை அனைத்தும் ஒரே சமநிலைப்பட்டவை என்று கூற முடியாது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




சமகாலத்தைப் பொருத்தவரை அது வளரும் நிலையிலுள்ள வாசகருக்கும் வளர்ந்த நிலையிலுள்ள வாசகர்களுக்கும் ஈடுகொடுக் கக்கூடிய வகையிலும் கருத்துகளின் ஊடாக அறைகூவல் விடுக்கக்கூடிய வகையிலும் அதன் செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றது

குசல்பெரேரா, கிஷாலி பின்ரோ ஜெயவர்தன, குமார் டேவிட், கலாநிதி தயான் ஜெயதிலக, சுமணசிறி லியண கே, ஹரிம்பீரிஸ், கலாநிதி ஜெகான் பெரேரா, எம்.ஏ. சுமந் திரன், ராஜன் பிலிப்ஸ், கலாநிதி பாக்கியசோதி சரவணமுத்து, லக்சிறி பெர்னான்டோ, பேராசிரியர் சி.சிவசேகரம், முதலியோர் தத்தமது கருத்தியல் தளங்க ளில் நின்று சமூக நீதியை அணுகியுள்ளனர். அவை பன்மை நிலை வாசிப்புக்கு இடமளிப்பதுடன் ஒப்பீட்டு நிலையில் அவர்களின் கருத்தளிக்கையை உசாவும் வாய்ப்பையும் வாசிப்பு நிலையில் ஏற்படுத்தியுள்ளது.

எழுத்தறிவின் விரிவாக்கமும் செய்திகளோடு வாழ வேண்டிய வாழ்க்கையும் எழுத்து வழியான வாசிப்பி னூடாக நிகழும் அறிவுப்பெருக்கமும் உயர்நிலை வாசிப் பைத் தூண்டிவருகின்றன.

ஆரம்பநிலை எழுத்தறிவுடன் ஆரம்பநிலை வாசிப்பு வளர்ச்சியடையத் தொடங்கும். தமிழகத்தில் 'தினத்தந்தி' நாளிதழ் ஆரம்பநிலை வாசகரைக் குவியப்படுத்தி முத லில் உருவாக்கப்பட்டது. கல்வியின் படிப்படியான வளர்ச்சி, வாசிப்பு மட்டங்களைப் படிப்படியாக உயர்த் திச் செல்லும். வளர்ச்சியடைந்த நாடுகளின் நாளிதழ்கள் உயர்நிலை வாசகரைப் பெருமளவிற் குவியப்படுத்தியே வெளியிடப்படுகின்றன.

இலங்கை உள்ளிட்ட வளர்முக நாடுகளின் நாளிதழ்கள் ஆரம்பநிலை வாசகரையும், உயர்நிலை வாசகரையும் ஒரே நேரத்தில் திருப்திப்படுத்த வேண்டியுள்ளன. அது மிகவும் கடினமான பணி.

'சமகால'த்தைப் பொறுத்தவரை அது வளரும் நிலை யில் உள்ள வாசகருக்கும் வளர்ந்த நிலையில் உள்ள வாச கருக்கும் ஈடுகொடுக்கக்கூடிய வகையிலும், கருத்துகளி னூடாக அறைகூவல் விடுக்கக்கூடிய வகையிலும், தனது செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றது.

அண்மைக்காலத்தைய வாசிப்பு உளவியலில் 'வாசிப்பு இயலுமை' (READABILITY) என்ற கருத்து முன்வைக் கப்பட்டுள்ளது. இரண்டு காரணிகளுள் வாசிப்பு இய லுமை தங்கியுள்ளது. ஒன்று வாசிப்பவரின் அறிவுத்தளம் உள்ளிட்ட இயல்பு. மற்றையது வாசிக்கப்படும் பொரு ளின் இயல்பு. வாசிக்கப்படும் பொருள் தர நிலையில் உயர்ந்ததாகவும், அளிக்கை நிலையில் மேம்பட்டதாக வும் இருத்தல் வாசிப்பு இயலுமைக்கு விசையூட்டுவதாக இருக்கும். 'சமகாலம்' உள்ளடக்கத்தர நிலையிலும், மொழி அளிக்கை நிலையிலும் அச்சு அளிக்கை நிலையி லும் ஊன்றிய கவனம் செலுத்துவதாகவுள்ளது. அதில் பயன்படுத்தப்படும் எண்ணிம அச்சுக்கலை நுட்பமும் தளக்கோலமும் (LAYOUT) அளிக்கை நிலைக்கவர்ச்சி க்கு வலுவூட்டுகின்றன.

சமகாலத்தின் விருந்தினர் பக்கம் ஆளுமைகளின் கருத் துகளை அறிபரவல் செய்வதன் வாயிலான கருத்துப் பிரதிபலிப்புகளுக்கு இடமளித்தது. அவ்வாறே உள் நாட்டு அரசியற் பக்கங்கள் விரிந்த கருத்து வினைப்பாடு களுக்கும் அவற்றினூடான எண்ணக்கருத்தெளிவுக்கும் இடமளிக்கின்றன. உள்நாட்டு அரசியற்பக்கங்கள் மேற் பரப்பு அரசியலில் இருந்து அதன் ஆழங்களைக் கண்ட றியும் நீட்சிகளுக்கும் இடமளிக்கின்றன. அதன் இயல் பைக் காட்டும் ஓர் 'ஒளிக்குவிப்பு' (HIGHLIGHT) வரு மாறு;

***'அமெரிக்கர்களின் பிரதான அக்கறைகளில் ஒன் றாக மனித உரிமைகள் இருக்கின்ற போதிலும் இலங்கை மீதான அமெரிக்காவின் பேரம் வெறு மனே மனித உரிமைகள் பரப்பை மாத்திரம் மைய மாகக் கொண்டதல்ல'***

***லக்சிறி பெர்னான்டோ,***
***(2014 பெப்ரவரி, 16-28)***

உள்நாட்டு அரசியற் பக்கங்கள் நிலைவரங்களின் அறி பரவலாக மட்டுமன்றி அவற்றை எழுதுவோரின் அரசி யல் நனைவுகளாகவும் உள்ளன. அரசியல் எழுத்தாக்கங் களில் அத்தகைய ஒருநிலை தவிர்க்க முடியாததாகும். 'நடுவுநிலைமை' என்பது 'பக்கம் சாயும் இழுவிசை கொண்டது' என்று அரசியலிலே குறிப்பிடப்படும்.

சமகாலத்தினால் அவ்வப்போது எழுப்பப்படும் மனிதா பிமானப் பிரச்சினைகள் போரின் பின்னரான விளைவுக ளையும் மனிதாபிமானத் தேடல்களையும் உள்ளடக்கமா கக் கொண்டுள்ளன. அவ்வகையில் அ.மார்க்ஸ் எழுதிய கட்டுரைகள் முக்கியத்துவம் பெறுகின்றன.

வாசிப்புக்கல்வியில் அண்மைக்காலமாக முன்வைக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**மாறிவரும் சமூக நிலைவரங்கள் எதிர்பாராத தாக்கங்களையும் நெருக்கடிகளையும் உருவாக்கிவரும் நிலையில் வாசிப்பை பலம்மிக்க அரணாக்கக்கையாளும் உலக நிலைவரம் தோற்றம் பெற்று வருகிறது. அத்தகைய சூழலுக்கு ஈடுகொடுக்கக்கூடிய வகையில் தமிழில் வெளிவரும் இதழ்களில் சமகாலம் தனித்துவமானது**

கப்படும் ஒரு சிறப்பு எண்ணக்கரு 'மாற்றத்துக்கான வாசிப்பு' என்பதாகும். சமூக நிலைவரங்கள் தொடர்ந்து வேகமாகமாறிவரும் சூழலில் 'மாற்றங்களை முகாமை செய்தல்' (CHANGE MANAGEMENT) மாற்றத்துக்கான வாசிப்பு முதலாம் கருத்து வடிவங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. அறிவும் மாற்றங்களும் வேகமாக வளர்ச்சியடையத் தொடங்கியுள்ளன. அந்நிலையில் உணர்வுபூர்வமான வாசகரது செயற்பாடுகள் இருநிலைகளில் மேலெழத்தொடங்கியுள்ளன.

1. புதிய அறிவுக் கோலங்களை உள்வாங்கிக் கொள்வதற்கான வாசிப்பு. அதாவது, அறிவு நிலையில் ஒருவர் 'காலாவதியானவராக' இருப்பதைத் தடுப்பதற்கான வாசிப்பு

2. எதிர்மறையான சமூக இயல்புகளை மாற்றியமைப்பதற்குரிய வலுவை முன்னெடுக்கும் வாசிப்பு.

மாறிவரும் சமூக நிலைவரங்கள் எதிர்பாராத தாக்கங்களையும், நெருக்கடிகளையும் நிச்சயமற்ற தன்மைளையும் உருவாக்கி வரும் நிலையில், வாசிப்பைப் பலம் மிக்க அரணாகக் கையாளும் உலக நிலைவரம் தோற்றம் பெற்றுவருகிறது. அவற்றுக்கு ஈடுகொடுக்கக்கூடிய அச்சு நூற்பரவல்களும் இலத்திரன் நூற்பரவலும் ஏற்படத் தொடங்கியுள்ளன. அத்தகைய சூழலுக்கு ஈடுகொடுக்கக் கூடிய வகையில் தமிழில் வெளிவரும் ஆக்கங்களுள் 'சமகாலம்' தனித்துவமானது.

உலக அரசியல் தொடர்பான கட்டுரைகள், தகவல், பகுப்பாய்வு, மதிப்பீடு ஆகியவை கொண்ட திரட்சியுடன் எழுதப்படுகின்றன. பெரும்பாலான கட்டுரைகள் மூல மொழியாகிய ஆங்கிலத்திலிருந்து இலக்குமொழியாக தமிழுக்குத் தரப்படுகின்றன. ஆங்கிலத்தில் கனதியான சொல்லாடல்களைக் கொண்ட கட்டுரைகளை எளிமைப் படுத்தி வெளியிட்டால், மூலமொழியின் கனதி, தமிழில் இழக்கப்பட்டுவிடும். கனதியானவற்றைக் கனதியாகவே காட்டும் சமகாலத்தின் முயற்சி ஒரு வகையில் 'புலமை நேர்மை'க்கு மதிப்பளிப்பதாகவுள்ளது.

உலகமயமாக்கல், திறந்த பொருளாதார நடவடிக்கைகள், பன்னாட்டு நிறுவனங்களின் வளர்ச்சி, உலகளாவிய சந்தைகளை உருவாக்குவதில் பல்தேசிய நிறுவனங்கள் மேற்கொண்டுவரும் நடவடிக்கைகள், ஆயுதப் போட்டி, சூழல் விரைந்து மாசடைதல், தகவல் தொடர்பாடலின் பிரவாகம் முதலாம் செயற்பாடுகளில் இருந்து சர்வதேச அரசியலைப் பிரித்து நோக்க முடியாது என்ற பிரக்ஞை ஊட்டலை வெளியிடப்படும் கட்டுரைகள் வாயிலாக 'சமகாலம்' அறிகை வலுவூட்டிவந்துள்ளது. அது ஒருவகையில் ஆசிரியரின் கட்டுரைத் தெரிவுடன் சம்பந்தப்பட்ட விடயமாகின்றது.

சர்வதேச அரசியல் நகர்வுகளுக்குப் பின்னால் பொருளாதார நகர்வுகளும் இராணுவ நகர்வுகளும் நிகழ்ந்து கொண்டிருக்கும் நிலையில் சர்வதேச அரசியல் பற்றிய வாசிப்பு முக்கியத்துவம் பெறத் தொடங்கியுள்ளது. நாளிதழ்களும் வார இதழ்களும், உலகை நோக்கும் பருவ இதழ்களும் சர்வதேச அரசியலுக்கு வழங்கப்படும் முக்கியத்துவத்தை அதிகரிக்கத் தொடங்கியுள்ளன.

தமது ஆழ்ந்துபரந்த வாசிப்பினூடாக மார்க்ஸ், ஜெயமோகன், பேராசிரியர் சிவசேகரம் முதலியோர் எழுதும் கட்டுரைகள் முக்கியமானவை. இன்றைய சூழலில் ஆழ்ந்து நோக்கும் விடயப்பரப்புகள் முக்கியமானவை. மலினமான பிரசங்க மரபுகளில் இருந்து மீண்டெழ வேண்டியதேவை எழுந்துள்ளது. தமிழில் இருக்கும் சிந்தனைகளே போதும் புதியவை வேண்டாமென்ற கிணற்றுத்தவளை மனோபாவமும் அவ்வப்போது பட்டிமன்றுங்களில் விதைக்கப்பட்டு வரும் சூழலில், 'சமகாலம்' முன்வைக்கும் மாற்றுச்சிந்தனைகளும் புத்தெழற் சிந்தனைகளும் நவீன உலக அறிவோடு இணங்கிச் செல்வதற்குத் துணை செய்கின்றன.

புதிய கருத்துகளோடு சங்கமித்தல் எத்துணை முக்கியமானதோ அத்துணை முக்கியமானது, அவை தொடர்பான வினாக்களை எழுப்புதல். இந்த விடயம் தொடர்பாக ஒக்ஸ்போட் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பேராசிரியர் சுசான் கிறீன் பீல்டு ஒரு முக்கியமான கருத்தை முன்வைத்துள்ளார்.

ஆழ்ந்த சிந்தனையை வளர்த்தல், ஆழ்ந்த வினாக்களை எழுப்புதல் முதலியவற்றுக்கு நவீன இலத்திரனியல் 'களிப்பெருகை' (EUPHORIA) சமூகத்தில் குறைந்தளவு வாய்ப்புகளே காணப்படுவதாகக் குறிப்பிட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**தமிழில் கனதியான இதழை வெளியிடுதல் மிகவும் கடினமான பணி. கனதியான விடயங்களைக் கையாண்டு எழுதும் எழுத்தாளர்களும் எமது சூழலில் குறைவு இத்தகைய முரண்பாடுகளுக்கு மத்தியில் சமகாலம் தொடர்ந்து வெளிவந்துகொண்டிருப்பது துணிச்சல் மிக்க ஒரு செயல்முனைப்பு**

டுள்ளார்.

ஆழ்ந்த வினாக்களை எழுப்புதல், மனித முன்னேற்றத் துக்கும் சமூக முன்னேற்றத்துக்குமுரிய அடிப்படையான நிபந்தனையாகும். நேர்காணல்கள், திறப்புப் பக்கத்தில் இடம்பெறும் முழுப்பக்கப் படத்தோடு இணைந்த கருத்து கள், கடைசிப்பக்கக்கருத்துப் பதிவு, கட்டுரைகள் வழி யாக எழும் ஐயங்களும், கருத்துப் பொறிகளும், ஆழ்ந்த சிந்தனைகளுக்கு வழியமைக்கின்றன.

இச்சந்தர்ப்பத்தில் வாசகருக்குரிய 'அறிகைப் பொறுப்பு' (COGNITIVE RESPONSIBILITY) முக்கியமானது. வாசகரைக் கொடுப்பதை வாங்கும் செயலூக்கமற்ற நுகர்ச் சியாளராக மாற்றும் செயற்பாடுகளை வர்த்தக சஞ்சிகை ளும் வெகுஜன கவர்ச்சி ஊடகங்களும் பெருமளவில் மேற்கொண்டு வருகின்றன.

வாசகரைச் செயலூக்கம் (ACTIVE) உள்ளவர்களாக மாற்றுவதில் இதழ்களுக்கும் குறிப்பிட்டளவு பங்குண்டு என்ற பிரக்ஞையையும் 'சமகாலம்' வெளிப்படுத்துதல் சுட்டிக்காட்டப்பட வேண்டியுள்ளது.

இதழியலிலே, 'இதழ் உபாயம்' அல்லது 'இதழ் தந்தி ரோபாயம்' என்ற விடயம் விதந்து குறிப்பிடப்படுதல் உண்டு. ஓர் இதழின் தனித்துவத்தை அடையாளப்படுத்து வதற்கு அந்த இதழ் பயன்படுத்தும் இதழ் உபாயமும் ஓர் அளவுகோலாகின்றது. பிற இதழ்களிலே வெளிவராத ஒரு செய்தியை அல்லது ஒரு கருத்தை, அல்லது ஒரு பட விளக்கத்தை வெளியிடுதல் இதழ் உபாயங்களுள் ஒன்றா கின்றது. அத்தகைய ஒரு பரிமாணத்துடனும் 'சமகாலம்' இயங்கி வருகின்றது.

எண்ணக்கருக்களை அல்லது கருத்துருவங்களைத் தெளிவுபடுத்துதல், வளர்ந்துவரும் அறிவுச் சூழலில் முக்கியத்துவம் பெறும் ஒரு செயற்பாடாகின்றது. அறிவு என்பது 'கருத்துருவங்களின் திரட்டல்' என்ற விளக்கமும் உண்டு. கருத்துருவங்களை வழுவின்றித் தருதல் அத னோடிணைந்த செயற்பாடாகின்றது. உலகப் புகழ்பெற்ற இதழ்களுள் ஒன்றாகிய 'ரீடேர்ஸ் டைஜஸ்ட்', 'உங்கள் சொல்லாற்றலை வளர்த்துச் செல்லுங்கள்' என்ற தொடரை பல தசாப்தங்களாக வெளியிட்டுவருகின்றது. அதுவும் எண்ணக்கரு உருவாக்கலோடும் வளர்ச்சியோடும் தொடர்புடைய ஒரு செயற்பாடு.

'சமகாலம்' இதழின் கடைசிப்பக்கம், ஒருவரது அறிவோடும் அனுபவத்தோடும் இணைந்த கருத்துருவங் களின் பதிவுகளாகவும், பிரச்சினைகளோடு இணைந்த கருத்துகளின் கட்டமைப்பை உள்ளடக்கியதாகவும், வடி வம் பெற்றுவருதல் குறிப்பிடத்தக்கது.

சமகாலத்தின் அளிக்கை விரிவில், உடல் நலம், உள நலம், சூழலியல், அறிவியல், சினிமா, ஆளுமைகள், நூல் மதிப்பீடு என்ற பரவல் இடம்பெற்றுவருதல் பல பரிமாண வாசிப்புக்கு இட்டுச் செல்கின்றது. அளிக்கை என்பது ஒரு பரிமாணத்தில் இருந்தும் தட்டை (FLAT) யான பரிமாணத்திலிருந்தும் விடுவிக்கப்படுதல் இதழின் பலத் துக்கும், வாசகர் ஈடுபாட்டுக்கும் முக்கியமானவை. அதி லும் சமகாலத்தின் ஊன்றிய கவனம் குறிப்பிடத்தக்கது. தமிழில் கனதியான இதழை வெளியிடுதல் மிகவும் கடின மான பணி. கனிதியான விடயங்களை வாசிக்கும் பழக் கத்தில் படிப்படியான முன்னேற்றம் ஏற்பட்டு வருகின்ற தாயினும் உச்சங்கள் எட்டப்படவில்லை.

மறுபுறம், கனதியான விடயங்களைக் கையாண்டு எழு தும் எழுத்தாளர்களும் எமது சூழலிற் குறைந்த எண்ணிக் கையினராகவே காணப்படுகின்றனர். அத்தகைய முரண்பாடுகளினூடே 'சமகாலம்' தொடர்ந்து வெளி வந்து கொண்டிருத்தல் துணிச்சல் மிக்க ஒரு செயல் முனைப்பு.

நவீன அறிவுச் சமூகத்திலும் அறிவுப் பொருளாதா ரத்திலும், கனதியான விடயங்களைப் பொது மக்களிடத்து எடுத்துச் செல்லவேண்டிய தேவையைச் 'சமகாலம்' முன்னெடுத்துவருகின்றது. அதேவேளை இன்னும் பேசப் படவேண்டிய அறிவுப் பொதிகள் சமூக விஞ்ஞானங்களி லும், கலை இலக்கியக் கோட்பாட்டு அரசியலிலும் இருத் தலை மனங்கொள்ள வேண்டியுள்ளது.

ஒரே எழுத்தாளர்களின் ஆக்கங்களே ஒரே பாணியில் தொடர்ந்து பிரசுரிக்கப்படுதல் தேய்வியம்பலை (CLI- CHE) ஏற்படுத்திவிடும் என்பது வாசிப்பு உளவியலில் முன்வைக்கப்படும் ஒரு கருத்தாகின்றது. அதனையும் கருத்திற்கொள்ள வேண்டியுள்ளது. ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்நாட்டு அரசியல்



# யார் கையில் அரச அதிகாரம்?

## பொதுபலசேனாவை தடுத்து நிறுத்துவது எப்படி?



கலாநிதி
தயான் ஜயதிலக

**பொதுபலசேனாவின் வேலைத்திட்டத்தை கவனமாக உற்று நோக்கும் போது அரச அதிகாரம் தான் அதன் பிரதான இலக்கு என்பதை புரிந்துகொள்ள முடியும். அந்த அமைப்பின் சொல்லாடலை கவனமாகக் காது கொடுத்துக் கேட்டுப்பாருங்கள். அது அரசை நோக்கி விடுக்கப்படும் கட்டளைகள் அல்லவா?**

1983 கறுப்பு ஜூலை சம்பவங்களைவிடப் பயங்கரமான, மோசமான நிகழ்வுகள் இன்று நடக்கின்றன. அளுத்கம நிகழ்வுகள் அத்தகைய ஆபத்தை குறிப்பிடும் அடையாளம் ஆகும்.

அளுத்கமவில் சம்பவங்கள் ஒன்றன்பின் ஒன்றாக அமைந்த தொடர்ச்சி, வன்முறையின் கோரம், பயங்கரம் என்பன 83 ஜூலையை ஞாபகப்படுத்துகின்றன. தார்சி வித்தாச்சி 'அவசரகாலநிலை 58' நூலில் வருணித்தவையும் நினைவுக்கு வருகின்றன. 1983 இன் தமிழருக்கு எதிரான கலவரத்தின் தொடர்ச்சி அளுத்கமவில் வெளிப்படுகிறது. ஆயினும் அளுத்கம புதிய பல இயல்புகளையும் வெளிப்படுத்துகிறது என்பதை நாம் மறக்கக்கூடாது. அளுத்கமவில் தொடர்ச்சி மட்டுமன்றி ஒரு தொடர்ச்சியின்மையும் உள்ளது. இத்தொடர்ச்சியின்மையை கவனத்தில் கொள்ளும் போதுதான் அது முந்தியவற்றை விட எந்தளவுக்கு ஆபத்தானது என்பது புரியும்.

அளுத்கமவில் ஏற்பட்ட பயங்கர நிகழ்வுகளுக்கான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராஜபக்ஷாக்கள் பொதுபல சேனாவை ஆதரவு கொடுத்து வளர்த்துவிட்டார்கள். அரசு இயந்திரத்தின் பகுதியாக உள்ள சில கூறுகள் பொதுபல சேனாவிற்கு உதவின. 1990 களில் பாகிஸ்தானில் ஐ.எஸ்.ஐ. என்ற அமைப்புக்கும் தலிபான்களுக்கும் அந்நாட்டு அரசு இயந்திரத்தின் சில பிரிவு கள் உதவின என்ற விடயத் தோடு ஒப்பிட்டுப்பார்க்கலாம்




பரிகாரத்தை நாம் கண்டுகொள்ள வேண்டுமானால் அவற்றுக்குப் பின்னால் மறைந்து நிற்கும் காட்டு மிராண்டித்தனத்தை இனங்காண வேண்டும். இந்தச் சம்பவங்களின் சூத்திரதாரிகள் யார்? மூலகாரணங்கள் யாவை என்பதில் இன்று வரை குழப்பமான சிந்தனையே இருந்து வந்துள்ளது. திரைமறைவில் நிற்கும் ஆளும் குழுமம், சிங்கள பௌத்தத்தின் புதிய அவதாரம், நவதாராள முதலாளித்துவம் என்று மூன்று காரணங்கள் இதன் தோற்ற மூலமாகச் சொல்லப்பட்டன. இவை எல்லாம் காரணங்களாக உள்ளன என்பதும், இம்மூன்றின் கலப்பான காரணம் ஒன்றும் உள்ளதும் ஏற்றுக்கொள்ளப்படவேண்டிய உண்மையே. ஆயினும் பொதுபலசேனாவினதும் அளுத்கமச் சம்பவங்களினதும் மூல காரணம் என்று கொள்ளக்கூடிய மிக முக்கியமான ஆபத்தான வேறு விடயங்கள் சில உள்ளன.

அளுத்கம கலவரத்தின் பின்னணியில் பொதுபலசேனாவின் பிரதான பிரசாரகர் கலபொட அத்த ஞானசாரவின் பேச்சு அமைந்துள்ளது. மக்களைத் திசை திருப்பவல்ல திறமை இப்பிரசாரகருக்கு உண்டு எனினும் பொதுபல சேனாவின் தந்திரோபாய உத்தியை வகுத்த பெருமை முதிய தலைவரான கிராம விமலஜோதிதேரருக்கு உரியதாகும். பொதுபலசேனாவின் வேலைத்திட்டங்களைக் கவனமாக உற்றுநோக்கும் போது ஒரு முக்கிய விடயம் தெளிவாகிறது. அரச அதிகாரம் என்ற விடயம்தான் அதன் பிரதான இலக்கு. பொதுபலசேனாவின் சொல்லாடலைக் கவனமாகக் காதுகொடுத்துக் கேட்டுப்பாருங்கள். அது அரசை நோக்கி விடுக்கப்படும் கட்டளைகள் அல்லவா?ஆகவே அதன் இலக்கு அரசு அதிகாரத்தைக் கைப்பற்றுவதுதான். பொதுபலசேனாவின் ஞானசார தேரர் அரசு தங்கள் உடைமை என்றே கருதுகிறார். அது எப்படிச் செயற்படவேண்டும் என்றும் அவர் கட்டளையிடுகிறார். அரசு தமது உடைமை என்று கூறும் போது அது தனிப்பட்ட உடைமை என்ற கருத்து அங்கே இல்லை. அல்லது அது பொதுபலசேனா என்ற தாபனத்தின் சொத்து என்ற கருத்தும் இல்லை. இந்த உரிமைக் கோரிக்கையின் எல்லை ஒரு நபர் அல்லது தாபனம் என்று குறுக்கப்படாது விரிவாக்கப்பட்டு சிங்கள-பௌத்தம் என்ற இனக் குழுமத்தின் மதக்குழுவின் உடைமை என்ற கருத்து வெளிப்படுகிறது. ஆயினும் சிங்கள-பௌத்தம் என்பதும் ஒரு திரை ஆகும். இந்தத் திரையை நீக்கிப் பார்த்தால் அரசுக்கான உடைமையைக் கோரும் சமூக குழு ஒன்று இருப்பதையும், அக்குழுவே அரசின் உடைமையாளன் ஆகும் தகுதி உடையது என்ற வாதமும் வெளிப்படுவதைக் காணலாம். பொதுபலசேனா சிங்கள பௌத்த மதகுருமார் என்ற சமூகக் குழுவுக்குத்தான் அரசு உடைமையானது; அதுவே அரசுக் கொள்கையையும், அரசு நடைமுறையையும் வகுத்துக் கொள்ளும் தகுதியுடையது என்று கூறுகிறது.

அரசின் உடைமையை மதகுருக்கள் என்ற வகுப்பு உரிமைகோருவது புதியவிடயம். ராஜபக்ஷாக்கள் (ஒருமையிலும் பன்மையிலும், பொதுபல சேனாவினை ஆதரவு கொடுத்து வளர்த்து விட்டார்கள். அத்தோடு அரசு இயந்திரத்தின் பகுதியாக உள்ள சில கூறுகள் பொதுபலசேனாவிற்கு உதவின. 1990களில் பாகிஸ்தானில் ஐ.எஸ்.ஐ. என்ற அமைப்புக்கும் தலிபான்களுக்கும் அந்நாட்டு அரச யந்திரத்தின் சிலபிரிவுகள் உதவின என்ற விடயத்தோடு இதனை ஒப்பிட்டுப் பார்க்கலாம். கலபொட அத்தே ஞானசாரருக்கு முன்பு எல்லே குணவன்ச இருந்திருக்கிறார். கிராம விமலஜோதிக்கு முன்பு மடிகே பன்னாசீக இருந்திருக்கிறார். ஆகையால் பொதுபலசேனாவின் ரிஷிமூலம் நதிமூலம் எவ்வாறு இருப்பினும், மதகுருக்கள், சொத்து, அரசு என்ற கருத்து முன்னிலைப்படுத்தப்பட்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடயம் இதுபெற்ற உருமாற்றத்தை எடுத்துக்காட்டுகிறது.

83 ஜூலையில் எவை நிகழ்ந்தனவோ அவை அளுத்கமவில் நடத்திருப்பதைக் காணலாம். அதிகாரம் இரண்டாக இருசந்தர்ப்பங்களிலும் பிளவுபட்டதைக் காண்கிறோம். யாரிடம் அதிகாரம் போய்ச்சேர்ந்தது? அரசின் பொலிஸிடமும் இராணுவத்திடமுமா அல்லது வீதியில் இறங்கிய சிங்கள - பௌத்த நடவடிக்கையாளரிடமா? அதிகாரம் இருந்தது என்பதே கேள்வி. 83 ஜூலையில் அதிகாரத்தின் இருகூறான பிளவு (There was a situation of dual power) இருந்தது. அளுத்கமவில் இந்த இரட்டை அதிகாரத்தில் இன்னொரு பரிமாணமும் சேர்ந்து கொண்டது. அரசு இயந்திரத்தின் அங்கங்களை யார் கட்டுப்படுத்தினர்? யார் அவற்றுக்குக் கட்டளையிட்டுக் கொண்டிருந்தனர். சட்டபூர்வமான அதிகாரம் உடைய அரச அதிகாரிகளா அல்லது மதகுருக்களா அளுத்கமவில் கட்டளைகளை விடுப்பவர்களாக இருந்தனர்? இதனை விட மிகவும் மோசமான ஒரு விடயம் தேர்தல் மூலம் தெரிவு செய்யப்பட்டவர்களைக் கொண்டு இயக்கப்படும் அரசின் அங்கங்களா அல்லது மதகுருக்களா சட்டபூர்வமான அதிகாரம் உடையவர்கள் என்ற சந்தேகம் அளுத்கமவில் வெளிப்பட்டது.

பொதுபலசேனா அரசு அதிகாரத்தை தன் கையில் எடுத்தது. அதனைக் கட்டுப்படுத்தியது. பௌத்த குருமார்கள் ஒரு செல்வாக்குச் செலுத்தும் குழுவாகவும், அமுக்கக்குழுவாகவும் முன்னர் ஒரு காலத்தில் இருந்தனர். பௌத்த குருமார்கள் அரசியல் தீர்வுகளை, கொள்கைத் திட்டங்களை இறுதிநேரத்தில் போட்டு உடைப்பவர்களாகவும் குழப்புபவர்களாகவும் இருந்திருக்கிறார்கள். (1955-56 சிங்களம் மட்டும் சட்டம், 1957-பண்டா- செல்வா ஒப்பந்தம், சர்வகட்சி மகாநாட்டு யோசனைகள், 1984 இணைப்பு என்பன) மதகுருமார்கள் முந்திய காலத்தில் ஒரு அமுக்கக் குழுவாகவிருந்து செய்த மேற்குறித்த குழப்புவேலைகளில் இருந்து தன்மையில் மாறுபட்ட வேலையை, ஒரு பண்புசார் பாய்ச்சலை (Qualitative escalation) ஞானசாரதேரரின் பேச்சிலும் நடவடிக்கைகளிலும் காணலாம். அவருடைய பேச்சு அரசு அதிகாரத்தை மத குருமாரின் உடைமையாக்கும் இலக்கைச்சுட்டி நிற்கிறது. அவர் பௌத்த குருமார் குழுவின் சுயபிரதிமையின் புதிய வடிவத்தை இப்பேச்சில் வெளிப்படுத்தினார். பௌத்தகுருமார் அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கான போட்டிக்குத் தயாராகிவிட்டார்கள். இது வெறுமனே தேர்தலில் போட்டியிட்டு குருமார் வெற்றிபெறும் விவகாரம் அல்ல. பாராளுமன்ற உறுப்பினர் ஆசனங்களைக் கைப்பற்றுவதல்ல.

ஆயுதப்படைகளையும் பொலிஸையும் நோக்கி ஞானசாரதேரர் நேரடியாகப் பேசுகிறார். அவரது கட்டளைகள் அரசியல் யாப்பின்படி அதிகாரம் பெற்றவர்கள் இருக்கத்தக்கதாக அவர்களை மீறி நேரடியாகப் படை அதிகாரிகளுக்கும் பொலிஸுக்கும் விடுக்கப்படுகிறது. அரசியல் அதிகாரத்தில் உள்ளவர்களைப் பார்த்து அவர் எச்சரிக்கை விடுக்கிறார். ஆயுதப்படைகளும் பொலிஸும் சிங்களம் அல்லவா என்று அரசியலாளர்களுக்கு ஞாபகப்படுத்துகிறார்.

அரசுப்படைகள், பொலிஸ் நிர்வாகம் ஆகியவற்றின் ஆளணியின் இன, மொழி, மத வீதாசாரங்கள் சிங்கள பௌத்தர்களின் மேலாதிக்கத்தை உறுதிசெய்துள்ளன. அரசை சிங்கள-பௌத்த நலன்களிற்கு முதன்மையளிக்கும் வகையில் உபயோகிப்பது மட்டும் பொதுபலசேனாவின் தந்திரோபாயம் அன்று. அதனை விட மிகவெளிப்படையான வகிபாகத்தைப் பொதுபலசேனா அரசயந்திரத்திற்கு வழங்க வேண்டும் என்று கருதுகிறது. அரச அதிகாரத்தின் ஏக போக உரிமை, வெளிப்படையான ஆதிக்கம், பொருளாதாரத்துறையில் ஆதிக்கம், மனிதவாழிடம் என்ற வெளியில் எங்கும் மேலாதிக்கம் என்பனவே அதன் திட்ட இலக்குகள். சிங்கள-பௌத்த ஆட்சி பற்றிய சொல்லாடல் என்று மட்டும் பொதுபலசேனாவின் சித்தாந்தத்தை மட்டுப்படுத்த முடியாது. அது இலக்காகக் கொள்ளும் அரசியல் சமூக மாதிரியை இனஒதுக்கல் கொள்கை என்று வருணித்தால் அது குன்றக்கூறலாகவே இருக்கும். பொதுபலசேனாவின் அரசியல் சமூகமாதிரி அடிமைச் சமூகமுறை என்பதே மிகச்சரியான வருணிப்பு. அது இலங்கையில் அடிமைமுறையோடு கொடுமை, பயங்கரம் என்பனவற்றையும் ஒன்றிணைக்கப் போகின்றது.

அதன் திட்டப்படி அரசைக் கட்டுப்படுத்தப்போகிறவர்கள் அதன் பணிப்பாளர்கள் மதகுருக்களாகவே இருப்பர். பொதுபலசேனா அக்குழுவின் முன்னணிப்படையாக இருக்கும்.

மூன்று முஸ்லிம்கள் கொல்லப்பட்டனர். அவர்கள் துப்பாக்கிக் குண்டுகள் பட்டு மடிந்தனர். யாருடைய துப்பாக்கிகளால் மடிந்தனர். 'Ku Klux klan' போன்ற ஆயுதம் தாங்கிய குழுவின் தோற்றம் புதிய தோற்றப்பாடு என்பது கவனிக்கத்தக்கது. இந்த ஆயுதக் குழுவினர் தம் முகங்களைத் துணிகளால் மூடி மறைக்கும் முகமூடிகளை அணியும் தேவையும் இருக்கவில்லை! பொதுபலசேனா ஆயுதப்படைகளையும், பொலிஸையும், சிங்கள-பௌத்த மத குருக்களின் கீழ் செயற்படும் ஆயுதக் குழுவாக மாற்றவே விரும்புகிறது என்பது தெளிவு. பொதுபலசேனா வின் இந்தத் திட்டம் வெற்றிபெறுமா? இத்திட்டம் கருக்கொள்ளத் தொடங்கி 60 வருடங்கள் உருண்டோடிவிட்டன. இந்த 60 வருடங்களாக மெள்ள மெள்ள கருக்கட்டிய இத்திட்டத்தில் சோமதேரரின் மரணச்சடங்கின் போது உயர் அளவில் நஞ்சு கலக்கப்பட்டது. அதன் கருத்தியல் தேசிய அலைவரிசைகளில் தொலைக்காட்சியில் பிரசாரப்படுத்தப்பட்டன. உணர்ச்சி வெறி பொங்கிப்பிரவகித்தது. இப்போ இந்த விஷஜந்து முட்டையின் ஒட்டை உடைத்துத் தலையை நிமிர்த்துகிறது. இந்த விஷஜந்தை இனவாதம், மதவெறி, நவதாராள முதலாளித்துவம், நவஏகாதிபத்திய சதி என்ற சொற்பதங்கள் கொண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளக்கி விட முடியாது. அல்லது ராஜபக்ஷவாதம் என்று சொல்லி விளங்க வைக்கவும் முடியாது. நான் ஒரு வருடத்திற்கு முன்னர் இதனை விளக்க இனக்குழும -மத பாசிசம் (ETHNO - RELIGIOUS FASCISM) என்ற சொற்தொடரை உபயோகித்தேன். இந்த வகைப்பாசிசம் மதகுருக்கள் தலைமையிலான பாசிசமாகும் (Theocratic Fascism). இப்பாசிசம் புதியவகைச் சமூக அரசியல் ஒழுங்கமை ப்பை உருவாக்க முனைகிறது. அதன் பாசிச இயல்பு தான் அரச அதிகாரத்தைக் கையகப்படுத்தும் அதன் எண்ணத்தின் அடிப்படை. இது தேர்தலில் சில ஆசனங்களைப் பிடிக்கும் முயற்சியில் இருந்து வேறுபட்டது. கலபொட அத்தே ஞானசாரர் ராஜபக்ஷாக்களை கிண்டல் செய்யும் பாணியில் பேசியிருப்பதும் கவனத்திற்குரியது. அவரது இச்சொல்லாடல் முக்கியம் வாய்ந்தது. இந்நாட்டில் சமூகத்தளத்தில் ஒரு மாற்றம் ஏற்பட்டுள்ளது. பொதுபலசேனா அம்மாற்றத்திற்கேற்ற அதிகார மாற்றத்தையும் கோருகிறது. அளுத்கம அதிகார மாற்றத்திற்கான பரிசோதனைக் களமாகும். மதகுருக்கள், சனக்கும்பல், இராணுவம் என்ற மூன்றை இணைக்கும் முறையிலான தந்திரம் இது. ஆங்கிலத்தில் மூன்று 'M' களின் சேர்க்கை என்று இதனைச் சொல்லலாம். (Monks, mobs and military) இத்தந்திரம் மூன்று திட்டங்களைச் செயற்படுத்தும் நோக்கம் கொண்டது. முதலாவது திட்டம் மதகுருமாரின் தலைமையில் பாசிச ஆட்சியை ஏற்படுத்துதல். இரண்டாவது திட்டப்படி மதகுருமார் பின்னின்று வழிநடத்த இராணுவ ஆட்சி பொறுப்பை ஏற்கும். மூன்றாவதாக முதலாவது திட்டமான மதகுருமார் ஆட்சிக்குப் பொருத்தமானவரான ஒருவரைப் பதவியில் அமர்த்துவது அமையும். முஸ்லிம்களுக்கு எதிராக மட்டுமல்லாமல் சிறுபான்மையினர் யாவருக்கும் எதிராக நாடு முழுமையிலும் கலகங்களை ஏற்படுத்துதல், வடக்கு மாகாண சபையை இராணுவ ஆட்சி மூலம் நீக்குதல், 1959 இல் எஸ். டபிள்யு.ஆர்.டி.பண்டாரநாயக்க கொலைசெய்யப்பட்டது போன்று சம்பவங்கள் இடம்பெறல், குழப்பமும் அராஜகமும் நாட்டில் ஏற்படுத்தப்படல் என்பனவும் இம்மூன்றாவது திட்டத்தின் பாகமாக அமையும் ஏனைய அம்சங்களாகும்.

பொதுபலசேனாவின் திட்டங்களை முறியடித்து அதனைப் பின் தள்ளுவது எப்படி? எந்தத்தந்திரம் மற்றவற்றைவிடச் சிறந்தது என்ற விவாதத்தை நடத்துவது வீணான முயற்சி. எத்தனை தந்திரோபாய வழிகள் உள்ளனவோ அனைத்தையும் பிரயோகித்து நடவடிக்கையில் இறங்குவதே புத்தியானது. முரண்படும் நலன்கள் சார்ந்த மோதலும் முரண்பாடும், விழுமியங்கள் சார்ந்த மோதலும் முரண்பாடும் என்ற இருவகையான முரண்பாடுகளின் அடிப்படையில் பொதுபலசேனாவுக்கு எதிரான எதிர்ப்பியக்கம் நடத்தப்படலாம். விழுமியங்கள் கருத்துகள் அடிப்படையிலான எதிர்ப்பியக்கம் பயனுடையது. அது அவசியமானதும்கூட. ஆனால் அது எதிர்ப்பியக்கத்தை விரிவாக்கவோ ஆழப்படுத்தவோ போதுமானதல்ல. நலன்களின் அடிப்படையிலான வேறுபாடுகளை வைத்து எதிர்ப்பியக்கத்தை வலுப்படுத்தல் வெற்றியைத் தரும். அளுத்கமவில் ஞானசாரரின் பேச்சும் அதற்குப் பிந்திய வன்முறையும் ஆட்சியில் இருப்பவர்களுக்கும், பொதுபலசேனாவிற்கும் இடையிலான விரிசலை வெளிப்படுத்தியுள்ளது. பொதுபலசேனா ஆட்சி அதிகாரத்தைக் கோருகிறது. கட்டளை விடுக்கும் அதிகாரம் தனக்கு வேண்டும் என்று அது கூறுகிறது. அரச யந்திரம் தனது கட்டளைப்படி செயற்படவேண்டும் என்றும் அது விரும்புகிறது.

அதிகார மாற்றம் பற்றிய சிந்தனை ராஜபக்ஷாக்களிடம் இல்லை. பொதுபலசேனா இதற்கு நேர்எதிரான சிந்தனையுடையது. ராஜபக்ஷாக்களுக்கு பொதுமக்களோடு தொடர்பும் பிணைப்பும் உள்ளது. பொதுபல




**1983 ஜூலையில் நிகழ்ந்ததைப்போன்றே அளுத்கமவிலும் நடந்திருக்கிறது. அதிகாரம் யாரிடம் போய்ச் சேர்ந்தது. அரசின் பொலிஸிடமும் இராணுவத்திடமுமா அல்லது வீதியில் இறங்கிய சிங்கள-பௌத்த நடவடிக்கையாளர்களிடமா?**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேனாவிற்கு அந்தளவிற்கு மக்களோடு பிணைப்புக் கிடையாது.

பாசிசத்திற்கு எதிரான போராட்டத்தில் தான் எத்தகைய பிசாசோடும் கூட்டுச் சேரத்தயார் என்று லியோன் ரொட்ஸ்கி ஒரு தடவை கூறினார். இன்றைய பிரச்சினைகளின் தீவிர நிலைக்கு எல்லாக் கட்சிகளும் ஆட்சியில் இருந்தோரும் நேரடியாகவும் மறைமுகமாகவும் பங்களிப்புச் செய்தன. (ஆட்சியதிகாரத்தைப் பிடித்தவர்களுள் ராஜபக்ஷாக்களின் பங்கும் கணிசமானது) பிரச்சினையின் பங்குதாரிகளாக இருப்போரான யாவரிடமும் பிரச்சினைக்குத் தீர்வு காணும் ஆற்றலும் உள்ளது. பொதுபலசேனாவிற்குத் தூண்டுதல் கொடுத்தவர்கள் என்ற வகையில் ராஜபக்ஷாக்கள் தான் அதனைக் கட்டுப்படுத்த வல்லவர்கள் அதன் கொட்டத்தை அடக்கக் கூடியவர்கள் என்பது கவனிக்கப்படவேண்டிய விடயம், ஆனால் தற்போது அதிகாரத்தில் உள்ளவர்கள் இதனை வழிக்குக் கொண்டு வருவார்கள் என்று வாளாவிருக்க முடியாது. ஒரு பரந்த இடதுசாரிக் கூட்டணியை அமைக்க வேண்டும். இக்கூட்டணியில் மக்கள் விடுதலை முன்னணிக்குத் தலைமைப் பாத்திரம் உள்ளது. FSP,IUSF முதலிய பல்கலைக்கழக மாணவர் சங்கங்களையும் இதில் சேர்த்துக்கொள்ள வேண்டும். இது ஒருவழி. பாசிசத்திற்கு எதிராக பலகோணங்களிலும் இருந்து எதிர்ப்பு அணிகளை உருவாக்கிக் கொள்ள வேண்டும்.

இலங்கை இராணுவத்தின் உத்தியோகத்தர்கள் அரசாங்க அதிகாரிகள், நீதித்துறை, தனியார் கம்பனிகள், தொழிற்சங்கங்கள், மாணவர் சங்கங்கள் உயர்தொழிலர் அமைப்புகள், அரசியல் கட்சிகள், ஊடகங்கள், அறிவாளிகள் வர்க்கம் என்று எல்லாரையும் ஒன்று திரட்டி அணிசேர்க்க வேண்டும். சர்வதேசத்தினதும் (இலங்கையின் நண்பர்களதும்) ஆதரவைப் பெற்றுக்கொள்ள வேண்டும். பொதுபலசேனாவின் திட்டம் எந்தளவு பேரழிவைக் கொண்டுவரும் என்பதைச் சர்வதேசத்திற்கு உணர்த்த வேண்டும். யாவரதும் நலன்களுக்கு எதிரானது பொதுபலசேனா என்பதை உணரச்செய்து அதனைத் தோற்கடிக்க வேண்டும். பொதுபலசேனாவுக்கு எதிரான போராட்டத்திற்கு மிகச் சிறந்த ஆயுதம் புத்திக்கூர்மையுள்ள தேசப்பற்று என்று கூறலாம். சிங்கள நலன்களைப் பற்றிச் சிந்திப்போர் பகுத்தறிவுவோடு பார்க்க வேண்டும் என்ற அழைப்பை விடுக்க வேண்டும். பௌத்த மதத்தின் பன்மைத்துவச் சிந்தனை மரபை எல்லாரையும் உட்படுத்தவல்ல திறந்த மனப்பாங்கை புத்துயிர் கொடுத்து வளர்க்க வேண்டும். ■




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திஸ்ஸரணி குணசேகர



உள்நாட்டு அரசியல்



# அளுத்கமவும் போர் வெற்றி குதூகல அணிவகுப்பும்

***ஒவ்வொரு இனத்தின் மத்தியிலும் பொய்கள் நம்பப்படுகின்றன; எந்த இனமாவது எப்போதாவது உண்மையின் ஏக உடைமையாளராக இருந்ததா?***

***அப்துல்லா அல்-மாஅரி***
***அரபுக் கவிஞர் (973-1057)***

அளுத்கமவிலும் பேருவளையிலும் வன்முறை ஓய்ந்துவிட்டது. ஆனால், பாதிக்கப்பட்ட இந்தப் பகுதிகளுக்கு வழமை நிலை திரும்புவதற்கு நீண்ட நாட்கள் எடுக்கும், நினைவுகளும் பீதியும் தொடர்ந்து நிலவும். இப்பகுதிகளின் முஸ்லிம் மக்களைப் பொறுத்தவரை, திகிலுடனும் கெடுதி வருமோ என்ற நினைப்புடனும் கூடிய சூழ்நிலையின் கீழேயே வாழ்க்கையைத் தொடர வேண்டியிருக்கும்.

வீடுகளையும் கடைகளையும் அரசாங்கத்தின் நிதியில் மீளக்கட்டித் தருவதாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ உறுதியளித்திருக்கிறார். உறுதிமொழி காப்பாற்றப்படுமென்று நம்புவோமாக. மேலும், பாதிக்கப்பட்ட சொத்துகளை நகர அபிவிருத்தி அதிகார சபை சுவீகரித்து மக்களில் பெரும்பாலானோர் இல்லாத இன்னொரு 'பூங்கா நகரமாக' அளுத்கமவை மாற்றுவதற்குத் தீர்மானிக்காமல் இருக்குமென்று நம்புவோமாக.

இத்தகையதொரு அனர்த்தத்தில் நகைப்புக்கிடமானது எதையும் கண்டு பிடிக்கக்கூடியதாக இருக்குமானால், விசாரணையொன்றை நடத்துவதாக ஜனாதிபதி அளித்த உறுதிமொழி சிரிப்புக்கிடமானதாக இருந்திருக்கும். அளுத்கமவில் அன்றைய தினம் ஆத்திரமூட்டும் உரைகள் நிகழ்த்தப்பட்ட பொதுக் கூட்டத்துக்கு (பல அமைச்சர்களினதும் முஸ்லிம் அமைப்புகளினதும் வேண்டுகோள்களை அலட்சியம் செய்து) அனுமதி வழங்கியவர் யார் என்பதை விசாரணை கண்டுபிடித்து அம்பலப்படுத்துமா? இரத்தவெறி கொண்ட தனது உரைக்கு பொறுப்புக் கூறுமாறு பொதுபல சேனாவின் பொதுச் செயலாளர் கலபொட அத்த ஞானசாரதேரரிடம் கேட்கப்படும் நிலையை தவிர்க்க முடியாத வகையில் விசாரணை ஏற்படுத்துமா? விசாரணையின் இறுதி அறிக்கை என்றைக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காவது வெளியில் வருமா?

மக்கள் பல்வேறு வகைப்பட்ட அடையாளங்களைக் கொண்டிருக்கி றார்கள். மத அடையாளம் மேலோங் கும் போது முரண்நிலையும் மோத லும் ஒருபோதுமே தொலைவில் நிற்கப்போவதில்லை. இலங்கையில் இடம்பெற்ற முதல் கலவரம் இன அடிப்படையில் அல்ல மத அடிப்ப டையிலேயே அமைந்தது என்பது ஒன்றும் தற்செயலானதல்ல. அது 1915ஆம் ஆண்டு இடம்பெற்ற கல வரமல்ல. 1883ஆம் ஆண்டு கொழும்பில் கொட்டாஞ்சேனையில் இடம்பெற்ற கலவரமே அது. சிங்கள வரும் சிங்களவருமே மோதிக் கொண்டார்கள். அதாவது, சிங்கள பௌத்தர்களுக்கும் சிங்களக் கத்தோ லிக்கர்களுக்கும் இடையிலான மோதல். இருதரப்பினரையும் பிரித் தகோடு மதரீதியானது.

கொட்டாஞ்சேனையில் தீபதூதரா மயவைச் சூழவாழும் பௌத்தர்கள் தொடர்ச்சியான மதக் கொண்டாட் டங்களை ஏற்பாடு செய்திருந்தனர். தபசு காலத்தின் போது (பெரிய வெள்ளியன்று ஊர்வலம் உட்பட) இந்தக் கொண்டாட்டங்கள் வந்ததால் கொட்டாஞ்சேனை சென்லூசியாஸ் தேவாலயத்தைச் சூழவாழ்ந்த கத்தோ லிக்கர்கள் அதிருப்தியுற்றனர். இரு தரப்பி னரும் மனம் வைத்திருந்தால் 'முகமாகத் தீர்த்துவைத்திருக்கக் கூடிய சிறியதொரு விவகாரம் அது. ஆனால், மத உரிமைகளே சர்ச்சைக் குரியவையாக இருந்தன. மதம் எனப் படுவது அரசியல் சாயலைப் பெறு கின்ற போது எப்போதுமே மக்களுக்குள். இருக்கின்ற தீயசுபா வத்தை வெளியில் கொண்டுவருகி றது. மேலாதிக்க உள்நோக்கம் கொண்டவர்களாக மாறும் மக்கள் விட்டுக் கொடுத்துச் செயற்பட மறுப் பார்கள்.

கலவரம் கட்டுப்படுத்தப்பட்டது ஏனென்றால் புரட்டஸ்தாந்துக்காரர் களான (இங்கிலாந்து திருச்சபை) பிரிட்டிஷார் பக்கச்சார்பின்றி செயற் பட்டிருக்கக்கூடும். இருந்தும் கூட கலவரத்தில் இருவர் கொல்லப்பட்ட னர், தெஹிவளையில் உள்ள றோமன் கத்தோலிக்கத் தேவாலயம் ஒன்று தீக்கிரையாக்கப்பட்டது. இச் சம்பவங்கள் தொடர்பாக விசாரணை செய்வதற்கு நியமிக்கப்பட்ட ஆணைக்குழு இருதரப்பினர் மீதும் தவறைக் கண்டது. அதனால் எந்தத் தரப்பும் திருப்திப்படவில்லை. பௌத்தர்களுக்கும் கத்தோலிக்கர்க ளுக்கும் இடையிலான பதற்றநிலை தொடர்ந்து கொண்டேயிருந்தது.



ஜனாதிபதி உறுதிய ளித்த விசாரணை இரத்த வெறிகொண்ட தனது உரைக்கு பொறுப்புக் கூறுமாறு கலபொட அத்த ஞானசார தேரர் நிர்ப்பந்திக்கப்படும் சூழ்நிலையை உருவாக்குமா?

1903 ஆம் ஆண்டில் பொசன் பண் டிகை காலத்தில் அநுராதபுரத்தில் இன்னொரு சிறிய கலவரம் மூண் டது. றோமன் கத்தோலிக்கத் தேவால யம் ஒன்று தீக்கிரையாக்கப்பட்டது. இறைச்சிக் கொட்டில் ஒன்றும் நிர்மூ லஞ்செய்யப்பட்டது. இந்த பௌத்த-கத்தோலிக்க முரண்நிலை 1915 கல வரத்துக்குப்பிறகு மாத்திரமே பின்னணிக்குச் சென்றது.

இலங்கை பல இனத்தவர்களும் பல மதத்தவர்களும் வாழுகின்ற ஒரு நாடு. பல்லின-பல்மத சமுதாய மொன்றில் தவிர்க்க முடியாத வகை யில் தோன்றுகின்ற பிரச்சினைகளை யும் பதற்றநிலைகளையும் கையாளு வதற்கு சமாதான ரீதியான பொறி முறைகளை நாம் வகுக்க வேண்டி யது அவசியமாகும். இலங்கைத் தேசியவாதம் ஒன்று இல்லாத சூழ்நி லையால் இந்த முக்கியமான பணி பாரதூரமான முறையில் இடையூறுக் குள்ளாகியிருக்கிறது. அனேகமாக விளையாட்டுத்துறையைத் தவிர என்று சொல்லலாம், மற்றும்படி பெரும்பான்மையான இலங்கையர் கள் இனரீதியாகவும் மதரீதியாகவுமே சிந்திக்கிறார்கள். தங்களது பிரிவின ரின் பிரத்தியேகமான நலன்களுக்கு முக்கியமற்றதாக அல்லது புறம்பான தாக இருக்கின்ற தேசியநலன் என்ற கருத்தை இவர்கள் அந்நியமான தொன்றாகவே நோக்குகிறார்கள்.

பிரிட்டிஷ் காலனித்துவ ஆட்சியா ளர்களுக்கு எதிராக மேற்கொள்ளப் பட்ட 1848 கிளர்ச்சி (இதை மாத்த ளைக் கிளர்ச்சி என்றும் அழைப்பர்) படுமோசமாகத் தோற்கடிக்கப்பட்ட பிறகு காலனித்துவ ஆட்சிக்கு எதி ரான எதிர்ப்பு மத-கலாசார வடிவங்க ளைப் பெறலாயிற்று. புதிய காலனித் துவ எதிர்ப்புப் போராட்டமொன்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

க்குப் பதிலாக ஒரு பௌத்த மறுமலர்ச்சி ஏற்பட்டது. இதைத் தொடர்ந்து தவிர்க்க முடியாதவகையில் இந்து மறுமலர்ச்சியும் முஸ்லிம் மறுமலர்ச்சியும் ஏற்பட்டது. 1848 கிளர்ச்சி நினைவுகளுக்குப் பிறகு பிரிட்டிஷாருக்கு எதிராக எந்தவொரு அரசியல் எதிர்ப்பியக்கத்தையும் முன்னெடுப்பதென்பது மடத்துணிச்சலானதாகவும் ஆபத்தானதாகவுமே கருதப்பட்டது. அதனால் பிரிட்டிஷாருக்கு எதிரான வெறுப்புணர்வு ஒப்பீட்டளவில் பாதுகாப்பானவை என்று கருதப்பட்ட மார்க்கங்களில் (மேற்கத்தைய செல்வாக்குகளுக்கு எதிரான கலாசார ரீதியான எதிர்ப்பாகவும் கிறிஸ்தவத்துக்கு எதிரான மதரீதியான எதிர்ப்பாகவும்) திசைதிருப்பப்பட்டது.

இதனால், பிரதான காலனித்துவ எதிர்ப்பு இயக்கம் பெருமளவுக்கு இந்தியாவின் இந்துத்வா இயக்கத்தின் ஒரு பௌத்த வடிவமாக மாறியது. இந்த இயக்கத்துக்கு பிரிட்டிஷ் ஆட்சியாளர்களுடனான பிரச்சினைகளைவிட, தமிழர்களுடனும் முஸ்லிம்களுடனும் பறங்கியருடனும் மேற்கத்தைய மய வாழ்க்கையைக் கொண்ட சிங்களவர்களுடனும் கூடுதல் பிரச்சினைகள் இருந்தன. நெறிமுறையின் ஒரு மண்ணாக புராதன இலங்கை புத்துருவாக்கம் செய்யப்பட்டது. கெடுதியான பழக்க வழக்கங்கள் எல்லாவற்றுக்கும் அந்நிய செல்வாக்குகளே காரணமென்று குற்றஞ்சாட்டப்பட்டது. இது ஒரு தர்க்க முரணான, அறிவுக்குப் பொருந்தாத, தீவிரவாதத்தன்மையான பௌத்தமாக அமைந்தது. அத்துடன் சிங்களவர்களை மையப்படுத்தியதாகவும் சகிப்புத்தன்மையில்லாததாகவும் மற்றவர்களை அரவணைக்காமல் குறுகிய மனப்பான்மைகொண்ட ஒன்றாகவும் இருந்தது. சிறுபான்மையினத்தவர்களுக்கு எதிராக ஆவேசமாகப் பேசிய அநகாரிக தர்மபால இந்த பௌத்தத்தின் முதன்மையான பிரதிநிதியாகவும் தலைவராகவும் வந்தார்.

பொதுபலசேனா அந்த வரலாற்றின் ஒரு உற்பத்தியே. அநகாரிக தர்மபாலவின் பேச்சுப் பாணியிலேயே

**தங்களது ஆட்சி முறையை நியாயப்படுத்துவதற்கு கோட்பாடு ஒன்றை தேடிக்கொண்டிருந்த ராஜபக்ஷாக்கள் சிங்கள-பௌத்த மேலாதிக்கவாதத்தை ஆரத்தழுவிக்கொண்டார்கள். சிங்கள இனத்தினதும் புத்த சாசனத்தினதும் பிரதம பாதுகாவலர்களாக தங்களை அவர்கள் காட்டிக்கொண்டார்கள். எந்தெந்த வழிமுறைகள் அவசியமோ அந்தந்த வழிமுறைகளில் சிறுபான்மையினரைப் பணிய வைக்க வேண்டியதும் இதில் அடங்குகிறது**

கலபொட அத்த ஞானசார தேரர் தனது மேடைப் பேச்சுகளை நிகழ்த்துவதற்கு பழகிக்கொண்டது ஒன்றும் தற்செயலானதல்ல. அவர் அதை மனமார நேசித்தே செய்கிறார்.

தங்களது ஆட்சிமுறையை நியாயப்படுத்துவதற்கு கோட்பாடொன்றைத் தேடிக்கொண்டிருந்த ராஜபக்ஷாக்கள் இந்த சிங்கள-பௌத்த மேலாதிக்கவாதத்தை ஆரத்தழுவிக்கொண்டார்கள். சிங்கள இனத்தினதும் புத்த சாசனத்தினதும் பிரதம பாதுகாவலர்களாகத் தங்களை அவர்கள் காட்டிக்கொண்டார்கள். எந்தெந்த வழிமுறைகள் அவசியமோ அந்தந்த வழிமுறைகளில் சிறுபான்மையினங்களை பணியவைக்க வேண்டியதும் இதில் அடங்குகிறது.

### இனம்-மதம்-இராணுவத்துடன் ஆளும் குடும்பத்தின் தொடர்பு

பொசன் போயா தினத்தன்று ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ புதிய சந்த-ஹிரு சேயா (சந்திர-சூரிய தாதுகோபுரம்) வில் புனித சின்னங்களை சேமம் வைத்தார். இந்தப் புதிய பௌத்த தாது கோபுரம் பயங்கரவாதத்திலிருந்து இலங்கையை விடுவித்த இராணுவ வெற்றியை நினைவுகூருமுகமாக சரித்திரப் பிரசித்திமிக்க அநுராதபுர நகரில் நிர்மாணிக்கப்படுகிறது. இதற்கான அடிக்கல்லை ஜனாதிபதி 2009 அக்டோபரில் நாட்டினார். சுயாதீன தொலைக்காட்சி சேவையின் செய்தியின் பிரகாரம் இந்தக் கோபுரம் 250 அடி உயரமானது. இதற்கு 4 கோடி 50 இலட்சம் செங்கற்கள் தேவைப்படுகின்றன. அருகாமையில் அமையவிருக்கும் மகாமண்டபத்துக்கான பளிங்குக் கற்கள் மியன்மாரினால் கொடுக்கப்படுகின்றன. மொத்தச் செலவு 200 கோடி ரூபாவாகும்.

ஈழப்போரின் வெற்றிகரமான முடிவைக் குறிக்குமுகமாக (வடக்கு - கிழக்கு உட்பட) ஏனைய 8 மாகாணங்களிலும் மேலும் தாது கோபுரங்களை நிர்மாணிக்க ராஜபக்ஷாக்கள் திட்டமிட்டிருக்கிறார்கள். இது ராஜபக்ஷவின் தனிப்பட்ட திட்டம் அல்ல. இலங்கை அரசின் உத்தியோகபூர்வமான திட்டமாகும். இதற்கான நிதி அரசாங்க ஒதுக்கீடுகளில் இருந்தும் பொது நன்கொடைகளில் இருந்தும் கிடைக்கும். கட்டிட வேலைக்கு ஆயுதப்படைகளும் சிவில் பாதுகாப்புப் படையும் பயன்படுத்தப்படும்.

விடுதலைப் புலிகளை வெற்றிகொண்டமையை நினைவுகூர ஏன் தாதுகோபுரங்கள் நிர்மாணிக்கப்படுகின்றன? அந்தப் போர் ஒரு இலங்கைப் போராக இருந்தால், அல்லது ஒரு சிங்களப் போராகவும் கூட இருந்திருந்தால் அதன் வெற்றியைக் குறிக்குமுகமாக ஏன் பௌத்த கோபு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரங்கள் நிர்மாணிக்கப்படுகின்றன? இவ்வாறு செய்வது ஒரு புராதன சிங்கள-பௌத்த பாரம்பரியமும் அல்ல. எல்லாள மன்னனுடனாக போரில் தனது வெற்றியை நினைவு கூருவதற்கு துட்டகைமுனு மன்னன் கூட எல்லா இடங்களிலும் தாதுகோ புரங்களைக் கட்டியெழுப்பவில்லையே. எல்லாளனுக்கு ஒரு நினைவுச் சின்னத்தை துட்டகைமுனு கட்டினார் என்பதுதான் எல்லோருக்கும் தெரிந்த வரலாறு.

இந்த அரசையும் ஆளும் குடும்பத்தையும் பொறுத்தவரையில் விடுதலைப்புலிகளுக்கு எதிரான போரில் கண்டவெற்றி ஒரு இலங்கை வெற்றியல்ல- சிங்கள வெற்றியும் கூட அல்ல. அது ஒரு சிங்கள - பௌத்த வெற்றி.

தாதுகோபுரங்களை நிர்மாணிக்கும் திட்டம் சிங்கள-பௌத்த இலங்கையொன்றின் உத்தரவாதிகளாக/ பாதுகாவலர்களாக ராஜபக்ஷாக்கள் வகிக்கும் பாத்திரத்தை உருவகப்படுத்தி நிற்பதாகும். அது ராஜபக்ஷாக்களுக்கும் இராணுவத்துக்கும் சிங்கள-பௌத்த பெரும்பான்மையினத்தவர்களுக்கும் இடையேயான தொடர்பை/ இணைப்பை உருவகப்படுத்துகிறது. போரின் முடிவுக்குப் பின்னரான காலகட்டத்தில் அதாவது விடுதலைப் புலிகள் இல்லாதொழிக்கப்பட்டதன் பின்னரான காலகட்டத்தில் தீவிரவாதத்துக்கான தூண்டுவிசை தீவிரவாதக் கருத்துகளைக் கொண்ட அரசியல் அணிகளிடமிருந்து அல்ல, அரசின் உள்ளிருந்தே வருகிறது என்பதற்கான சாத்தியமானளவு தெளிவான அறிகுறியாக இந்த தாதுகோபுரத்திட்டம் அமைகிறது.

கலபொட அத்த ஞானசாரதேரர் என்று ஒருவர் இல்லாமல் இருந்திருந்தால், அப்படியான ஒருவரை ராஜபக்ஷாக்கள் உருவாக்கியிருப்பார்கள். அதிவிரைவாக கலபொட அத்த ஞானசாரதேரர் கண்டிருக்கும் வளர்ச்சியையும் ஆட்சியதிகார பீடத்தினால் அவருக்கு கொடுக்கப்படுகின்ற அனுசரணையையும் அடிப்படையாகக் கொண்டு நோக்கங்கள் அவரை ராஜபக்ஷாக்கள் தான் இந்தளவுக்கு 'பெரிய' ஆளாக்கினார்கள் என்பது புரியும்.

கோட்பாட்டு அளவில் ராஜபக்ஷாக்கள்தான் தேசத்தின், மதத்தின், ஆயுதப் படைகளின் பாதுகாவலர்கள். யதார்த்தத்தில் இந்த மூன்றும் ஆளும் குடும்பத்தின் நோக்கங்களுக்கே சேவை செய்கின்றன. அந்தக் குடும்பத்தின் நலன்களுக்கு அடிமைப்பட்டவைகளாக இருக்கின்றன. ராஜபக்ஷாக்கள் போரில் வெற்றி பெற்ற இராணுவத்துக்குத் தலைமை தாங்கிய தளபதியை மாத்திரம் சிறையில் அடைக்கவில்லை. இராணுவத்திற்குள் இருந்து பொன்சேகா விசுவாசிகளையும் வேட்டையாடினார்கள். ஜெனரல் பொன்சேகாவின் சார்பில் அஸ்கிரிய மற்றும் மல்வத்தை மகாநாயக்க தேரர்கள் பகிரங்கமாக வேண்டுகோள் விடுத்த போது ஒரு வெளிநாட்டு நலன்விரும்பியினால் நன்கொடையாக அந்த பௌத்த பீடங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்ட பாடசாலை பைகளும் காலணிகளும் கொண்ட கொள்கலன்களுக்கு வேண்டுமென்றே அதி கூடுதலான தீர்வைகளை விதித்து ராஜபக்ஷாக்கள் பதிலடி கொடுத்தார்கள்.

ராஜபக்ஷாக்களின் போர் வெற்றிக் குதூகலம் ஒரு சிங்கள-பௌத்த குதூகலம். அது விடுக்கும் செய்தி மிக எளிதானது. சிங்கள- பௌத்த இலங்கைக்கு எதிரிகள் ஏராளம். விடுதலைப் புலிகளைத் தோற்கடித்ததைப் போன்று ராஜபக்ஷாக்கள் இந்த எதிரிகளையும் தோற்கடிப்பார்கள். அவர்களை அதிகாரத்தில் வைத்திருங்கள். இதுவே அந்தச் செய்தி! ■

---

*(09ஆம் பக்கத்தொடர்ச்சி...)*

முன்னாள் இராணுவத்தளபதி அப்தெல் பதாஹ் அல்-சிசி மே 26-28 இல் நடைபெற்ற தேர்தலில் வெற்றி பெற்று ஜனாதிபதியானார். ஹொஸ்னி முபாரக் பதவி கவிழ்க்கப்பட்ட பின்னர் நாட்டில் இடம்பெற்றுவந்த ஆர்ப்பாட்டங்கள் பொருளாதாரத்தைப் படுமோசமாகப் பாதித்து விட்டதாக அந்தத் தேர்தலுக்கு சில தினங்கள் முன்னதாக அல்-சிசி கூறியிருந்தார். எகிப்தில் உண்மையான ஜனநாயகத்தை அடைவதற்கு இன்னும் 20-25 வருடங்கள் தேவை என்றும் கூட அவர் குறிப்பிட்டார்.

ஊடகவியலாளர்களை விடுவிக்குமாறு உலகம் பூராகவுமிருந்து வேண்டுகோள்கள் விடுக்கப்பட்டுக் கொண்டிருக்கும் நிலையில், தான் ஒரு போதும் நீதித்துறையின் செயற்பாடுகளில் தலையீடு செய்யப்போவதில்லை என்று ஜனாதிபதி அல்-சிசி கூறினார். ஊடகவியலாளர்கள் சம்பந்தப்பட்ட வழக்குகள் மிகவும் நேர்மையான முறையில் விசாரிக்கப்பட்டதாகவும் அவர் நியாயம் கற்பித்தார்.

ஊடகவியலாளர்களுக்கு விதிக்கப்பட்ட கொடூரமான தண்டனைகளை மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று அமெரிக்கா வேண்டுகோள் விடுத்தது. ஆனால், ஜனாதிபதி அல்-சிசியைப் பாராட்டிய அமெரிக்க வெளியுறவு அமைச்சர் ஜோன் கெரி எகிப்துக்கான இராணுவ உதவிகள் தடங்கலின்றித் தொடருமென்று (ஊடகவியலாளர்களின் வழக்கில் தீர்ப்பு கூறப்படுவதற்கு ஒருநாள் முன்னதாக) உறுதியளித்தைத் காணக்கூடியதாக இருந்தது. இதைப்பார்க்கும் போது ஜனநாயகத்தைப் பாதுகாப்பதில் அமெரிக்கா உண்மையில் அக்கறையுடன் இருக்கிறதா என்று கேள்வி எழுகிறது.

அடிப்படைச் சுதந்திரங்கள் மீது பற்றுறுதி கொண்ட சகலரும் எகிப்து மீதான நெருக்குதல்கள் தொடருவதை உறுதிப்படுத்த வேண்டியது அவசியமாகும் என்றும் இட்டுக்கட்டப்பட்ட குற்றச்சாட்டுகளின் பேரில் ஒரு ஊடகவியலாளரேனும் சிறையிலடைக்கப்படுவது எல்லா இடங்களிலும் ஊடக சுதந்திரம் மீது தாக்குதல் கொடுப்பதற்குச் சமமானதாகும் என்று அவதானிகள் சுட்டிக்காட்டுகிறார்கள். ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்நாட்டு அரசியல்

# அளுத்கமவுக்கு அப்பாலும்



என்.சத்தியமூர்த்தி

அளுத்கமவில் முஸ்லிம்கள் எதிர்தாக்குதல் நடத்தியமை உண்மையாகவே இருந்தாலும் அதில் எந்தவொரு அமைப்புமே சார்ந்திருக்க வில்லை. பாதிக்கப்பட்ட மக்களே தங்களின் ஆற்றாமையின் வெளிப்பாடாக அதைச் செய்திருக்கக்கூடும்.



அளுத்கம பகுதியில் முஸ்லிம் மக்களும் அவர்களது சொத்துகளும், கடைகளும் தாக்கப்பட்டுள்ளமை நாடு முழுவதும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது. சர்வதேச சமூகமும் இது குறித்து கவலை தெரிவித்துள்ளது. கடந்த சுமார் இரண்டு வருடங்களாக அரங்கேறியுள்ள இது போன்ற தாக்குதல் சம்பவங்களின் பின்னணியில், இஸ்லாமிய சமூகத்தினரிடையே இது கடந்த 1983-ஆம் ஆண்டு தமிழர் மீதான பயங்கர தாக்குதல்களை நினைவுறுத்தியுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

கடந்த முறைகள் போல் அல்லாது, அளுத்கம சம்பவங்களில் இஸ்லாமிய இனத்தவரும் சிங்கள-பௌத்த மக்கள் மீது எதிர்த்தாக்குதல் நடத்தியதாக செய்திகள் தெரிவிக்கின்றன. இதுவும் கவலை அளிக்கும் விடயமே. ஆனால், அனைத்து சம்பவங்கள் குறித்தும் கவலை தெரிவித்துள்ள அரசியல் கட்சித் தலைமைகளும், ஏன், அரசு தலைவர்களும் கூட, மேலதிகமாக குற்றச்சாட்டுகளுக்கு உள்ளாகியுள்ள 'பொது பலசேனா' என்ற சிங்கள-பௌத்த அடிப்படைவாத அமைப்பு குறித்து தெளிந்த கருத்து எதனையும் தெரிவிக்க, மீண்டும் ஒரு முறை தயக்கம் காட்டியுள்ளனர்.

கடந்த காலங்களில், இதுபோன்ற தயக்கங்களே நாட்டில் தென்னிலங்கை தீவிரவாதமும், வடஇலங்கை தீவிரவாதமும் தனித்தனியாக வேரூன்ற முக்கிய காரணமாகியது. அந்தக் காலகட்டத்தில், நாட்டின் அரசு மற்றும் அரசியல் தலைமைகள் இன்னமும் பாடம் கற்கவில்லை என்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பது வேதனை அளிக்கும் விடயமே. இது அண்டை மற்றும் அனைத்து நாட்டு அரசியல்வாதிகளுக்கும் பொருந்தும் என்றாலும், இலங்கை யில் இது ஒரு அரசியல் கலை மற்றும் கலாசாரமாகவே மாறிவிட்டது.

## விசாரணைக் குழு

அளுத்கம சம்பவங்கள் குறித்து விசாரணை நடத்த உயர்மட்டக் குழு வொன்றை அமைக்க இருப்பதாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அறி வித்துள்ளார். சம்பவம் நடந்த காலத் தில் வெளிநாட்டுப் பயணம் மேற் கொண்டிருந்த அவர், நாடு திரும் பியதும் முதல் வேலையாக அளுத் கம பகுதிக்கு விஜயம் மேற்கொண்டு, பாதிக்கப்பட்ட மக்களைச் சந்தித்து ஆறுதல் கூறினார். இடைப்பட்ட காலத்தில் எந்த மத அமைப்பையும் தடைசெய்யப் போவதில்லை என் றும் அவர் அறிவித்துள்ளார். அந்த வகையில், நாள்பட்டு விசாரணைக் குழுவின் அறிக்கையின் அடிப்படை யில் ஜனாதிபதி எந்தவித நடவ டிக்கை எடுக்கப்போகிறார் என்றும் நாடு எதிர்பார்க்கிறது.

அளுத்கமவில் இஸ்லாமிய இனத்த வர் மறுதாக்குதல் நடத்தியமை உண் மையாகவே இருந்தாலும், அது எந்த ஒரு அமைப்பும் சார்ந்திருக்கவில்லை என்பதே தற்போதைய நிலைமை. பாதிக்கப்பட்ட மக்களே தங்களது ஆற்றாமையின் வெளிப்பாடாக இந் தத் தாக்குதல்களை மேற்கொண் டுள்ளதாக எண்ணவும் இடமிருக்கி றது. அந்த ஆற்றாமை இஸ்லாமிய இனத்தவரின் அரசியல் கட்சிகளாகத் தங்களைப் பிரகடனப்படுத்திக் கொள்ளும் பல்வேறு தலைமைக ளின் மீது அதிகரித்துவரும் நம்பிக்கை யின்மையின் வெளிப்பாடாகவும் இருக்கலாம். இதுவும் நல்ல வகையி லான மாறுதல் அல்ல.

இதற்கு மாறாக, இந்தத் தாக்குதல்க ளில் பங்குபெற்ற சிங்கள-பௌத்த குழுக்கள் அமைப்பு சார்ந்தவை என்றே தெரிகிறது. தாக்குதல் சம்ப வங்களுக்குக் காரணமான வாகன விபத்து நடைபெற்ற சில மணித்தியா லங்களினிடையே அந்தக் குழுக்கள்






தங்களை தயார்படுத்திக் கொண்டுள் ளதாகச் செய்திகள் கூறுவதும் மன தில் கொள்ளப்பட வேண்டிய விட யம். பொதுபலசேனா போன்ற இந்த அமைப்பு சார்ந்த குழுக்கள், சிங்கள- பௌத்த அரசியல் கட்சிகளுக்கு அப் பால்பட்டு இயங்குவதும் குறிப்பில் கொள்ளப்பட வேண்டிய விடயம்.

என்றாலும், தென்னிலங்கையின் எந்தவொரு அரசியல் கட்சியும் அவ ற்றின் மனத்தளவில் இது போன்ற அமைப்புகளைக் கண்டனம் செய்யா தமை வருந்தத்தக்க விடயம். இன் னும் சொல்லப்போனால், மனது ‘சரி’ என்று ஏற்றுக்கொண்ட விடயத்தை, வாக்கு சாதுரியத்தால் ஏனோ- தானோ நிலைக்கு மாற்றிவிட்டதை இந்தக் கட்சித் தலைமைகள் மறுத்து விடமுடியாது. இஸ்லாமிய கட்சிக ளும் இந்தக் குற்றச்சாட்டில் இருந்து தப்பிவிடமுடியாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திரும்பிப் பார்க்கும் சரித்திரம்

சிங்கள-பௌத்த அடிப்படைவாதிகள், நாட்டில் உள்ள பிற இனத்தவரை எதிர்ப்பதும் அவர்கள் மீது தாக்குதல் நடத்துவதும் இன்று, நேற்று துவங்கிய விடயமல்ல. நாடு சுதந்திரம் பெற்ற காலத்தில், மலையகத் தமிழர்கள் சட்டம் மற்றும் அரசியல யாப்பின் துணையோடு 'இல்லாமல்' ஆக்கப்பட்டனர். சட்ட-திட்டங்களில் அண்மைக் காலங்களில் மாற்றம் ஏற்பட்டாலும், அந்த மக்களின் அவலங்கள் இன்றளவும் தொடர்கின்றன.

பின்னர், 1956 'சிங்களம் மட்டும்' மொழிக் கொள்கையால், 'இலங்கைத் தமிழர்' என்ற அடுத்த இனத்தவரும் குறிவைக்கப்பட்டனர். அன்று தொடங்கி, 2009-ஆம் ஆண்டு இனப்போர் முடிவுற்ற காலம் வரையிலான வரலாற்றை இலங்கை என்றென்றைக்கும் மறந்து விடமுடியாது. இன்று, முடிவுறாத அந்தப் புத்தகத்தின் அடுத்த அத்தியாயமாக இஸ்லாமிய இனத்தவர் மீதான தாக்குதல்கள் காணப்படுகின்றன. இது, சரித்திரம் மீண்டும், மீண்டும் விஜயம் செய்து நாட்டை எள்ளி நகையாடுகிறதோ என்ற சந்தேகத்தைத் தோற்றுவித்துள்ளது.

இந்த பல்வேறு காலகட்டங்களில், இலங்கை அரசு தலைமை இரு பெரும் அரசியல் கட்சிகளிடையே மாறி, மாறி இருந்து வந்துள்ளது. பிரதமர் பதவியானாலும் சரி அல்லது பின்னர் தோன்றிய அதியுயர் அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக இருந்தாலும் சரி, பல்வேறுபட்ட சமூகப் பின்னணி கொண்ட தலைவர்கள் அதனை அலங்கரித்துள்ளனர். என்றாலும், பல்வேறு காலகட்டங்களிலும் அவர்கள் அனைவருமே சிங்கள-பௌத்த பேரினவாதத்தை நேரடியாக எதிர்நோக்க, எதிர்க்க முழு மனதுடன் செயற்படவில்லை என்பதே உண்மை.

சமகாலத்தில், தென்னிலங்கை அரசியல்வாதிகள், இனப்பிரச்சினையை மேற்கோள்காட்டி, இந்தியாவில், தமிழ் நாட்டு அரசியல்வாதிகள், 'போட்டி மனப்பான்மை'யுடன் செயற்படுவதாக குற்றஞ்சாட்டிவந்துள்ளனர். அதில் உண்மையும் இருக்கிறது. ஆனால், தங்கள் நாட்டிலேயே, அவர்கள் இத்தகைய போட்டி மனப்பான்மையுடன் தான், இனப்பிரச்சினையின் பல்வேறு அலகுகளையும், பல்வேறு காலகட்டங்களில் எண்ணெய் வார்த்து எரியூட்டி வந்துள்ளனர்.

இதற்கு, அரசியல் அறியாதவர் என்று கருதப்பட்ட மறைந்த பிரதமர் சிறிமாவோ போன்ற பெண்மணியும் விதிவிலக்கு அல்ல என்பதும் வருந்தத்தக்க விடயம். அவரது தலைமையில், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஆட்சியில் இருந்த காலத்தில் தான், நாடு சுதந்திரம் பெற்ற காலத்தில், அரசியல் யாப்பு மூலம் சிறுபான்மையினருக்கு வழங்கப்பட்ட பாதுகாப்புகள் இல்லாது ஆக்கப்பட்டன. அவரது கணவர் பண்டாரநாயக்க பிரதமராக இருந்த போது 'சிங்களம் மட்டும்' என்ற கொள்கை முடிவும், சிறிமாவோ காலத்திய 1971-ஆம் ஆண்டின் புதிய அரசியல் யாப்பின் மூலம் இலங்கை, 'சிங்கள-பௌத்த' நாடாக பிரகடனப்படுத்தப்பட்டது.

அது போன்றே நாட்டின் மூத்த கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சியும் அமைந்தது. இன்னும் சொல்லப்போனால், அந்தக் கட்சியின் தலைமையின் கீழ் தான், மலையகத் தமிழர்கள் பிரஜாவுரிமை இல்லாதவர்களாக ஆக்கப்பட்டனர். பின்னர், 1983-ஆம் ஆண்டு தமிழர் மீதான தாக்குதல்களில் கூட கட்சியின் அமைச்சர்கள் பங்கு பெற்றனர் என்று கூட அறிக்கைகள் தெரிவித்தன. அந்த வகையில், தீவிரவாதத்திற்கும் இனப்போருக்கும் வித்திடப்பட்டதும் அந்தக் காலகட்டத்தில் தான்.

அந்த வகையில், தமிழர் தலைமை கூறி வருவது போல், சிங்கள-பௌத்த பேரினவாதம் நாட்டில் நிலைகொண்டுள்ளது என்ற குற்றச்சாட்டை ஒரேயடியாக மறுத்துவிட முடியாது. அதுபோன்றே, பொதுவாக இனவாதத்தை ஏற்றுக்கொள்ளாத தென்னிலங்கை அரசியல் கட்சிகளும் அவற்றின் பல்வேறு தலைவர்களும் கூட, தேர்தல் காலத்தை மனதில் வைத்து பேரினவாத அழிவு சக்திகளை அடக்குவதற்கோ, அவற்றை எதிர்த்து குரல் கொடுப்பதற்கோ தயாராக இல்லை என்பதும் வருந்தத்தக்க விடயம்.

### பேரினவாதமும், தமிழ்த் 'தேசியவாதமும்'

அன்றும், இன்றும், என்றும், ஜனாதிபதித் தேர்தல் உட்பட்ட அனைத்து தேர்தல்களிலும், வெற்றி-தோல்வியை நிர்ணயிப்பது, பேரினவாதம் அல்ல. இன்னும் சொல்லப்போனால், தமிழர் தரப்பில் தொடர்ந்து வந்துள்ள 'தேசியவாத' அரசியலுக்கு உள்ள செல்வாக்கும் தேர்தல் முடிவுகளை நிர்ணயிக்கும் சக்தியும் சிங்கள-பௌத்த பேரினவாதிகளுக்கு இல்லை என்பதே உண்மை. உதாரணத்திற்கு, தற்போதைய சூழ்நிலையில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மீண்டும் ஒரு முறை தேர்தலில் போட்டியிட்டு வெற்றிபெற்றால், அதற்கான காரணம் விடுதலைப் புலிகள் இயக்கத்தோடு சம்பந்தப்பட்ட தீவிரவாத அழிப்பின் காரணமாகக் கூட இன்னமும் இருக்கலாம். அதே சமயம், அத்தகைய தேர்தலில் அவர் வெற்றி வாய்ப்பை இழந்தால், அதற்கு, விலைவாசி உட்பட்ட பல்வேறு காரணங்கள் இருக்கலாம். பேரினவாதிகளின் வாக்குவங்கி அதற்கு காரணமாக இருக்க முடியாது.

இது தான் சரித்திர உண்மை. ஆனால், இதனை ஏற்றுக்கொண்டு செயற்பட, தென்னிலங்கை அரசியல் தலைமைகள் தயாராக இல்லை. அவர்களைப் பொறுத்தவரையில் இல்லாத ஒரு வாக்கு வங்கியை மனதில் வைத்துக்கொண்டு அரசியல் செய்வது வாடிக்கையான விடயம். அதனை முன்வைத்து 'தமிழ்த் தேசிய' அரசியல் செய்வது, வட இலங்கை அரசியல் தலைமைகளுக்கும் பிடித்துப் போன ஒரு விடயம். தமது மக்கள் தங்களுக்கு அளிக்கும் அல்லது அளிக்காத - தேர்தல் வெற்றிக்கு எங்கெங்கோ காரணம் தேடுவதை இரு தரப்பினருமே வழக்கமாக்கிக் கொண்டுள்ளனர் என்பதே உண்மை.

இன்னும் சொல்லப்போனால், தமி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ழூர் பகுதியில் 'தமிழ்த் தேசியத்திற்கு' உள்ள தேர்தல் செல்வாக்கு கூட, தென்னிலங்கையில் பேரினவாதிக ளுக்கு இருந்ததற்கான எந்தவித சான் றும் இல்லை. எண்பதுகளின் இறுதிப் பகுதியில், பேரினவாத அரசியல் செய்ததாகக் கருதப்படும் ஜே.வி.பி மற்றும் அன்றைய பிரதமர் ரணசிங்க பிரேமதாச ஆகியோர் கூட அதனை இந்திய-எதிர்ப்பு என்ற வளையத்திற் குள்ளேயே நிறுத்த வேண்டிய கட் டாயம் இருந்தது.




அவர்கள் தங்களது எதிர்ப்புகளை தமிழர் மீது காட்டியதை விட, இந்திய அரசின் மீதே காட்டவேண்டிய கட் டாயத்திற்கு, தென்னிலங்கை மக்க

**சுமார் இரண்டு வருடங்களாக அரங்கேறி வந்துள்ள முஸ்லிம்கள் மீதான தாக்குதல்கள் காரணமாக அந்தச் சமுதாயம் சார்ந்த அரசியல் தலைமைகள் செய்வதறியாது திகைத்து நிற்கிறார்கள். அதுவும் அளுத்கமவுக்கு அப்பால் அவர்களது சமூகத்தினர் இனந்தெரியாத கவலைக்கும் கலவரத்திற்கும் உள்ளாகியுள்ளது கண்கூடு.**

ளின் இனப்பிரச்சினை குறித்த தெரி தல் மனப்போக்கே காரணம் என லாம். இன்றும் கூட, இனப்பிரச்சினை தீர்வை எதிர்க்கும் தென்னிலங்கை அரசியல் தலைமைகள் கூட, அதனை இன எதிர்ப்பு என்ற வட்டத்திற்குள் நிறுத்தாமல், நாட்டின் பாதுகாப்பு என்ற பெரியதொரு வளையத்திற் குள்ளேயே எடுத்துச் சென்றுள்ளனர். அதுவும் காலத்தின் கட்டாயம்.

### இன வன்முறையின் முன்னோடி?

கடந்த சுமார் இரண்டு வருடங் களாக அரங்கேறிவந்துள்ள முஸ்லிம் இனத்தவர் மீதான தாக்குதல்கள் கார ணமாக, அந்தச் சமுதாயம் சார்ந்த அரசியல் தலைமைகள் செய்வதறி யாது திகைத்து நிற்கிறார்கள். அது வும், அளுத்கமவுக்கு அப்பால், அவர்களது சமூகத்தினர், இனம் தெரி யாத கவலைக்கும், கலவரத்திற்கும் உள்ளாகியுள்ளது கண்கூடு.

இஸ்லாமிய இனம் மற்றும் அரசி யல் தலைமைகள், எங்கே 1983-ஆம் ஆண்டு தமிழர்களுக்கு நேர்ந்த கதி தங்களுக்கும் தற்போது ஏற்படும் சூழல் உருவாக்கப்பட்டு வருகிறதோ என்ற கவலையில் ஆழ்ந்துள்ளனர். என்றாலும், அன்றைய-இன்றைய தமிழ்த் தலைமைகளைப் போலவே, அவர்களும் பிரிந்து நின்றே அரசி யல் செய்கின்றனர்.

இலங்கையில் இன வன்முறையின் முன்னோடி என்று பார்த்தால், அது 1915-ஆம் ஆண்டின் சிங்கள-முஸ் லிம் தாக்குதல்களே ஆகும் என்று கூறலாம். சுமார் நூறு ஆண்டுகளுக் குப் பிறகு சரித்திர சக்கரம் மீண்டும் சுழல்கிறதோ என்ற கவலை அந்த இனத்தவர்களுக்குத் தோன்றினால், அது நியாயமான கவலை தான். அத னைத் துடைப்பது, அரசினதும், தென் னிலங்கை மிதவாத அரசியல் தலை மைகளினதும் கடமை. அந்தக் கடமையில் இருந்து அவர்கள் விலகி நிற்பார்களேயானால், அண்மைக் கால சரித்திரம் திரும்புவதற்கு அவர் களே வித்திட்டவர்களாக மாறிவிடும் அபாயம் கூட இருக்கிறது.


சுதந்திர இலங்கையில் பல்வேறு காலகட்டங்களில், பேரினவாதிகள் பல்வேறு வாதங்களை முன்வைத்து, சிறுபான்மை இனத்தவரை அடுத்த டுத்து அரசியல் மற்றும் வன்முறை வாயிலாக குறிவைத்து வந்துள்ளனர். அந்த வகையில், மலையகத் தமிழர் கள், அவர்களைத் தொடர்ந்து இலங் கைத் தமிழர்கள், பின்னர் இஸ்லாமி யர் என்று அரசியல் மற்றும் அரசு தாக்குதல்கள் மற்றும் பேரினவாத குழுக்களின் வன்முறைக்கு ஆளாகி வந்துள்ளனர்.

இவற்றில் ஒரு சில குறிபார்த்தலும், தாக்குதல்களும் கூட இன அரசிய லுக்கு அப்பால் சென்றே அரங்கேறி யது. மலையகத் தமிழர்களுக்கு எதி ரான அரசியலும், தாக்குதலும், இன அரசியலின் அடிப்படையில் நடை பெறவில்லை. மாறாக, சமூக-பொருளாதார காரணங்களினாலும், வேலை வாய்ப்பை அடிப்படையா கக் கொண்ட சிங்கள அரசியலாலும் ஏற்பட்டது. இலங்கைத் தமிழ் இனத்த வர்களுக்கு அச்சுறுத்தலாக உரு வெடுத்த 'சிங்களம் மட்டும்' என்ற மொழிக் கொள்கை கூட வேலை வாய்ப்பை அடிப்படையாகக் கொண்ட வாக்குவங்கி அரசியலின் ஒரு பரிமாணமே.

*(31ஆம் பக்கம் பார்க்க...)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்நாட்டு அரசியல்



பி.பேர்ட்டி ரணவீரகே



1983 ஜூலை வன்முறையின் போது...



2014 ஜூன் அளுத்கம வன்முறை

# இலங்கை மீண்டும் ஒரு கொலைக் களமாக மாறுமா?

1983 ஜூலை வன்முறைகளுக்கு திட்டம்தீட்டிக் கொடுத்த சிங்கள தீவிரவாதிகளும் எல்லே குணவன்ச, சிறில் மெத்தியூ போன்ற அவர்களின் தலைவர்களும் தாங்கள் செய்த அட்டூழியங்கள் 26 வருடகாலம் நீடிக்கக்கூடிய உள்நாட்டுப் போர் ஒன்றைத் தோற்றுவிக்கும் என்று கனவிலும் நினைத்துப் பார்த்திருக்கமாட்டார்கள்

1983 ஜூலையளவில் ஆயுதமேந்திய 80 விடுதலைப்புலிகள் இயக்கப் போராளிகள் மாத்திரமே இருந்தனர் என்று கருணா அம்மான் ஒரு தடவை ஊடகங்களில் கூறியிருந்தார் என்று எனக்கு ஞாபகம். கறுப்பு ஜூலை நாட்களில் தமிழர்களையும் அவர்களது சொத்துகளையும் பாதுகாக்க அன்றைய ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்தன எதையும் செய்யவில்லை. தங்களது உயிர்களைப் பாதுகாத்துக் கொள்ளக்கூடியதாக இருந்த தமிழர்களை வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு அனுப்பிவைப்பதைத் தவிர அவருக்கு வேறுவழியிருக்கவில்லை. அவ்வாறு வடக்கு, கிழக்கிற்கு சென்ற தமிழர்களில் இளைஞர்களில் பெருமளவானவர்கள் சிங்களவர்களைப் பழிவாங்கவேண்டுமென்ற நோக்கில் அல்லது தமிழர் பிரச்சினைக்கு தனித் தமிழ் ஈழத்தைத் தவிர வேறு தீர்வேயில்லை என்ற நம்பிக்கையில் விடுதலைப் புலிகள் இயக்கத்தில் இணைந்துகொண்டார்கள் என்பது எல்லோருக்கும் தெரியும். அந்த இயக்கத்தை விட்டு தான் வெளியேறிய தருணத்தில் போராளிகளின் எண்ணிக்கை 40 ஆயிரத்தைத் தாண்டியிருந்தது என்றும் கருணா அம்மான் கூறியிருந்தார்.

1983 இல் தமிழர்களுக்கு எதிராக நாடுபூராவும் கட்டவிழ்த்துவிடப்பட்ட வன்முறைகளுக்கு திட்டத்தைத் தீட்டிக் கொடுத்த சிங்களத் தீவிரவாதிகளும் எல்லே குணவன்ச மற்றும் சிறில் மத்தியூ போன்ற அவர்களின் தலைவர்களும் தாங்கள் செய்த அட்டூழியம் 26 வருடகாலம் நீடிக்கக்கூடிய கொடூரமான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்நாட்டுப் போரொன்றைத் தோற்று விக்கும் என்று தங்களது கனவிலும் ஒருபோதும் நினைத்துப் பார்த்திருக் கமாட்டார்கள். அதனால், இரத்த வெறி பிடித்த பொதுபலசேனாவின் பயங்கரவாதம் மேலும் பேரழிவுக ளைத் தரக்கூடிய வன்முறைகளையும் இரத்தக்களரிகளையும் தோற்றுவிக் கக்கூடிய தீவிரவாதத்தை நோக்கி சோனகர்களை/ முஸ்லிம்களைத் தள்ளிவிடுமா என்ற கேள்வியை நாம் கேட்க வேண்டியிருக்கிறது.

கறுப்பு ஜூலை நாட்களின் போது ஜே.ஆரும் ரணசிங்க பிரேமதாசவும் செய்ததை இன்றைய அரசாங்கமும் செய்யும் என்று எவருமே ஒரு போதுமே நினைத்ததில்லை. குண்டர் களும் கொலைகாரர்களும் தங்களது வேலையைச் செய்து முடிக்கும் வரை, தமிழர்களின் படுகொலைக்கு எதிராக ஜெயவர்தன ஒரு வார்த்தை கூடப் பேசவில்லை என்பது எம் மெல்லோருக்கும் நினைவிருக்கிறது. அதேபோன்றே மகிந்த ராஜபக்ஷ அரசாங்கமும் அளுத்கம அட்டூழி யங்களை நிறுத்துவதற்கு அர்த்தமு டைய நடவடிக்கைகளை எடுக்க வில்லை. மத அல்லது இன அடிப்ப டையில் மற்றவர்கள் மீது தாக்குதல் நடத்துவதைத் தவிர்க்குமாறு மக்களு க்கு வேண்டுகோளொன்றை விடுப்ப தற்கு ஜூன் 15 ஆம் திகதியிருந்து ஜூன் 21 ஆம் திகதிவரை ஜனாதிபதி காத்திருந்தார்.

பொதுபலசேனா குண்டர்களினால் இரவில் கடத்திச் செல்லப்பட்ட வட்ட ரக்க விஜித தேரர் மீது மேற்கொள்ளப் பட்ட கொடூரமான தாக்குதல், இனங் கள் மத்தியில் நல்லுறவு நிலவ வேண்டுமென்பதற்காகக் குரல் கொடுக்கின்றவர்களைப் பொறுத்துக் கொள்ளாத ஒரு பாசிச இயக்கமே பொதுபலசேனா என்பதை மீண்டும் ஒரு தடவை நிரூபித்திருக்கிறது. 1987 தொடக்கம் 1990 வரை அரசி யலமைப்புக்கான 13ஆவது திருத் தத்தை ஆதரித்தவர்களை கொலை செய்த ஜனதா விமுக்தி பெரமுனை (ஜே.வி.பி)யின் 'தேசபக்தப் படை' யின் கொடூரத்தை இச்சம்பவம் எங்க ளுக்கு நினைவுபடுத்துகிறது.

பொதுபலசேனாவை உடனடியா கத் தடைசெய்து அதன் குண்டர்களை பல வருடங்களுக்குச் சிறையில் அடைத்து அவர்களின் அட்டூழியங் களைத் தடுத்து நிறுத்தாவிட்டால், அவர்கள் சிறுபான்மையினத்தவர்க ளுக்கு எதிரான பயங்கரவாதத்தை தொடரவே செய்வார்கள் என்பதிற் சந்தேகமேயில்லை. முஸ்லிம்கள் மீதும் அவர்களின் உடைமைகள் மீதும் மேலும் பல தாக்குதல்களை நாம் எதிர்பார்க்கலாம். குண்டர்கள் சிறுபான்மையினத்தவர்களை மாத்தி ரமல்ல, தங்களுக்கு எதிரான சிங்கள வர்களையும் தாக்குவார்கள்.





**கறுப்பு ஜூலை நாட்களின் போது குண்டர்களும், கொலைகாரர்களும் தங்கள் வேலையை செய்துச் முடிக்கும்வரை தமிழர்களின் படுகொலைக்கு எதிராக ஜனாதிபதி ஜெயவர்தன ஒரு வார்த்தைகூடப் பேச வில்லை. அதேபோன்றே மகிந்த ராஜபக்ஷ அரசாங் கமும் அளுத்கம அட்டூழியங்களை நிறுத்துவதற்கு அர்த்தமுள்ள நடவடிக்கைகளை எடுக்கவில்லை**

பொதுபலசேனாவை ஆட்சியாளர் கள் ஓராட்டிச் சீராட்டிக் கொண்டி ருக்கும் நிலையில் அந்த இயக்கம் முஸ்லிம்கள் மீதான தாக்குதல்களைத் தொடரவே செய்யும். இது முழு நாட் டுக்குமே பெரும் அனர்த்தம். ஏனென் றால் பொதுபலசேனாவின் பாசிசத் தையும் அதனால் ஏற்படக்கூடிய விளைவுகளின் பாரதூரத்தன்மையை யும் அரசாங்கம் விளங்கிக்கொள்ள வில்லை. முஸ்லிம்கள் தொடர்ந்து தாக்கப்பட்டுக் கொண்டிருப்பார்களே யானால், தங்களது சமூகத்தைப் பாது காக்க முஸ்லிம் இளைஞர்கள் போராட்டத்திலிறங்க நிர்ப்பந்திக்கப் படக்கூடும். ஈராக், சிரியா, பாகிஸ் தான் மற்றும் நைஜீரியா போன்ற நாடுகளை நரகமாக மாற்றியிருக்கும் முஸ்லிம் தீவிரவாதம் தற்போதைய சூழ்நிலையைப் பயன்படுத்தி இலங் கைக்கும் அதன் கொடுக்குகளை நீட்டும். பௌத்தர்களைப் பொறுத்த வரை மற்றவர்களைக் கொல்வது அல்லது தற்கொலை செய்வது நரகத் துக்கான பாதையைத் திறந்துவிடும் ஒரு பாவமாக இருக்கிறது என் றாலும், இஸ்லாத்தின் பெயரில் கொலைசெய்வதென்பது முஸ்லிம் களைப் பொறுத்தவரை சொர்க்கத்துக் கான பாதையைத்திறந்து விடுமென்று நம்பப்படுவதாகக் கூறப்படுகிறது. எதிரிகளையும் மதத்துக்கு முரணான வர்களையும் கொலை செய்வதற்கு முஸ்லிம்களுக்கு தூண்டுதல் அளிக் கின்ற அம்சங்களில் ஒன்றாக இது இருக்கக்கூடும். எனவே, தீவிரவாதப் போராட்டத்தை நோக்கி முஸ்லிம்க ளைத் தள்ளுவது நினைத்துப் பார்க்க முடியாத அனர்த்தங்களை இலங் கைக்குக் கொண்டுவரும். இது சிங்களவர்களுக்கும் முஸ்லிம்களுக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கும் மாத்திரமல்ல, நாட்டின் பொருளாதாரத்துக்கும் பேரிடராக அமையும். இலங்கையைச் சேர்ந்த தொழிலாளர்களை வேலைக்குச் சேர்த்துக் கொள்வதை மட்டுப்படுத்த மத்திய கிழக்கு நாடுகள் தீர்மானிக்கும் நிலை வந்தால், இலங்கைப் பொருளாதாரத்தின் மீதான அதன் தாக்கம் பெரும் கேடானதாக இருக்கும்.

பொதுபலசேனாவை அரசாங்கம் தடைசெய்யும் என்று நாம் எதிர்பார்ப்பதனால், அது ஒரு பகற்கனவாக மாத்திரமே இருக்கும். ஏனென்றால், கண்ணுக்குப் புலப்படாதவகையில் அந்த இயக்கத்தின் ஒரு நேச அணியாக அரசாங்கம் இருக்கிறது. அமைச்சர்கள் ரவூப் ஹக்கீமும் ரிஷாத் பதியுதீனும் கேட்டுக்கொண்டதற்கிணங்க பொதுபலசேனாவைத் தடைசெய்யப் போவதில்லை என்று ஜனாதிபதி ஏற்கனவே அறிவித்துவிட்டார். எதிர்காலத் தேர்தல்களில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் கீழ் சில வேட்பாளர்களை பொதுபலசேனா களமிறக்குவதற்கான சாத்தியங்களையும் நிராகரிப்பதற்கில்லை. சுதந்திரமுன்னணியையும் தற்போதைய ஜனாதிபதியையும் மீண்டும் அதிகாரத்துக்குக் கொண்டுவருவதற்காக பொதுபல சேனா அதனால் சாத்தியமான சகலதையும் செய்யும். ஏனென்றால், ராஜபக்ஷ அரசாங்கத்தின் 'தாராள மனப்பான்மை'யில் தான் அந்த இயக்கத்தின் எதிர்காலமே தங்கியிருக்கிறது.

எதிர்கால தேர்தல் பிரசாரங்களின் போது பொதுபலசேனா தனக்கு பிரதான அச்சுறுத்தலாக இருக்கும் என்பதை ஐக்கிய தேசியக்கட்சி இதுவரை விளங்கிக்கொண்டதாக இல்லை. ஐ.தே.க.வின் தேர்தல் கூட்டங்களைத் தாக்குவதற்கும் குழப்பியடிப்பதற்கும் பொதுபலசேனாவை அரசாங்கத்தின் சில தலைவர்கள் பயன்படுத்துவார்கள் என்று நான் நம்புகிறேன். ஐ.தே.க.வின் கூட்டங்களைத் தாக்குவதற்கு பெற்றோல் குண்டுகளையும் துப்பாக்கிகளையும் பயன்படுத்துவற்கும் கூட அவர்கள் தயங்கமாட்டார்கள். இத்தகைய அச்சுறுத்தலின் பாரதூரத்தன்மையை விளங்கிக் கொள்ளாதவர்களாக இருக்கும் ஐ.தே.க.வினர் அடுத்த வருட ஜனாதிபதித் தேர்தலில் ரணில் அல்லது கரு ஜெயசூரிய தெரிவு செய்யப்படுவார்கள் அல்லது தெரிவாக அனுமதிக்கப்படுவார்கள் என்று கனவுலகில் சஞ்சரித்துக்கொண்டிருக்கிறார்கள்.

பௌத்த மதத்தின் பெயரில் கொலை செய்வதற்குத் தயாராயிருக்கும் சிங்கள -பௌத்த கடும் போக்காளர்கள் மத்தியில் பாசிச பொதுபல சேனாவின் செல்வாக்கு அதிகரித்துக் கொண்டிருக்கும் நிலையில், அந்த இயக்கம் ஜாதிகஹெல உறுமயவினதும் விமல்வீரவன்சவின் தேசிய சுதந்திர முன்னணியினதும் எதிர்காலத்துக்கு அச்சுறுத்தலைத் தோற்றுவித்திருக்கிறது. அதன் காரணத்தினால்தான் தனது கட்சியினால் நிறைவேற்றப்பட்ட 12 யோசனைகளை நடைமுறைப்படுத்தாவிட்டால் இராஜினாமா செய்யப்போவதாக வீரவன்ச அரசாங்கத்தை அச்சுறுத்திக் கொண்டிருக்கிறார். பொதுபலசேனா எதிர்காலத் தேர்தல்களில் போட்டியிடும் பட்சத்தில், தங்களது ஆதரவாளர்கள் தங்களைக் கைவிட்டு அந்த இயக்கத்தின் பால் திரும்புவதைத் தடுக்குமுகமாக ஜாதிகஹெல உறுமயவும் தேசிய சுதந்திரமுன்னணியும் பல்வேறு வகையான அரசியல் சாகசங்களில் இறங்குவதற்கு ஏற்கனவே நிர்ப்பந்திக்கப்பட்டிருக்கின்றன. அதனால், 2015ஆம் ஆண்டு பாராளுமன்றத் தேர்தலும் ஜனாதிபதித் தேர்தலும் நடத்தப்படுமென்று எதிர்பார்க்கப்படுகின்ற நிலையில், ஜாதிகஹெல உறுமயவினதும் சுதந்திர முன்னணியினதும் தலைவர்களும் இரத்தத்தை



உறைய வைக்கும் வகையிலான 'தேசபக்தப்' பேச்சுகளை நிகழ்த்துவர் என்று நிச்சயமாக எதிர்பார்க்க முடியும்.

தர்கா நகர், பேருவளை, வெலிப்பன்ன மற்றும் அளுத்கமவில் வன்முறைகளைத் தடுத்து நிறுத்த ஏன் அரசாங்கம் தவறியது என்று நீதியமைச்சரான ஹக்கீமும் சிரேஸ்ட அமைச்சரும் கம்யூனிஸ்ட் தலைவருமான

**பொதுபல சேனாவை ஆட்சியாளர்கள் ஓராட்டிச் சீராட்டிக்கொண்டிருக்கும் நிலையில் அந்த இயக்கம் முஸ்லிம்கள் மீதான தாக்குதல்களைத் தொடரவே செய்யும். இது முழு நாட்டுக்குமே பெரும் அனர்த்தம். பொதுபல சேனாவின் பாசிசத்தையும் அதனால் ஏற்படக்கூடிய விளைவுகளின் பாரதூரத்தன்மையையும் அரசாங்கம் விளங்கிக்கொள்ளவில்லை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டியூ குணசேகரவும் கேட்டார்கள். தாங்கள் அரசாங்கத்தில் அங்கம் வகிக்கிறார்கள் என்பதை அவர்கள் இருவரும் மறந்துவிட்டார்கள் என்பது பெரும் பரிதாபகரமான ஒரு விடயம். ராஜபக்ஷ அரசாங்கம் அந்த வன்முறைகளைத் தடுக்க விரும்பவில்லை. ஏனென்றால் அதன் அதிகாரம் சிங்கள பௌத்தர்களை அடியாதாரமாகக் கொண்டது. அரசாங்கம் பதவியில் தொடர்ந்தும் இருப்பதற்கும் மீண்டும் அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கும் அதன் வாக்காளர் தளத்தை எதுவிதத்திலும் அசௌரியப்படுத்த விரும்பவில்லை. அந்த வாக்காளர்தளத்தை தாஜாபண்ண வேண்டியிருக்கிறது. இதை ஹக்கீமும் குணசேகரவும் புரிந்துகொள்ள வேண்டும்.

முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறைகளை அரசாங்கத்தினால் மத்திரமல்ல, எதிரணிக்கட்சிகளினாலும் குறிப்பாக ஐ.தே.க.மற்றும் ஜே.வி.பி. யினாலும் கூட தடுத்திருக்க முடியும். பொதுபலசேனாவின் பாசிசத்துக்கு எதிராக வலிமையான பிரசாரங்களை இக்கட்சிகளினால் முன்னெடுத்திருக்க முடியும். பொதுபலசேனாவின் நிகழ்ச்சித்திட்டம் நாசகாரத்தனமானது என்று மக்களை நம்பவைத்து அந்த இயக்கத்தின் பைத்தியக்காரத்தனத்துக்கு எதிராக மக்களை அணி திரட்டியிருக்க முடியும். ஆனால், ஐ.தே.க. அவ்வாறு செய்யத்தவறி விட்டது. ஏனென்றால், அது இப்போது எந்தவொரு தெளிவான பயணத்திட்டமும் இல்லாத நிலையில், அரசியல் வனாந்தரத்தில் நிராதரவாக நிற்கும் ஒரு கட்சியாக இருக்கிறது. அக்கட்சி குழம்பிப்போயிருக்கிறது. ஜே.வி.பி.யைப் பொறுத்தவரை, அதற்கு தனது முன்னாள் தோழர்களுக்கு எதிராகப் பிரசாரமொன்றை முன்னெடுப்பதில் அக்கறையில்லை. சிங்கள- பௌத்த வாக்காளர் தளத்தை இழக்க வேண்டியேற்படுமே என்ற அச்சம் தான் இதற்குக் காரணமேயன்றி வேறு ஒன்றுமில்லை.

முஸ்லிம் காங்கிரஸும் முஸ்லிம் அமைச்சர்களும் கூட, முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறைகளை ஓரளவுக்கேனும் தடுத்திருக்க முடியும். அதற்கு அவர்கள் சரியான தருணத்தில் தீர்க்கமான முறையில் செயற்பட்டிருக்க வேண்டும். ராஜபக்ஷ அரசாங்கத்தின் ஒரு அங்கமாக இருப்பதன் வாயிலாக தாங்கள் அனுபவித்துக்கொண்டிருக்கின்ற வசதிவாய்ப்புகளுக்கும் வரப்பிரசாரங்களுக்கும் பிரியாவிடை கொடுக்க முஸ்லிம் அமைச்சர்கள் தயாரில்லாததாலேயே அவர்கள் தீர்க்கமான முறையில் செயற்படத் தயங்கினார்கள், தொடர்ந்தும் தயங்குகிறார்கள் என்று கருதினால் அதில் தவறு இல்லை.

இப்போது இலங்கை நெருக்கடியானதும் இடர்மிக்கதுமான ஒரு கட்டத்தை எட்டியிருக்கிறது. பொதுபலசேனாவும் சிங்கள ராவயவும் ராவண பலயவும் இன்னொரு உள்நாட்டுப் போருக்குத் தயாரிப்புகளைச் செய்து கொண்டிருக்கின்றன. இந்தத் தீவிரவாதிகளைக் கண்டிக்காமல் இருப்பதன் மூலமாக மல்வத்தை மற்றும் அஸ்கிரிய பீடங்களின் மகாநாயக்க தேரர்களும் மாதுளுவாவே சோபித தேரர் போன்ற முன்னணி பௌத்த மதகுருமார்களும் நாட்டில் எதிர்கால உள்நாட்டுப் போர் ஒன்றுக்கு தங்கள் பங்களிப்பைச் செய்து கொண்டிருக்கிறார்கள். முஸ்லிம்களுக்கு எதிராக இடைவிடாமல் தொடரும் பொதுபலசேனாவின் தாக்குதல்கள் முஸ்லிம்களை ஆயுதப் போராட்டப் பாதைக்குத் தள்ளிவிடும் என்பதை அரசாங்கம் விளங்கிக்கொள்ளாத பட்சத்தில், இந்த நாடு மீண்டும் ஒரு தடவை ஒரு கொலைக்களமாக மாறுவதை எவராலுமே தடுக்க முடியாமற் போகும். ■

**கட்டுரையாளர் மத்துகம கல்விவலய முன்னாள் கல்விப் பணிப்பாளர் (ஆங்கிலம்)**

---

*(27ஆம் பக்கத்தொடர்ச்சி...)*

இந்த அரசியல் முயற்சிகளை முன்னெடுத்த தென்னிலங்கை அரசியல் தலைமைகள் எதுவாக இருந்தாலும், அவர்களின் நிழலில் பேரினவாதம் ஒட்டுண்ணிக்ளாக வளர்ந்து வந்தது மறுக்க முடியாத உண்மை. ஒன்று, தென்னிலங்கை அரசியல் தலைமைகள், அந்த ஒட்டுண்ணிகளை இனம் கண்டுகொள்ள முடியவில்லை. பின்னர் இனம் கண்டுகொண்ட போதும், அவற்றை சமன் செய்து பயனற்றதாக ஆக்குவதற்கு அவர்கள் எந்தவித முயற்சியோ, முன்னெடுப்போ மேற்கொள்ளவில்லை.

அந்த வகையில், தென்னிலங்கை சமூக தலைமைகளிடையே அளுத்கம ஒருவித அச்சத்தைப் பரப்பியுள்ளது உண்மையே. தற்போது தனித்து நின்று அரசியல் செய்யும், இஸ்லாமிய அரசியல் மற்றும் சமூக தலைமைகள் ஒன்று சேர்ந்து, தென்னிலங்கை அரசியல் தலைமைகளுக்கும் அப்பால் சென்று, அவர்களது வாக்காளர்களின் மனதில் தங்களது குமுறல்களையும் அச்சங்களையும் பதிவு செய்ய முயற்சி எடுக்க வேண்டும். அவ்வாறு செய்வதற்கு தவறி, தமிழ்த் தலைமைகள், குண்டுச் சட்டிக்குள் குதிரை ஓட்டி வந்த காரணத்தினாலும் கூட, அவர்களது பிரச்சினைகள், அபிலாசைகள் மற்றும் அச்சங்கள், தென்னிலங்கை மக்களை இன்று வரை சென்றடையவில்லை.

இதனை, பேரினவாதிகள் தங்களுக்கு சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு, தங்களுக்கு என்றொரு வாக்குவங்கி இருப்பதாக முன்னிலை அரசியல் தலைமைகளையும் நம்ப வைத்து வருகிறார்கள். இது மாற்றப்பட வேண்டும். வழக்கம் போல், சிறுபான்மையினர் அனைவரும் ஒன்று சேர்ந்து போராட வேண்டும் என்ற குரலுக்கும் அப்பால் சென்று சேர்ந்தோ, தனித்தோ அவர்களது கவலைகளும் எதிர்பார்ப்புகளும் தென்னிலங்கை மக்களைச் சென்றடைய வேண்டும் என்ற நிலைமை உருவாக வேண்டும். அதற்கான வழிவகைகளை அவர்களின் தலைமைகள் மட்டுமே எடுக்க முடியும், எடுக்க வேண்டும். ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்நாட்டு அரசியல்

# அளுத்கமவுக்குப் பிறகு சிறுபான்மை இனங்கள் தொடர்பில் அரசாங்கத்தின் மூன்று கடப்பாடுகள்


சிறுபான்மையினங்கள் இலங்கையின் பன்முக சமுதாயத்தின் அங்கங்கள் என்பதை முழு நாட்டு மக்களுக்கும் உறுதிபடக் கூறுவதற்கு தேசிய தலைமைத்துவம் தயாரில்லாமல் இருக்கின்றதன் விளைவாகவே நாடு பாதிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது

அளுத்கமவிலும் பேருவளையிலும் முஸ்லிம்களுக்கு எதிராகக் கட்டவிழ்த்துவிடப்பட்ட வன்முறைகள் இன ரீதியான- மத ரீதியான துருவமயமாதலினால் இலங்கைச் சமூகம் எந்தளவு தூரத்துக்கு எளிதில் பாதிக்கப்படக்கூடியதாக இருக்கிறது என்பதை மீண்டுமொரு தடவை தெளிவாக வெளிக்காட்டியிருக்கிறது. இலங்கையின் சொந்த வரலாறும் (1915 சிங்கள-முஸ்லிம் கலவரங்களாக இருந்தாலென்ன, 1958, 1983 சிங்கள-தமிழ் கலவரங்களாக இருந்தாலென்ன) சர்வதேச அனுபவமும் சமூகங்களுக்கிடையிலான உறவுகள் எளிதில் முறிவடையக் கூடியதாக சஞ்சலமானவையாக இருக்கின்றன என்பதையும் நிலைபேறான விழிப்புநிலையும் எச்சரிக்கையுணர்வுமே நாம் ஜனநாயகத்துக்காகச் செலுத்த வேண்டிய விலையாக இருக்கின்றன என்பதையும் உணர்த்துகின்றன. முஸ்லிம்களும் ஏனைய இன, மத சிறுபான்மையினத்தவர் களும் இலங்கையின் பன்முக சமுதாயத்தின் அங்கங்கள் என்பதை முழுநாட்டு மக்களுக்கும் உறுதிபடக் கூறுவதற்கு தேசிய தலைமைத்துவம் தயாரில்லாமல் இருக்கின்றமையின் விளைவாகவே இலங்கை பாதிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. இலங்கை ஒரு சிங்கள -பௌத்த நாடு என்றும் குறிப்பாக முஸ்லிம்கள் இலங்கையின் தனித்துவமான அடையாளத்துக்கு ஒரு அச்சுறுத்தலாக விளங்குகிறார்கள் என்றும் பிரசாரம் செய்வதற்கு பொதுபலசேனா போன்ற அமைப்புகள் அனுமதிக்கப்படுகின்ற சூழ்நிலையையே காணக்கூடியதாக இருக்கிறது.



கலாநிதி ஜெஹான் பெரேரா

அளுத்கம பகுதியிலும் வேறுபகுதிகளிலும் முஸ்லிம் சமூகத்துக்கு எதிராக இடையறாது முன்னெடுக்கப்பட்ட குரோதப் பிரசாரமொன்றைத் தொடர்ந்தே வன்முறைகள் மூண்டன. அந்தக் குரோதப்பிரசாரங்களுக்கு எதிராக சட்டரீதி



❝இலங்கை ஒரு சிங்கள-பௌத்த நாடு என்றும் முஸ்லிம்கள் தனித்துவமான அடையாளத்துக்கு ஒரு அச்சுறுத்தலாக விளங்குகிறார்கள் என்று பிரசாரம் செய்வதற்கு பொதுபல சேனா போன்ற குறுகிய மனப்பான்மை கொண்ட அமைப்புகள் தாராளமாக அனுமதிக்கப்படுகின்றன❞

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



போரின்போது தாங்கள் அரசாங்கத்திற்கு அளித்த ஆதரவும் நாட்டுப்பிரிவினைக்கு தாங்கள் காட்டிய எதிர்ப்பும் அரசாங்கத்தின் ஆதரவையும் நன்றியுணர்வையும் தங்களுக்கு சம்பாதித்து கொடுத்திருக்கும் என்று முஸ்லிம்கள் நம்பினார்கள்

யான வழிமுறைகளிலோ அல்லது அரசியல்வழிமுறைகளிலோ எந்த வித நடவடிக்கையுமே எடுக்கப்பட வில்லை. இன அடிப்படையிலான ஒரு உள்நாட்டுப் போர் முடிவுக்கு வந்து ஐந்து வருடங்கள் கடந்த நிலையில், அப்பாவி மக்களுக்கு சொல்லொணா அவலங்களைத் தரக்கூடிய இன்னொரு இனவன்முறைக்கு வழி திறக்கப்படுவது பெரும் கவலைக்குரியதாகும். முஸ்லிம்களுக்கு எதிரான உணர்வுகளில் ஒரு திடீர் பிரவாகமும் பெரும்பான்மையினத்தவர்களில் சில பிரிவினர்களின் மத்தியில் அதன் பகிரங்கமான வெளிப்பாடும் முஸ்லிம் சமூகத்தின் சகல பிரிவினருக்கும் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியிருக்கிறது. போரின் போது தாங்கள் அரசாங்கத்துக்கு அளித்த ஆதரவும் நாட்டுப்பிரிவினைக்கு தாங்கள் காட்டிய எதிர்ப்பும் அரசாங்கத்தின் ஆதரவையும் நன்றியுணர்வையும் தங்களுக்குச் சம்பாதித்துக்கொடுத்திருக்கும் என்று முஸ்லிம்கள் நம்பினார்கள்.

இப்போது திடீரென்று முஸ்லிம்களில் சகல பிரிவினருமே (வர்க்க மற்றும் அரசியல் வேறுபாடுகளுக்கு அப்பால்) பொதுபலசேனா போன்ற குறுகிய மனப்பான்மை கொண்ட தேசியவாத அமைப்புகளின் நடவடிக்கைகளின் விளைவாக தாங்கள் பெரும் இடருக்குள்ளாகும் நிலைமை தோன்றியிருக்கிறது என்று உணருகிறார்கள். பொலிஸார் கைகட்டிப் பார்த்துக்கொண்டு நிற்க, குண்டர்கள் தங்களைத் தாக்குவதையும் தங்களது வீடுகளையும் வர்த்தக நிலையங்களையும் சூறையாடுவதையும் கண்டு முஸ்லிம்கள் கதிகலங்கிப் போயிருக்கிறார்கள். முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறைகளில் ஈடுபட்டவர்கள் அடையாளம் காணப்பட்ட சந்தர்ப்பங்கள் ஏராளம். ஆனாலும், அவர்களில் எவருமே கைது செய்யப்படவில்லை, இன்னொரு சந்தர்ப்பத்தில், அரசாங்கத்தில் உள்ள முஸ்லிம் அமைச்சர்களில் ஒருவரான ரிஷாத் பதியுதீன் தானே தனிப்பட்டமுறையில் பொலிஸாருக்கு தகவல் கொடுத்த போதிலும், எந்தவிதமான பதில் நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

இவ்வருடம் பெப்ரவரி மாதம் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் நவநீதம்பிள்ளையிடம் 'இலங்கையில் மதரீதியான வன்முறைகள் 2013 ஜனவரி- டிசம்பர்' என்ற தலைப்பிலான அறிக்கையொன்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸினால் கையளிக்கப்பட்டது. அதில் முஸ்லிம்களின் அக்கறைக்குரிய பிரச்சினைகள், சம்பவங்கள் பற்றிய விபரங்களுடன் விளக்கப்பட்டிருந்தன. இந்த அறிக்கையின்படி 2013 ஆம் ஆண்டு ஜனவரி தொடக்கம் டிசம்பர் வரையான ஒரு வருடகாலகட்டத்தினுள் இலங்கையில் முஸ்லிம்களுக்கு எதிரான குறைந்தபட்சம் 241 சம்பவங்களும் கிறிஸ்தவர்களுக்கு எதிராக குறைந்தபட்சம் 69 சம்பவங்களும் இடம்பெற்றிருந்தன. முஸ்லிம்களுக்கு எதிரானவற்றில் 51 சம்பவங்கள் வன்முறையுடன் கூடியவை. இவற்றில் ஆட்கள் மீதும் சொத்துக்கள் மீதும் தாக்குதல்கள் நடத்தப்பட்டன. கிறிஸ்தவர்களுக்கு எதிரானவற்றில் 15 சம்பவங்கள் வன்முறையுடன் கூடியவை. மேற்கூறப்பட்ட தாக்குதல் சம்பவங்களில் குறைந்தது 118 சம்பவங்கள் சமூக- அரசியல் இயக்கங்களினால் அல்லது அரசியல்வாதிகளினால் மேற்கொள்ளப்பட்டவையாகும். அரசாங்கத்தை அவமதித்துவிட்டதாக முஸ்லிம் காங்கிரஸ் மீது அரசாங்கத் தலைவர்கள் கடுமையாக ஆத்திரமுற்றதாகச் செய்திகள் வெளியாகியிருந்தன.

### அரசாங்கத்தின் கடமைகள்

அளுத்கம வன்முறைகளுக்குப் பிறகு இலங்கையின் பெரிய சமுதாயமும் குறிப்பாக அரசாங்கமும் இன மற்றும் மத சிறுபான்மையினத்தவர்கள் தொடர்பில் மூன்று கடப்பாடுகளை வெளிக்காட்ட வேண்டிய தேவையிருக்கிறது. இலங்கை அரசியல் சமுதாயத்தின் (Sri lankan Polity) தன்மை பன்முகத்தன்மைகொண்டது என்பதையும் பல மதங்களைக் கொண்டது என்பதையும் முறைப்படி உறுதிப்படுத்த வேண்டியது முதலாவது கடப்பாடாகும். உள்நாட்டுப் போரின் முடிவுக்குப்பிறகு அரசாங்கம் தேசியவாதம் தொடர்பில் எதிர்மறையான செய்தியொன்றையே பரப்புரைசெய்து கொண்டுவருகிறது. இதில் பெரும்பான்மையினத்தவர்கள் பெருமைக்குரிய ஒரு இடத்தைப் பெறுகிறார்கள்.

(42ஆம் பக்கம் பார்க்க...)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சர்வதேச அரசியல்

# ஈராக்கில் அமெரிக்காவின் புதிய போர்

ஏற்கனவே 1991ஆம் ஆண்டிலும் 2003ஆம் ஆண்டிலும் ஈராக்கில் இரு போர்களை நடத்திய அமெரிக்கா தற்போது மூன்றாவது போரை ஆரம்பித்திருக்கிறது போலத் தோன்றுகிறது. ஒபாமா நிருவாகம் நேரடியாகத் தலையீடு செய்யாவிட்டால், ஈராக்கின் தற்போதைய அரசியல் வரைபடம் விரைவில் சரித்திரமாகிவிடும். படுமோசமான போர்களுக்குப் பிறகு அரசுகளின் அரசியல் எல்லைகள் அடிக்கடி மாறுகின்றன. முதலாவது உலகமகா யுத்தத்தில் வெற்றி பெற்ற நாடுகள் ஒட்டோமன் சாம்ராச்சியத்தின் வீழ்ச்சிக்குப் பின்னரான கட்டத்தில் வரைந்த மத்திய கிழக்கு அரசுகளின் அரசியல் வரைபடம் சுமார் 100 ஆண்டுகள் நீடித்து வந்திருக்கிறது.

இரண்டாவது உலகமகா யுத்தத்திற்குப் பின்னர் இந்தப் பிராந்தியத்தின் அரசியல் எல்லைகள் முதலில் இஸ்ரேலின் உருவாக்கத்தினாலும் அடுத்து 1967ஆம் ஆண்டிலும் 1973 ஆம் ஆண்டிலும் இடம்பெற்ற அரபு-இஸ்ரேல் போர்களினாலும் மாற்றப்பட்டன. அத்தகையதொரு மாற்றத்துக்கான ஒரு உதாரணமாக யேமனின் ஒருங்கிணைவையும் கூறமுடியும். ஆனால், முதலாவது உலக மகா யுத்தத்திற்குப் பிறகு மத்திய கிழக்கில் ஐரோப்பிய பாணியில் தேச அரசுகள் (European-style nation States) உருவாக்கப்பட்டதைப் போன்று யேமன் பிளவும் செயற்கையானதேயாகும். ஆனால், முக்கியமான ஒரு வேறுபாடு இருக்கிறது, தேச அரசுகளை உருவாக்கியபோது ஏகாதிபத்திய வல்லரசுகள் இனத்துவ ஐக்கியத்தையும் அமைப்புக்கூறுகளையும் (Composition)அலட்சியம் செய்தன



மேற்காசியாவில் தற்போது இடம்பெறுகின்ற ஆயுத மோதல்களை நேர காலத்தோடு கட்டுப்படுத்தாவிட்டால் உலக பொருளாதாரத்திற்கு தொடர்ச்சியான பாதிப்பு ஏற்படும் ஆபத்து இருக்கிறது. ஈராக் சம்பந்தமாக மீண்டும் எதையாவது அமெரிக்கா செய்ய வேண்டும் என்று உலகம் எதிர்பார்க்கிறது



சிந்தாமணி மகாபத்ரா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

விட்டன. இதன் விளைவாக பல அரசுகள் பல்வேறு வகைப்பட்ட சிறுபான்மையினங்களைக் கொண்டவையாக அமைந்தன. அதனால் அந்த அரசுகளில் இடையறாத சமூக நெருக்கடிகள் மூண்டு கொண்டேயிருந்தன. அவை அடிக்கடி வன்முறைகள் நிறைந்தவையாக இருந்தன.

சோவியத்யூனியனிலும் கிழக்கு ஐரோப்பாவிலும் கம்யூனிஸ்ட் சர்வாதிபத்தியம் முடிவுக்கு வந்தபோது சோவியத் சோசலிஸ்ட் குடியரசுகளின் ஒன்றியம் நிலைகுலைந்ததையும், யூகோஸ்லாவியா சிதைவுற்றதையும் செக்கோஸ்லவாக்கியா இரண்டாகப் பிளவுபட்டதையும் போன்று, அரசியல் இஸ்லாத்தின் எழுச்சியும் மத்திய கிழக்கின் இஸ்லாமிய நாடுகளில் எதேச்சாதிகார ஆட்சியாளர்களுக்கு எதிரான மக்கள் போராட்டங்களின் வியாபகமும் அரசுகள் உள்முகமாகத் தகர்வுற்று புதிய அரசுகள் ஒன்றன்பின் ஒன்றாக தோன்றக்கூடிய சூழ்நிலையைத் தோற்றுவிக்கக்கூடிய சக்திகளைக் கட்டவிழ்த்துவிட்டன. சிரியாவின் உள்நாட்டுப்போரும் ஈராக்கின் அரசியல் வன்முறையும் லிபியாவின் மட்டுமீறிய ஸ்திரமின்மையும் அந்தப் பிராந்தியத்தில் பல புதிய அரசுகள் உருவாகுவதற்கான சாத்தியப்பாடுகளுக்கு போதுமானளவுக்கு சமிக்ஞை காட்டுகின்றன. பிராந்தியத்தில் தற்போது இடம்பெறுகின்ற ஆயுத மோதல்களின் பிரதான ஆபத்து என்னவென்றால், அவற்றை நேரகாலத்தோடு கட்டுப்படுத்தாவிட்டால், உலக பொருளாதாரத்துக்கு தொடர்ச்சியான பாதிப்பை ஏற்படுத்தும்.



ஈராக்கிய ஷியா முஸ்லிம் திரட்டல் படையினர்

## பன்முகத்தன்மைக்கு மதிப்பு

ஈராக்கிய சமுதாயத்தின் பன்முகத்தன்மையை மதித்து, சகல பிரிவினரையும் அரவணைக்கும் வகையிலான ஒரு அரசாங்கத்தை நடத்துமாறு அமெரிக்காவுடன் சேர்ந்து (ஜனநாயக நாடுகளையும் பல்கலாசார நாடுகளையும் உள்ளடக்கிய) சர்வதேச சமூகம் ஈராக்கிய பிரதமர் நூரி அல்-மாலிக்கியை வலியுறுத்திக் கேட்டிருக்கின்றன. தற்போதைய தருணத்தில் இது நல்லறிவு நிலையுடைய ஒரு ஆலோசனை. ஏனென்றால், ஈராக்கில் மக்களின் அபிலாசைகள் ஜிஹாதி இயக்கங்களின் குறிக்கோள்களுடன் கலந்து குழப்பிப் போயிருக்கின்றன. ஈராக்கின் பல்வேறு நகரப் பகுதிகளையும் தனது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்து செல்வாக்கைப் பரப்பிவரும் ஈராக் -சிரியாவின் இஸ்லாமிய அரசு (ISIS) என்ற அமைப்பு தீவிரவாதத்தன்மை கொண்ட ஒரு ஜிஹாதி குழுவாகும். அது பயங்கரமான அல்-கயெடா இயக்கத்தின் ஒரு கிளையாகும். ஐ.எஸ்.ஐ.எஸ். வெற்றிபெறுமேயானால், ஒரு பயங்கரவாத அரசு உருவாகும் என்றும் அது மிதவாத சுன்னி முஸ்லிம்களினதோ அல்லது ஏனைய நாடுகளினதோ நலன்களுக்கு பயனுடையதாக அமையப் போவதில்லை என்றும் அச்சம் இருக்கிறது.

இன்னொரு முக்கியமான பிரச்சினை ஈராக்கிய குர்திஷ் இனத்தவர்களின் கதி பற்றியதாகும். ஈராக், சிரியா,துருக்கி மற்றும் ஈரான் ஆகிய நான்கு நாடுகளில் குர்திஷ் இனத்தவர்கள் பரந்து வாழ்கிறார்கள். பல தசாப்தகால துன்பங்களுக்குப் பிறகு, (சதாம் ஹுசெய்ன் ஆட்சி தூக்கியெறியப்பட்டதையடுத்து) ஈராக்கிய குர்திஷ்களினால் ஒரு சுயாட்சி வாழ்வைப் பெறக்கூடியதாக இருந்தது. ஆனால், குர்திஷ்தான் என்று ஒரு நாடு உருவாக்கப்படுமானால், அது நான்கு அரசுகளின் அரசியல் எல்லைகளைத் தாறுமாறாக்கி பெரும் இரத்தக்களரிக்கு வழிவகுக்கும். அதனால், குர்திஷ் மக்கள் சுரண்டப்படுவதற்கு ஒருமுடிவு கிட்டுமானால், ஈராக்கிய அரசாங்கம் பல்கலாசாரத்தை மதித்து நடக்குமேயானால், ஈராக்கில் குர்திஷ்களின் சுயாட்சி விரும்பத்தக்கது. ஈராக்கின் ஆட்புல ஒருமைப்பாட்டையும் சமூக ஸ்திரத்தன்மையையும் உறுதிப்படுத்துவது எவ்வாறு என்பது ஒரு பெரிய கேள்வி. சுன்னி சிறுபான்மையினரிடமிருந்து குறிப்பாக, ஜிஹாதி வகைப்பட்ட பிரிவுகளிடமிருந்து ஈராக் உள்முகமாகவே சவாலை எதிர்நோக்குகிறது.

பிராந்திய ரீதியில் நோக்குகையில், இது சவூதி அரேபியர்களினதும் ஈரானியர்களினதும் ஒரு சமர்க்களமாக மாறியிருக்கிறது. இருதரப்பினருமே தங்களது செல்வாக்கைப் பரப்ப போட்டிபோட்டுக் கொண்டிருக்கிறார்கள். சர்வதேச ரீதியில், ஈராக்கின் ஸ்திரத்தன்மையில் பங்கும் ஈடுபாடும் பிரதான தரப்பினர் என்றால் அது சீனா, ஜப்பான், இந்தியா மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் போன்ற பிரதான எண்ணெய் இறக்குமதி செய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஈராக்கில் மொசூல் நகரில் ஹோட்டல் ஒன்றின் உச்சியில் பறக்கவிடப்பட்டிருக்கும் ஐ.எஸ்.ஐ.எஸ். இயக்கத்தின் கொடி


யும் நாடுகளேயாகும். ஆனால், அவை தலையிடக்கூடிய அளவுக்கு வல்லமைகொண்டவையல்ல. அதனால், ஈராக் சம்பந்தமாக மீண்டும் எதையாவது அமெரிக்கா செய்ய வேண்டும் என்று உலகம் எதிர்பார்க்கிறது.

ஈராக்கில் இருந்து அமெரிக்கப் படையணிகள் முற்றாக வாபஸ் பெற்று மூன்றுவருடங்கள் கடந்துவிட்டன. அமெரிக்கா கீறிய கோட்டை அசாத் மதிக்கத் தவறிய போதிலும் கூட, சிரியாவுக்கு எதிராக இராணுவ நடவடிக்கை எடுக்க ஒபாமா நிருவாகம் மறுத்துவிட்டது. ஆப்கானிஸ்தானில் போரை முடிவுக்குக் கொண்டு வருவதில் தனக்கிருக்கும் உறுதிப்பாட்டை ஒபாமா நிருவாகம் அடிக்கடி வெளிப்படுத்திக் கொண்டிருக்கிறது. இத்தகையதொரு பின்புலத்தில் ஈராக்கில் ஜிஹாதிகளுக்கு எதிராக இன்னொரு போருக்கு விரைவதென்பது அமெரிக்காவைப் பொறுத்தவரை கஷ்டமான ஒன்றாகவே இருக்கிறது எனலாம். ஆனால், ஜிஹாதிசம் விரிவடைந்துவரும் நிலையில், ஈராக் நிலப்பரப்பு பிளவுபடக்கூடிய சாத்தியங்கள் காணப்படுவதற்கு மத்தியில், பிராந்தியத்தின் எஞ்சிய பகுதிகளுக்கும் பரந்தளவில் உலகிற்கும் தாக்கங்கள் ஏற்படக்கூடிய ஆபத்துக்கு மத்தியில் அமெரிக்காவினால் ஈராக் நிலைவரங்களில் தலையிடாமல் ஒதுங்கியிருக்க முடியுமா? 1989 ஆம் ஆண்டு ஆப்கானிஸ்தானிலிருந்து சோவியத் துருப்புகள் வாபஸ் பெற்றுக்கொண்ட பிறகு பாகிஸ்தானுக்குச் செய்ததைப் போன்று ஈரானும் சவூதி அரேபியாவும் அவற்றின் விருப்பப்படி ஈராக்கில் செயற்படுவதற்கு அமெரிக்கா அனுமதிக்குமா? ஷியா-சுன்னி சச்சரவு விரிவடையுமானால், பாகிஸ்தானை அது பாதிக்காதா? (உலகில் இரண்டாவது பெரிய ஷியா முஸ்லிம் சனத்தொகையைக் கொண்ட நாடாக பாகிஸ்தான் விளங்குகிறது) ஈரானுக்கும் மேற்குலகிற்கும் இடையேயான அணு பேச்சுவார்த்தைகளுக்கு ஆபத்தை ஏற்படுத்தக்கூடியதாக ஒரு 'ஷியா அணு குண்டு' பிரசவிக்கப்படக்கூடிய ஆபத்தை அது தோற்றுவிக்காதா?

இவையெல்லாவற்றையும் விளங்கிக் கொண்டுதான் ஜனாதிபதி ஒபாமா, ஒருவிமானம் தாங்கிக் கப்பலையும் இரு போர்க்கப்பல்களையும் பாரசீக வளைகுடாவுக்கு அனுப்பிவைத்தார். அடுத்து, ஈராக்கிய அரசாங்கத்துக்கு உதவுவதற்கென்று சில நூறு இராணுவ ஆலோசகர்களையும் ஈராக்கில் அமெரிக்கப் பிரஜைகளையும் ஏனைய அமெரிக்க நலன்களையும் பாதுகாக்க சில விசேட படைகளையும் அவர் அனுப்பிவைத்திருக்கிறார். ஆளில்லா விமானங்கள் மூலமாக (Drone) தாக்குதல்கள் நடத்தப்படக்கூடிய சாத்தியங்கள் நிராகரிக்கப்படவில்லை. குறித்த இலக்குகள மீது விமானக்குண்டு வீச்சுத் தாக்குதல்களும் நிராகரிக்கப்படவில்லை. தரையில் பெரும் எண்ணிக்கையில் அமெரிக்கத் துருப்புகள் இறக்கப்படாமல் இருக்கக்கூடும். ஆனால், குவைத் பிரச்சினை தொடர்பில் நடத்திய 1991 போர், மற்றும் பேரழிவு ஆயுதங்களை ஒழிப்பதற்கெனக்கூறிக் கொண்டு தொடுத்த 2003 போர் ஆகியவற்றுக்குப்பிறகு மூன்றாவது ஈராக்போரை அமெரிக்கா ஏற்கனவே ஆரம்பித்துவிட்டதாகவே தோன்றுகிறது. ■

**(கட்டுரையாளர் டில்லி ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகத்தின் அமெரிக்க கற்கைகள் செயற்திட்டத்தின் தலைவர்)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அனுராதா எம்.ஷெனோய்

## ஈராக் நெருக்கடி;

# சிரியாவில் தொடரும் மோதல்களின் பக்க விளைவு

ஈராக் மற்றும் சிரியாவின் இஸ்லாமிய அரசு' என்று அழைக்கப்படுகின்ற (Islamic State of Iraq and Syria - ISIS) பயங்கரவாத இயக்கமொன்று ஈராக்கின் பெருமளவு நிலப்பகுதியை அதன் கட்டுப்பாட்டின் கீழ்கொண்டுவந்திருக்கிறது. திக்ரித் மற்றும் மொசூல் போன்ற பிரதான நகரங்களையும் அது கைப்பற்றியிருக்கிறது. Islamic state of Iraq and Levant என்றும் கூறப்படுகின்ற இந்த சுன்னி தீவிரவாத இயக்கம் அல்-கயெடாவையும் விட தீவிரவாதப் போக்கையும் எதேச்சாதிகாரத்தன்மையையும் மத அடிப்படைவாதப் போக்கையும் கொண்டது. (இனிமேல் கட்டுரையில் 'ஐ.எஸ்.ஐ.எஸ்' என்றே பயன்படுத்தப்படும்) அல்-கயெடா அமைப்பில் இருந்து பிரிந்த ஒரு இயக்கம் என்று 'ஐ.எஸ்.ஐ.எஸ்' வர்ணிக்கப்படுகின்றபோதிலும், அது எந்த நேரத்திலும் மீண்டும் இணைந்து கொள்ளக்கூடும். அயல் நாடான சிரியாவில் தொடருகின்ற மோதல்களின் பக்கவிளைவே இதுவாகும். சிரியாவில் அசாத் ஆட்சியை எதிர்க்கின்ற குழுக்களில் ஐ.எஸ்.ஐ.எஸ்ஸும் ஒன்று. அபகரிக்கப்பட்ட இராணுவ தளங்களில் இருந்து களவாடப்பட்ட பெருந்தொகையான பேரழிவு ஆயுதங்களும் மிக நவீன ஆயுதங்களும் இவ்வியக்கத்திடம் இருக்கின்றன.

வெளியார் தலையீடுகள்
இடம்பெற்ற நாடுகள்
பாதுகாக்கப்படவில்லை.
அங்கெல்லாம் ஸ்திர நிலை
ஏற்படுத்தப்படவுமில்லை.
பயங்கரவாதக்குழுக்கள்
அமெரிக்கர்களுக்கும்
ஏனையவர்களுக்கும்
ஊறுவிளைவித்துக்
கொண்டே இருக்கின்றன

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தப் பிராந்தியத்தில் அதிகாரத்தைக் கைப்பற்ற வேண்டுமென்ற குறிக்கோளை 'ஐ.எஸ்.ஐ.எஸ்' கொண்டிருக்கிறது. மனிதாபிமான நெருக்கடிகள், எண்ணெய் விலை உயர்வு மற்றும் அடிப்படை வாதம், பயங்கரவாதம் ஆகியவற்றின் வளர்ச்சி காரணமாக சர்வதேச சமூகம் கவலையடைந்திருக் கிறது. இந்தப் புதிய நெருக்கடியைக் கையாளுவ தற்கு அதன் அடிப்படைக் காரணிகளைக் கவனிக்க வேண்டியிருக்கிறது. பாரம்பரிய புவிசார் அரசியல் போட்டா போட்டிகளைப் புறந்தள்ளி வைக்க வேண்டியிருக்கும் அல்லது பயங்கரவாதம் மீண் டும் தலைவிரித்தாடும்.

ஈராக்கிய பிரதமர் நூரி அல்-மாலிக்கி துருவம யப்பட்ட நாட்டில் பலவீனமான கூட்டணிக்கும் ஊழல்தனமான அரசாங்கமொன்றுக்கும் தலைமை தாங்குகிறார். பயங்கரவாதிகளை எதிர்கொள்வதற்கு ஏதுவாக அவசர கால நிலையைப் பிரகடனம் செய் வதற்குத் தேவையான ஆதரவை பாராளுமன்றத்தில் அவரால் பெற முடியவில்லை. அமெரிக்காவினால் பயிற்றுவிக்கப்பட்ட ஈராக்கிய இரா ணுவம் நிலைகுலைந்துபோயிருப்ப துடன் உள் பிரச்சினைகளினாலும் பாதி க்கப்பட்டிருக்கிறது. ஆனால், ஈராக்கிய குர்திஷ் இனத்தவர்கள் எதிர்த்துச் சண்டை பிடித்துக்கொண் டிருக்கிறார்கள். 'ஐ.எஸ்.ஐ.எஸ்' படைகள் முன்னேறும்போது ஈராக் கிய இராணுவத்தினர் கலைந்து ஓடி விடுகிறார்கள்.

அமெரிக்கா ஈராக்கில் ஐ.எஸ்.ஐ.எஸ். கிளர்ச்சியாளர்களை எதிர்க்கிறது. ஆனால் சிரியாவில் அதே கிளர்ச்சியாளர்களுடன் கூட்டுச்சேர்ந்து அஸாத்துக்கு எதிராகப் போராடும் எதிரணியினரை ஆதரிக்கிறது.

சுன்னி திரட்டல் படைகளுக்கு சவூதி வஹாபி களும் குவைத் ஆட்சியாளர்களும் நிதியுதவி வழங் குவதாக பிரிட்டனின் த இன்டிபெண்டன்ற் பத்திரி கையின் மத்திய கிழக்கு செய்தியாளராக பெய்ரூத்தை தளமாகக் கொண்டியங்கும் றொபேர்ட் ஃபிஸ்க் அண்மையில் எழுதியிருந்தார். ஐ.எஸ்.ஐ.எஸ் போன்ற இயக்கங்களுடன் சேர்ந்து சண்டையிடுவதற்கு சிறையில் இருக்கும் கடும் தீவிரவாதப் போக்குடைய அல்-கயெடா உறுப்பி னர்களை விடுதலை செய்வதை சவூதி அரேபியா ஒரு கொள்கையாகக் கொண்டிருக்கிறது. சவூதி அர சாங்கத்துக்கு ஆதரவு வழங்குகின்ற அமெரிக்கா இதை கண்டும் காணாத மாதிரி இருந்துவிடுகிறது.

அமெரிக்கா ஈராக்கில் ஐ.எஸ்.ஐ.எஸ். கிளர்ச்சி யாளர்களை எதிர்க்கிறது. ஆனால், சிரியாவில் ஐ.எஸ்.ஐ.எஸ்ஸுடன் கூட்டுச் சேர்ந்து அசாத்திற்கு எதிராகப் போராடும் கிளர்ச்சியாளர்களை அது ஆதரிக்கிறது. இந்த இரட்டைத் தன்மையை அமெரிக்க தேசிய பாது காப்பு ஆலோசகர் சுசான் றைஸ் உத் தியோகபூர்வமாகவே வெளிப்படுத் தியிருந்தார். ஜூன் 7ஆம் திகதி சி.என்.என். தொலைக்காட்சிக்கு பேட்டியளித்த அவர் சிரிய கிளர்ச்சி யாளர்களுக்கு வாஷிங்டன் கெடு தியான ஆயுதங்களையும் கெடுதி யற்ற ஆயுதங்களையும் வழங்கி ஆதரவளிப்பதாகக் கூறினார். அமெரிக்காவுக்கும் ஈராக்கிற்கும் இடையிலான கேந்திர முக்கியத்




பாக்தாத்தில் அமெரிக்க வெளியுறவு அமைச்சர் ஜோன் கெரியுடன் ஈராக் பிரதமர் நூரி அல்-மாரிக்கி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துவ படைகள் உடன்படிக்கை (Iraq - US strategic forces Agreement) அமெரிக்காவின் தலையீட்டை அனுமதிக்கிறது. ஆனால், உள்நாட்டில் சகல தரப்பினரையும் அரவணைக்கின்ற ஒரு அரசியல் அணுகுமுறையைக் கடைப்பிடிக்க வேண்டும். அத்துடன் ஈரானிடமிருந்து தூரவிலகியிருக்க வேண்டும் என்ற நிபந்தனைகளை ஈராக் ஏற்றுக்கொள்ளும் வரை அமெரிக்கா அந்த உடன்படிக்கையின் ஏற்பாடுகளுக்கு இசைவாக செயற்படமுன்வராது. அமெரிக்காவைப் பொறுத்தவரை, ஈராக்கைப் பயங்கரவாதத்தில் இருந்து காப்பாற்றுவதைவிடவும் ஈரானிலும் சிரியாவிலும் ஆட்சிமாற்றம் மிகவும் முக்கியமானதாகத் தோன்றுகி றது.

ஈராக்கின் படுமோசமான ஆட்சிமுறைச் செயற்பாடுகளும் அதன் நிலைகுலைவுக்குக் காரணங்களாகும். 2003ஆம் ஆண்டிலிருந்து மாலிக்கி அரசாங்கம் சுன்னி முஸ்லிம்கள் மீது பாரபட்சம் காட்டியது. சகல விவகாரங்களிலும் அவர்களை விலக்கியே வைத்தது. உதாரணத்துக்குக் கூறுவதென்றால், ஈராக்கிய இராணுவத்திலிருந்து 7 இலட்சம் சுன்னி படைவீரர்கள் நீக்கப்பட்டார்கள். அமெரிக்கர்கள் வெளியேறிய பிறகு அரசாங்கச் சேவையிலிருந்தும் ஏனைய சுன்னி முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்டார்கள். இராணுவத்தில் பதவியுயர்வுகள் விலைபேசிக் கொடுக்கப்பட்டதாகக் கூறப்பட்டது.



அத்தகைய ஊழல் மோசடிகளும், மத அடிப்படையிலான பாரபட்சமும் நிறுவனங்களை நிர்மூலஞ்செய்தன.

மதப்பிரிவுகளுக்கிடையிலான மோதல்களினால் ஈராக் பிளவுபட்டுப் போய்க்கிடக்கிறது. இந்த மோதல்களிலும் பயங்கரவாதத் தாக்குதல்களிலும் ஆயிரக்கணக்கானவர்கள் பலியாகியிருக்கிறார்கள்.

ஐ.எஸ்.ஐ.எஸ் இயக்கம் நகரங்களைக் கைப்பற்றி வருவதையடுத்து பயங்கரவாதத்துக்கு எதிரான இந்த முக்கியமான சண்டைக்கு உதவிகளைச் செய்வதாக உறுதியளித்திருக்கும் ஈரானிய ஜனாதிபதி ஹசன் றோஹானி 2000 விசேட துருப்புகளை அனுப்பிவைத்திருக்கிறார். ஈரானிய புரட்சிகர காவலர் படையின் தலைவர் பாக்தாதுக்கு விஜயம் மேற்கொண்டிருந்தார். ஈராக்கிய ஷியா முஸ்லிம்களின் அதிஉயர் மதத்தலைவரான அயத்தொல்லா சிஸ்தானி ஆயுதமேந்திப் போராடுமாறு ஷியாக்களுக்கு அழைப்பு விடுத்திருக்கிறார். ஈரானின் வழிகாட்டுதலில் செயற்படும் ஹிஸ்புல்லா இயக்கத்தினருடன் ஐ.எஸ்.ஐ.எஸ் தகராறில் ஈடுபட்டிருக்கிறது. இந்த முரண்நிலைக்கு தீர்வைக்காண்பதற்கு ஈரானின் உதவி முக்கியமானதாக இருக்கும்.

ஈராக்கில் பயங்கரவாதம் என்பது சதாம் ஹுசெய்னுக்குப் பின்னரான, அமெரிக்க ஆக்கிரமிப்புக்குப் பின்னரான தோற்றப்பாடாகும். ஈராக்கில் 30 ஆயிரம் அமெரிக்கத் துருப்புகள் இருக்கின்றன. இருந்தாலும் பயங்கரவாதத் தாக்குதல்கள் அதிகரித்திருக்கின்றன. அமெரிக்கப் படைகளுக்கு பாதுகாப்புத்துறை சம்பந்தப்பட்ட ஆய்வுத் தகவல்களை வழங்குவதற்கு அமைக்கப்பட்ட அரசாங்கச் சார்பற்ற அமைப்பான RAND அண்மையில் வெளியிட்ட அறிக்கையின் பிரகாரம் 2011ஆம் ஆண்டுக்கும் 2013ஆம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலகட்டத்தில் மாத்திரம் ஜிஹாதி குழுக்கள் 58 சதவீதத்தினால் வளர்ச்சி கண்டிருக்கின்றன. அக்குழுக்களின் போராளிகளின் எண்ணிக்கை இரட்டிப்பாக அதிகரித்திருக்கிறது. அவர்களின் தாக்குதல்கள் மும்மடங்காக அதிகரித்திருந்தன. பயங்கரவாதக் குழுக்கள் அவற்றின் தளத்தை சிரியா, ஈராக், பாகிஸ்தான் மற்றும் யேமனில் விஸ்தரித்துக் கொண்டிருக்கின்றன.

> ஈரானின் நலன்களும் அமெரிக்காவின் நலன்களும் முரண்பட்டுக் கொண்டிருக்கின்ற போதிலும்கூட தற்போதைய சூழ்நிலையில் ஈராக்கைக் காப்பாற்ற இரு நாடுகள் ஒன்றிணைவதற்கான சிறியதொரு வாய்ப்பு இருக்கின்ற நேரமிது

பயங்கரவாதத்துக்கு எதிரான அமெரிக்காவின் போர் தோல்வி கண்டிருக்கிறது என்பது வெளிப்படையானது. ஏனென்றால் அது மேற்காசியாவில் அமெரிக்க நலன்களை விஸ்தரிப்பதற்கான ஒரு போரேயாகும். ஆப்கானிஸ்தானை விட்டுவிட்டு 2003ஆம் ஆண்டில் (அணுவாயுதங்கள் இருக்கின்றன என்று கூறிக்கொண்டு) ஈராக் மீது ஏன் அமெரிக்கா தாக்குதல் கொடுத்தது? அணுவாயுதங்கள் ஒருபோதுமே ஈராக்கில் கண்டுபிடிக்கப்படவில்லை. அதே போன்றே, மனிதாபிமான ரீதியில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலையீட்டைச் செய்வதாகக் கூறிக் கொண்டு 2011ஆம் ஆண்டில் வட அத்திலாந்திக் ஒப்பந்த நாடுகள் (நேட்டோ) அமைப்பு லிபியாவில் கடாபியின் ஆட்சியைத் தூக்கியெறிந் தது. பிறகு வெளியேறிச் சென்றுவிட் டது. லிபியாவில் இன்று வன்முறை கள் தீவிரமடைந்திருக்கின்றன. குறு கிய குழுமனப்பான்மை அரசியல் போக்குகள் அதிகரித்துவருகின்ற நிலையில் இன்னொரு உள்நாட்டுப் போர் மூளக்கூடிய ஆபத்தும் இருக்கி றது.

வெளியார் தலையீடுகள் இடம் பெற்ற நாடுகள் பாதுகாக்கப்படவு மில்லை. அங்கெல்லாம் ஸ்திரநிலை ஏற்படுத்தப்படவுமில்லை. அல்லது அவை விடுதலை செய்யப்படவு மில்லை. மேலும், பயங்கரவாதக் குழுக்கள் அமெரிக்கர்களுக்கும் ஏனையவர்களுக்கும் ஊறுவிளை விக்கின்றன. நீடித்து நின்று தாக்குதல் களுக்கு முகங்கொடுக்கக்கூடிய வல் லமை அமெரிக்காவுக்குப் பெரிதாக இல்லை என்பது இந்தப் பயங்கரவா தக் குழுக்களுக்குத் தெரியும். இஸ் லாத்தை விகாரமானதாகக் காட்டுவ தன் மூலம் ஆளில்லா விமானங் களைக் கொண்டு தாக்குதல்களை மேற்கொள்வதன் மூலமும் பயங்கர வாதிகளைக் கட்டுப்படுத்த முடிய வில்லை. அமெரிக்கா அதன் அடிப் படை பட்ஜெட்டுக்கு 50 ஆயிரம் கோடி டொலர்களைச் செலவிடுகி றது. இதில் ஐந்தில் ஒரு பங்கையா வது பயங்கரவாத அச்சுறுத்தல் உள்ள பிராந்தியங்களில் சமாதானம், பொறு ப்புக்கூறலுடன் கூடிய ஆளுகை, மற் றும் மனித பாதுகாப்புக்கெனச் செலவு செய்தால், சர்வதேச பாதுகாப் பைக் கட்டியெழுப்புவதற்கு சிறப்பா னதொரு வழிமுறையாக அது அமை யக்கூடும்.

ஈரானுடைய நலன்களும் அமெரிக் காவினுடைய நலன்களும் முரண்பட் டுக் கொண்டிருக்கின்ற போதிலும் கூட, தற்போதைய சூழ்நிலையில், ஈராக்கை காப்பாற்றுவதற்கு அவ் விரு நாடுகளும் ஒன்றிணைவதற் கான சிறியதொரு வாய்ப்பு இருக் கின்ற நேரம் இது, போட்டித் தன்மை




யான புவிசார் அரசியல் அணுகு முறைகளை இருநாடுகளும் தொடர அனுமதித்தால், அவலத்துக்குள்ளா கப் போகிறவர்கள் ஈராக்கிய மக் களே. சர்வதேசப் பயங்கரவாதமும் வளர்ந்து கொண்டே போகும்.

சிரியநெருக்கடி தொடர்பில் ஈரான், மேற்குலகநாடுகள் மற்றும் ரஷ்யா வுக்கிடையே காணப்பட்ட 2013 ஜெனீவா உடன்பாட்டின் அடிப்படை யில் மேற்கொண்டு நடவடிக்கை களை முன்னெடுப்பதற்கான நேரம் இது. ஈரானில் அமைதி நிலவவேண் டுமானால் சிரியாவில் ஸ்திரநிலை ஏற்படுத்தப்படவேண்டும். இதையே ரஷ்யா, சீனா, இந்தியா ஆகிய நாடு கள் தொடர்ச்சியாக வற்புறுத்தி வரு கின்றன. சிரியாவில் அண்மையில் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தல் அசாத்துக்கு இன்னமும் அலவிகள், ஷியாக்கள், கிறிஸ்தவர்கள், மதச்சார் பற்றவர்கள் மற்றும் சில சுன்னிகள் மத்தியில் ஆதரவு இருக்கிறது என் பதை வெளிக்காட்டியிருக்கிறது. அசாத் அதிகாரத்தைவிட்டுச் செல்ல வேண்டும் என்ற மேற்குலகத்தின் சுலோகம் நிறுத்தப்பட வேண்டும். ஒரு கூட்டம் சர்வாதிகாரிகளுக்குப் பதிலாக இன்னொரு கூட்டம் சர்வாதி காரிகள் அதிகாரத்துக்கு வருவது அல்லது திரட்டல் படைகளின் கட் டுப்பாட்டின் கீழ் ஆட்சியதிகாரம் வருவது போன்று இல்லாமல் உறுதிப் பாடும் சகல தரப்பினரையும் அரவ ணைக்கும் தன்மையான அரசியலும் அடிப்படை உரிமைகளும் கொண்ட சூழ்நிலையே இன்று அந்தப் பிராந்தி யத்துக்குத் தேவைப்படுகிறது. அமெ ரிக்காவினால் பயிற்சியளிக்கப்பட்ட மிதவாத இஸ்லாமியவாதிகள் சிரியா வில் உள்ள அரசாங்கத்தையும் ஐ.எஸ்.ஐ.எஸ். உட்பட இஸ்லாமியத் திரட்டல் படைகளையும் எதிர்த்துப் போரிடுவர் என்ற நினைப்பு மாயத்த னமானது, கோணலானது.

காலஞ்சென்ற பிரிட்டிஷ் அமெ ரிக்கப் பத்திரிகையாளரான கிறிஸ் தோபர் ஹிச்சென் அல்-கயெடாவை ஊழல்தனமான அரைகுறையான பல் தேசிய கம்பனி, அரைகுறையான ஒரு குற்றக் குடும்பம், சவூதி ஆட்சி யாளர்கள், பாகிஸ்தான் இரகசியப் பொலிஸ் ஆகியோருக்கான அரைகு றையான பதிலாட்கள், அரைகுறை யான மதப்பிரிவினர், அரைகுறை யான பாசிச அமைப்பு என்று வர்ணித்தார். இந்த அமைப்பு அதன் சார்பு அமைப்புகளும் ஷியா-சுன்னி கூட்டணியினால், அரபுப்பிராந்தியக் கூட்டணிகளினால் தோற்கடிக்கப்பட வேண்டியது அவசியமாகும். இதை நியாயப்படுத்துகின்ற எந்தவொரு யோசனையையும் இந்தியா ஆதரிக்க வேண்டும். ■

***(அநுராதா எம்.ஷெனோய் டில்லி ஜவஹர்லால்நேரு பல்க லைக்கழகத்தின் சர்வதேச ஆய்வு கள் நிறுவனத்தின் பேராசிரியர்)***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(33ஆம் பக்கத்தொடர்ச்சி...)

பெரும்பான்மை வாக்காளர்களின் ஆதரவைப் பெறுவதற்கான தர்க்க வாதமாக இது இருக்கலாம். ஆனால், தேசிய ஐக்கியத்துக்குப் பாதகமானது. இரண்டாவது கடப்பாடு, வன்முறைகளின் விளைவாக தங்களது வீடுகளையும் வர்த்தக மற்றும் தொழில் நிலையங்களையும் இழந்தவர்கள் சகலருக்கும் அரசாங்கம் நஷ்டஈட்டை வழங்கி அவர்கள் வழமை வாழ்வுக்கு திரும்புவதை உறுதி செய்யவேண்டியதாகும். வன்முறைகளைக் கட்டுப்படுத்த உருப்படியானதும் உறுதியானதுமான நடவடிக்கைகளை மேற்கொள்ளாமல் அலட்சியமனப்போக்கை வெளிக்காட்டியதன் மூலமாக அரசாங்கம் இந்த இடர்பாடான நிலைக்குப் பங்களிப்புச் செய்திருப்பதால், மேற்கூறப்பட்ட கடப்பாட்டை முழுமையாகப் பூர்த்தி செய்ய வேண்டிய பொறுப்பு அதற்கு இருக்கிறது.

சட்டத்தின் ஆட்சியை நிலைநிறுத்துவது தொடர்பில் அரசாங்கம் அதன் செயற்பாடுகளை மேம்படுத்த வேண்டியது மூன்றாவது கடப்பாடாகும். போரின் முடிவுக்குப் பின்னரான நாட்களில் இருந்து இலங்கையில் சட்டத்தின் ஆட்சியைப் பொறுத்தவரை ஒரு படிப்படியான வீழ்ச்சி நிலையைக் காணக்கூடியதாக இருக்கிறது. சட்டத்தின் ஆட்சியின் சீர்குலைவுக்குப் பொறுப்பானவர்கள் தேசிய மட்டத்திலும் மாகாண மட்டத்திலும் உள்ளூராட்சி மட்டத்திலும் கிடைக்கக்கூடியதாக இருக்கின்ற அரசியல் ஆதரவு காரணமாக சட்டத்திலிருந்து விடுபாட்டு உரிமைகொண்டவர்கள் போன்று 'தந்திரமாக நடமாடக்கூடியதாக இருக்கின்ற சூழ்நிலை காணப்படுகிறது. இத்தகைய துரதிர்ஷ்டவசமான நிகழ்வுப் போக்கு உடனடியாகத் தடுத்து நிறுத்தப்படவேண்டும். குற்றவாளிகள் சட்டத்தின் பிரகாரமான நடவடிக்கைகளுக்கு முகங்கொடுப்பதிலிருந்து பாதுகாக்கப்படக்கூடாது. சட்டத்தின் ஆட்சியை அரசாங்கம் மீள நிலைநிறுத்துவதுடன் சம்பவங்களுக்குப் பின்னணியில் உள்ள உண்மைகள் பகிரங்கப்படுத்தப்படுவதை உறுதி செய்யவும் வேண்டும். அவ்வாறு செய்தால்தான் வன்முறைகளில் ஈடுபட்டவர்களும் நாசகாரச் செயல்களைச் செய்தவர்களும் தாங்கள் எந்த அட்டூழியத்தை எங்கென்றாலும் செய்துவிட்டுத் தப்பித்துக்கொள்ளலாம், என்றும் சட்டத்துக்கு அஞ்சவேண்டியதில்லை என்றும் நம்பிக்கொண்டிருக்கின்ற நிலைமையை இல்லாமற் செய்ய முடியும்.

தீவிரவாதிகளைக் கொண்ட சிறுகுழுக்கள் இந்தப் பகுதிகளில் குழப்பங்களை விழைவிக்கலாம். ஆனால், அமைதியாகவும் சௌஜன்யத்துடனும் வாழவேண்டுமென்பதே பெரும்பான்மையான மக்களின் இயல்பான பண்பு. இத்தகைய சூழ்நிலைகளில் சட்டத்தை பிரயோகிப்பது எந்தவொரு குழப்பநிலையையும் கட்டுப்படுத்தப் போதுமானதாகும். அரசியல் தலையீடுகள் காரணமாக சட்டத்தைப் பிரயோகிக்க முடியாமல் இருக்கும் சூழ்நிலையே நாட்டில் இனங்களுக்கிடையிலானதும் மதங்களுக்கிடையிலானதுமான உறவுகளை முரண்நிலைக்குக் கொண்டுசெல்கிறது. போகிறபோக்கில் நிலைவரங்களை அனுமதிப்பதில் உள்ள அபாயம் தீவிரமயப்போக்கிற்கு வழிவகுத்துவிடும். சிங்களவர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையிலான சமூக உறவுகள் ஒருவர் மீது மற்றவருக்கு இருக்கின்ற பயத்தை அடிப்படையாகக் கொண்டவை. போர்க்கால கட்டத்தின் போது தமிழர்களுக்கும் ஏனையவர்களுக்கும் இடையிலான உறவுகள் இப்படித்தான் அமைந்திருந்தன. அவை பிறகு மாறிவிட்டன. அதே போன்று சிங்களவர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையேயான உறவுகளில் காணப்படுகின்ற பீதி நிலையும் மாறிவிடலாம்.

**அரசிடமிருந்து கிடைக்கும் அரசியல் ஆதரவு மற்றும் ஒத்துழைப்பு காரணமாக மிகுந்த வலிமை கொண்டதாக வளர்ந்து அடக்க முடியாத சக்தியாக அணிவகுத்துவரும் சிங்கள தேசியவாதத்தினால் பாதிக்கப்படுவதாக உணரும் இலங்கையின் சிறுபான்மையினங்கள் முரண்நிலைத் தீர்வுக்கான அணுகுமுறையை அமெரிக்க சிவில் உரிமைகள் தலைவர் மார்ட்டின் லூதர் கிங்கிடமிருந்து கற்றுக்கொள்ள வேண்டும்**



## ஆபத்தான போக்கு

வேறுபட்ட சமூகங்களின் உறுப்பினர்கள் தங்களுக்கிடையே தப்பபிப்பிராயங்களையும் ஐயுறவுகளையும் கொண்டிருக்கிறார்கள் என்பதிற் சந்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தேசம் இல்லை. ஆனால், அவர்களில் சிலர் ஆளையாள் வெறுப்புடன் நோக்கினாலும் அல்லது விமர்சனம் செய்தாலும் கூட, பரஸ்பரம் பீதி கொண்டவர்களாக இல்லை. பொதுப லசேனா போன்ற அமைப்புகளினால் கட்டவிழ்த்துவிடப்படுகின்ற தற்போதைய தொடர்ச்சியற்ற- சிதறலான வன்முறைகள் அதிகரிக்க அனுமதிக் கப்பட்டால் இந்த நிலை மாறிவிட லாம். மற்றைய சமூகங்கள் மீதான தாக்குதல்களின் முன்னரங்கத்தில் நின்று செயற்படுபவர்களுக்கு ஊட கங்களில் சில பிரிவுகள் கொடுக் கின்ற முக்கியத்துவம் இளைஞர்கள் தாங்கள் பின்பற்றக்கூடியவர்களாக அவர்களை நினைத்து எதிர்காலத்தில் வன்முறைகளில் ஈடுபடுவதற்கு வழி வகுக்கக்கூடிய ஆபத்தைக் கொண்டி ருக்கிறது. நிலைவரம் இப்படியே சீரழிந்து கொண்டு போகுமேயா னால், அடுத்தவர் மீது அச்சம் கொண்டு சகலதையுமே சந்தேகக் கண்ணோடு பார்க்கின்ற சூழ்நி லையே மிஞ்சும், மற்றவரைப் பார்த்து பயங்கரவாதியோ என்று முன்னர் பயந்துகொண்டிருந்ததைப் போன்று நாம் ஒருவரை மற்றவர் பார்த்துப் பயப்படுகின்ற நிலைமை மீண்டும் தோன்றும். மேலும் நீண்டகாலத்துக்கு இழுபடக்கூடிய ஒரு மோதலுக்கான மார்க்கத்தில் நாம் நகருவதாகவே இது அமையும். அண்மையில் நாம் ஒரு மோதலில் இருந்து மீண்டுவந்தி ருக்கின்றோம். இந்நிலையில் மீண்டு மொரு மோதலை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கிறோம்.

முரண்நிலைக்கு தீர்வைக் காண்ப தற்கான தங்களது மார்க்கமாக இதுவ ரையில் முஸ்லிம்கள் பேச்சுவார்த்தை யையும் ஆலோசனை கலப்பையும் மாத்திரமே கடைப்பிடித்தார்கள். தங் களது உரிமைகளை முன்னிலைப் படுத்துகின்ற போதிலும்கூட, அர சாங்கத்தின் ஒட்டுமொத்தக் கொள் கைக்கட்டமைப்புக்குள்ளேயே தங் களது செயற்பாடுகளை மட்டுப்படுத் திக் கொண்டார்கள். இதற்குக் கார ணம் இலங்கையில் ஏனைய சமூகங் களுடன் அருகருகாக வாழ்வதற்கு முஸ்லிம்கள் தீர்மானித்ததேயாகும். அவர்களைப் பொறுத்தவரை பிரி வினையைப் பற்றிய சிந்தனையோ ஆர்வமோ இல்லை.

முஸ்லிம்கள் தொல்லைகளுக்குள் ளாக்கப்பட்ட சம்பவங்கள் பற்றிய விபரங்கள் அடங்கிய அறிக்கையை ஐ.நா.மனித உரிமைகள் உயர்ஸ்தா னிகரிடம் முஸ்லிம் காங்கிரஸ் கைய ளித்த போதிலும், அது தொடர்ந்தும் அரசாங்கத்தில் அங்கம் வகித்துக் கொண்டிருக்கிறது. தனது அமைச்சுக் குள் புகுந்து தன்னை அவமதித்த மைக்காக பொதுபலசேனாவு க்கு எதி ராக அமைச்சர் ரிஷாத் பதியுதீன் வழக்குத் தாக்கல் செய்த போதிலும் கூட, அவர் அரசாங்கத்திலேயே தொடர்ந்தும் இருக்கிறார். நடை முறைச்சாத்தியமான அணுகுமுறை களை அவர்கள் கடைப்பிடிப்பதில் அக்கறை கொண்டிருக்கிறார் என்ப தற்கும் தற்போதைய கட்டமைப்பு வரையறைகளுக்குள்ளேயே பிரச்சி னைகளைத் தீர்த்துக் கொள்வதில் ஆர்வம் கொண்டவர்களாக இருக்கி றார்கள் என்பதற்குமான சான்றே இது வாகும்.

அரசாங்கத்திற்குள்ளிருந்து கிடைக் கும் அரசியல் ஆதரவினதும் ஒத்து ழைப்பினதும் காரணமாக மிகுந்த வலிமை கொண்டதாக வளர்ந்து அடக்க முடியாத சக்தியாக அணிவ குத்துவரும் சிங்களத் தேசியவாதத் தினால் பாதிக்கப்படுவதாக உணருகி ன்ற இலங்கையின் இன, மத சிறு பான்மையினங்கள் முரண்நிலைத் தீர் வுக்கான அணுகுமுறையை அமெ ரிக்க சிவில் உரிமைகள் தலைவர் மார்ட்டின் லூதர் கிங்கிடமிருந்து கற் றுக்கொள்ளவேண்டும். அவர் அமெ ரிக்க கறுப்பின மக்களுக்கு சமத்துவ உரிமைகள் வேண்டுமென்று குரல் கொடுத்துப் போராடினார். ஆனால் பிரிவினையைக் கோரவில்லை. அர சியலமைப்பை உறுதியாக ஆதரித்து, சகலருக்குமான நீதி என்ற வரைய றைக்குள் கறுப்பின மக்களின் கோரிக் கைகளை அவர் வெளிப்படுத்தினார். கறுப்பின மக்களுக்கு உரிமைகளைக் கொடுப்பதன் மூலம், தங்கள் நாடு அச்சுறுத்தலுக்குள்ளாகும் என்று வெள்ளையர்கள் அஞ்சும் வகையில் செயற்படாமல் அவர் அமெரிக்க வெள்ளையர்கள் உன்னதமான கோட்பாடுகளின் வழியில் பெருந் தன்மையைக்காட்ட வேண்டும் என்று கிங் அழைப்புவிடுத்தார். நீதிக்கும் அரசியல் தீர்வுக்குமான தங்கள் சொந்தப் போராட்டத்தை முன்னெ டுப்பதில் தமிழ் மக்கள் பின்பற்ற வேண்டிய ஒரு பாடம் இது! ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்நாட்டு அரசியல்

# முஸ்லிம்கள் மீதான பொதுபலசேனாவின் அட்டூழியத்தை நியாயப்படுத்தல்



லத்தீப் பாரூக்



சிங்கள சியோனிச பொதுபல சேனாவின் குண்டர்கள் அளுத்கம, பேருவளை மற்றும் தர்கா நகரில் 2014 ஜூன் 15 ஞாயிற்றுக்கிழமையும் ஜூன் 16 திங்கட்கிழமையும் ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டிருந்த வேளையில் முஸ்லிம்களுக்குச் சொந்தமான உடைமைகளைத் தீவைத்து சூறையாடி நிர்மூலஞ்செய்துகொண்டிருந்த வேளை, தலைநகர் கொழும்பில் நினைத்துப்பார்க்க முடியாத அளவுக்கு நச்சுத்தனமான காரியமொன்று இடம்பெற்றுக்கொண்டிருந்தது- பொதுபலசேனாவின் அட்டூழியங்களை மூடிமறைப்பதற்கான புகைத்திரையொன்றை உருவாக்குவதற்கு முஸ்லிம்களைக் கொடூரக்காரர்களாகக் காட்டுவதில் ஜாதிகஹெல உறுமய தீவிரமாக ஈடுபட்டுக்கொண்டிருந்தது.

**ஜாதிக ஹெல உறுமய கடைப்பிடிக்கும் சியோனிச நண்பன் தந்திரோபாயம்**

புத்தளம், காத்தான்குடி மற்றும் பேருவளையை தங்களுக்குப் பாதுகாப்பான மையங்களாகப் பயன்படுத்துகின்ற முஸ்லிம் தீவிரவாதிகளை அடையாளம் கண்டு நாடுகடத்த வேண்டும் என்று ஜாதிகஹெல உறுமயவின் தேசிய அமைப்பாளர் நிஷாந்த சிறிவர்ணசிங்க கொழும்பில் ஜூன் 15 ஞாயிறன்று கூறியதைக் காணக்கூடியதாக இருந்தது. அளுத்கம, பேருவளை மற்றும் தர்கா நகரில் தனது பொதுபலசேனா நண்பர்களினால் கட்டவிழ்த்துவிடப்பட்ட கொடுஞ்செயல்களைப் பற்றி அவர் ஒருபோதுமே ஒரு வார்த்தை கூட பேசவில்லை.

முன்கூட்டியே திட்டமிடப்பட்ட ஒரு பிரசாரத்தின் அடுத்த கட்டமாக ஜூன்17 செவ்வாய்க்கிழமை ஜாதிக ஹெல உறுமயவின் பொதுச் செயலாளரான அமைச்சர் பாட்டாலி சம்பிக்க ரணவக்க இந்தியாவையும் மாலைதீவையும் பாகிஸ்தானையும் சேர்ந்த மதத்தொடர்புடைய சகல தஞ்சக் கோரிக்கையாளர்களையும் நாடு கடத்த வேண்டுமென்று அரசாங்கத்திடம் வேண்டுகோள் விடுத்தார். ஜாதிக ஹெல உறுமயவின் தலைவரான ஓமல்பே சோபிததேரர் முஸ்லிம்கள் கறுப்புக் கொடிகளை பறக்கவிடக்கூடாது என்று ஜூன் 19ஆம் திகதி எச்சரிக்கைவிடுத்தார். ஹர்த்தால் காரணமாக மதரீதியான எந்தப் பதற்ற நிலையும் தோன்றினால், அந்த ஹர்த்தாலை ஏற்பாடு செய்தவர்களே அதற்குப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொறுப்பேற்க வேண்டியிருக்கும் என்றும் அவர் அச்சுறுத்தினார்.

இந்த ஹர்த்தால்களின் விளைவாக, சிங்களவர்களுக்குச் சொந்தமான எந்தவொரு வர்த்தக நிலையமோ அல்லது பௌத்த வழிபாட்டுத் தலமோ சேதப்படுத்தப்படுமானால் அதற்கும் ஏற்பாட்டாளர்களே பொறுப்பேற்க வேண்டியிருக்கு மென்றும் ஒமல்பே சோபித தேரர் பயமுறுத்தினார். முஸ்லிம் பகுதிகளில் உள்ள சிங்களவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறு பொலிஸாரையும் பாதுகாப்புப் படையினரையும் கேட்டுக்கொண்ட அவர் வன்முறையைப் பரப்புபவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கோரிக்கையும் விடுத்தார். அளுத்கமவிலும் பேருவளையிலும் முஸ்லிம்களுக்கு எதிராக பொதுபலசேனா குண்டர்களினால் கட்டவிழ்த்துவிடப்பட்ட வெட்கக்கேடான அட்டூழியங்கள் பற்றி அவரும் ஒரு வார்த்தை பேசவில்லை. அமைதி, சமாதானம் மற்றும் சகிப்புத்தன்மையின் சின்னம் என்று வர்ணிக்கப்படுகின்ற காவியுடையில் இருக்கும் ஒரு மனிதரிடமிருந்து இத்தகைய வெறுப்பூட்டுகின்ற செய்தி எதிர்பார்க்கப்படவில்லை. சமாதானத்தை நேசிக்கும் சகல இலங்கையர்களுக்கும் இது பேரதிர்ச்சியாக இருந்தது.

முஸ்லிம்களுக்கான ஒமல்பே சோபித தேரரின் செய்தியை பின்வருமாறுதான் அர்த்தப்படுத்த வேண்டும்;

'உங்களை நாம் தாக்குவோம். உங்களது உடைமைகளை எரிப்போம். உங்கள் வீடுகளைச் சூறையாடுவோம். வீடுகளை விட்டு உங்களை வெளியேற்றுவோம். நாம் விரும்புகின்ற எதையும் செய்வோம். ஆனால், நீங்கள் கூட்டங்களை நடத்தக்கூடாது. ஆர்ப்பாட்டங்களை நடத்தக்கூடாது. அமைதியான ஊர்வலமாகக் கூட செல்லக்கூடாது. பொதுபலசேனா உங்கள் மீது கட்டவிழ்த்துவிட்ட கொடுமைகள் மீதான உங்கள் ஆத்திரத்தை வெளிக்காட்ட கறுப்புக் கொடிகளைப் பறக்கவிட்டு, ஹர்த்தால் என்று எதையும் அனுஷ்டிக்கக் கூடாது'.

இத்தகைய கூற்றின் மூலமாக அவர் தனது கர்வத்தையும் பாசிச மனோபாவத்தையும் வெளிக்காட்டினார். இலங்கைத்தீவில் உள்ள முஸ்லிம் சமூகத்தினரை தங்களது விருப்பப்படி வெட்டிக்கொல்லக்கூடிய முயல் கூட்டமாக அல்லது கோழிக் குஞ்சுக்கூட்டமாக அவர் நினைத்தார் போலும், முழு உலகமுமே இலங்கைக்குள் இருப்பதாகவும் உலகத்தின் ஒரு பகுதியல்ல இலங்கை என்றும் அவர் நினைக்கிறார் போலும், அவர் கண்களைத் திறந்து உலகில் என்ன நடக்கிறது என்பதைப் பார்ப்பாரேயானால், உலகம்பூராவும் உள்ள முஸ்லிம்கள் தங்கள் உரிமைகளையும் கௌரவத்தையும் உறுதிப்படுத்துவதற்காக பெரும் வல்லாதிக்க நாடுகளான அமெரிக்கா, பிரிட்டன் ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் இஸ்ரேலில் உள்ள தீய சக்திகளுக்கு எதிராகப் போராடிக்கொண்டிருக்கிறார்கள் என்பதை புரிந்துகொள்வார்.

அமைச்சர் சம்பிக்க ரணவக்க ஜூன் 20 ஆம் திகதி கோமாளித்தனத்தின் உச்சத்துக்குச் சென்றதைக் காணக்கூடியதாக இருந்தது. கொழும்பில் உள்ள அமெரிக்கத் தூதுவர் மிச்சேல் ஜே.சிசன் ஜிஹாதிகளை போஷித்து வளர்ப்பதாகக் குற்றஞ்சாட்டிய ரணவக்க அத்தகைய நடவடிக்கை மூலமாக தூதுவர் இலங்கையின் பாதுகாப்பை மாத்திரமல்ல அமெரிக்காவினதும் முழு உலகினதும் பாதுகாப்பை ஆபத்துக்குள்ளாக்குகிறார் என்று குறிப்பிட்டார். சிங்களவர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையே முரண் நிலையைத் தோற்றுவிப்பதன் மூலமாக நாட்டில் இன நல்லுறவை சீர்குலைக்கின்ற ஜிஹாதிகளை மிச்சேல் சிசன் உற்சாகப்படுத்தக்கூடாது என்றும் இவ்வாறு ஜிஹாத் தீவிரவாதிகளை உற்சாகப்படுத்தும் நடவடிக்கைகளை அவர் உடனடியாகக் கைவிடவேண்டும் என்றும் ரணவக்க கிண்டலாகக் கேட்டுக்கொண்டார். இத்தகையதொரு கோரிக்கையை அமெரிக்கத் தூதுவரை நோக்கி விடுத்ததன் மூலமாக அமைச்சர் ரணவக்க தன்னைத் தானே நகைப்புக்கிடமானவராக்கினார்.

**கொழும்பிலுள்ள அமெரிக்க தூதுவர் ஜிஹாதிகளை போசித்து வளர்ப்பதாக குற்றஞ்சாட்டியதன் மூலம் அமைச்சர் சம்பிக்க ரணவக்க கோமாளித்தனத்தின் உச்சத்திற்குச் சென்றார். பொதுபலசேனா மத ரீதியான பதற்ற நிலையைத் தூண்டிவிடவில்லை என்றும் கூறிய அவர் ஹர்த்தால்களை நடத்துவதன் மூலமாக தங்களை அதட்டலாம் என்று ஹக்கீமும் அஸாத் சாலியும் நினைக்கக்கூடாது என்றும் எச்சரிக்கை செய்தார்.**

ஜாதிகஹெல உறுமயவின் தலைமையகத்தில் செய்தியாளர் மகாநாட்டில் உரையாற்றிய சம்பிக்க ரணவக்க 'பொதுபலசேனா மதரீதியான பதற்ற நிலையைத் தூண்டிவிடவில்லை. ஹர்த்தால் போன்ற போராட்டங்களை நடத்துவதன் மூலமாக எம்மை அதட்டலாம் என்று ரவூப் ஹக்கீமும் அசாத்சாலியும் நினைத்தால், அவர்கள் எங்களைத் தவறாக மதிப்பிடுகிறார்கள் என்றுதான் அர்த்தம் என்று கூறியிருந்தார்.ஜிஹாதிகளும் தலிபான்களும் எங்கெல்லாம் செயற்படுகிறார்களோ அங்கெல்லாம் பெரும் அழிவுகளை ஏற்படுத்துகிறார்கள். மதங்களுக்கிடையே மோதல் ஏற்படுத்தி நல்லுறவுக்கு பங்கம் விளைவிக்கிறார்கள். பேருவளை, தர்கா நகர் சம்பவங்கள் பொதுபலசேனாவினால் விளைவிக்கப்பட்டவையல்ல.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதரீதியான மோதல்கள் ஏனைய பகுதிகளுக்கும் பரவுமேயானால் ரவூப் ஹக்கீம், அசாத்சாலி, முஜிபுர் ரஹ்மான் மற்றும் ரிஷாத் பதியுதீன் ஆகியோரே அதற்கான முழுப்பொறுப்பையும் ஏற்கவேண்டியிருக்கும்' என்றும் செய்தியாளர்கள் மத்தியில் ரணவக்க கூறியிருந்தார். அவர் தனது உடலமைப்பில் எந்தப் பகுதியிலிருந்து இத்தகைய அபத்தங்களையெல்லாம் உதிர்க்கிறாரோ என்று ஆச்சரியப்படவேண்டியிருக்கிறது.

அளுத்கம, பேருவளை, தர்கா நகரில் பொதுபலசேனா அட்டூழியங்களைச் செய்யவில்லை என்று கூறியதன் மூலமாக ரணவக்க தன்னைத் தானே கோமாளியாக்கிக் கொண்டார். அளுத்கமவிலும் பேருவளையிலும் இடம்பெற்ற வன்முறைகளுக்கு பொதுபலசேனா பொறுப்பில்லை என்றால், அவற்றை யார் செய்தது? இன்னொரு கிரகத்திலிருந்து வக்கிரம் பிடித்த சிங்களவர்கள் சிலர் அளுத்கமவிலும் பேருவளையிலும் தரையிறங்கி இக்குற்றச்செயல்களையெல்லாம் செய்தார்களா? அமைச்சர் ரணவக்க, அவரது ஜாதிக ஹெல உறுமய, பொதுபலசேனா சகாக்கள் மற்றும் அவர்களுடைய ஞானத் தந்தைகளைத் தவிர, முழு உலகிற்குமே அளுத்கம, பேருவளை மற்றும் தர்கா நகரில் நடந்தது என்ன என்பதும் அவற்றுக்கெல்லாம் யார் பொறுப்பு என்பதும் நன்றாகத் தெரியும்.

பொதுபலசேனா இந்த அநியாயங்களைச் செய்யவில்லை என்று பகிரங்கமாகக் கூறுவதற்கு அமைச்சர் ரணவக்க தயங்கவில்லையென்றால், அது எதை வெளிக்காட்டுகிறது? அமைதியாக வாழ்வதில் அக்கறை கொண்ட முஸ்லிம்களுக்கு எதிரான நாசகாரத்தனமான திட்டங்களைச் செயற்படுத்துவதற்கு அவர்கள் வெட்கமேதுமில்லாமல் பொய்களையும் ஏமாற்றுக்களையும் பயன்படுத்துகிறார்கள் என்பதுதானே பிரகாசமாகத் தெரிகிறது.

ஹெல கறுமய என்று முன்னர் வர்ணிக்கப்பட்ட ஜாதிக ஹெல உறுமய பிரதான போக்கு சிங்களவர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தவுமில்லை புத்தமதத்தை மேம்படுத்துவதில் அதற்கு அக்கறையுமில்லை. இது எல்லோருக்கும் தெரிந்தவிடயம். இலங்கையில் உள்ள முஸ்லிம் சமூகத்தை நிர்மூலஞ்செய்யும் தங்களின் அரசியல் குறிக்கோளை அடைவதற்காக முஸ்லிம்களுக்கு எதிராக சிங்களவர்களைத் தூண்டிவிடுவதற்கு புத்த மதத்தை அவர்கள் பயன்படுத்துகிறார்கள்.

1915 சிங்கள- முஸ்லிம் கலவரங்களின் நூற்றாண்டு நிறைவைக் குறிக்குமுகமாக 2015 இல் சிங்கள- முஸ்லிம் கலவரமொன்று தவிர்க்க முடியாமல் மூளும் என்று சுமார் ஒன்றரை



வருடங்களுக்கு முன்னர் ஜாதிக ஹெல உறுமயவின் உதயகம்மன்பில எதிர்வு கூறியிருந்தார். இதை முஸ்லிம்கள் அறிவார்கள். அவரின் எதிர்வுகூறல் சரியாகிவிட்டது பாருங்கள். 1915 சிங்கள- முஸ்லிம் கலவரங்களின் நூற்றாண்டை அளுத்கம, பேருவளை, தர்கா நகர் மற்றும் சுற்றிவரவுள்ள பகுதிகளில் நாம் நினைவுகூர்ந்து கொண்டிருக்கிறோமல்லவா? மிகவும் கச்சிதமாகத் திட்டமிடப்பட்டு முஸ்லிம்களுக்குச் சொந்தமான வர்த்தக நிலையங்கள், வீடுகள், வணக்கத்தலங்கள் சூறையாடப்பட்டு நிர்மூலஞ் செய்யப்பட்டிருக்கின்றன. முஸ்லிம் குடும்பங்கள் பள்ளிவாசல்களிலும் பாடசாலைகளிலும் உறவினர்களின் வீடுகளிலும் தஞ்சம் புகுந்திருக்கின்றன. வசதியுடன் வாழ்ந்த பல முஸ்லிம்கள் பிச்சைக்காரர்கள் போன்று ஆக்கப்பட்டிருக்கிறார்கள். இது இனவெறியர்களின் வக்கிர வேட்கையைத் தீர்த்து வைத்திருக்கக்கூடும்.

ஜாதிக ஹெல உறுமயவும் குற்றச் செயல்களில் அதன் பங்காளியான பொதுபலசேனாவும் அவற்றின் புதிய நண்பர்களான இஸ்ரேலியர்களின் தந்திரோபாயத்தைக் கடைப்பிடிக்க ஆரம்பித்திருப்பதைக் காணக்கூடியதாக இருக்கிறது. அதாவது, கடுங்கொடிய செயல்களைச் செய்துவிட்டு அவர்கள் அதனால் பாதிக்கப்பட்டவர்களையே பொறுப்பாக்கிக் குற்றஞ் சுமத்துகிறார்கள்.

உலகம் பூராவுமிருந்து சியோனிச யூதர்கள் பாலஸ்தீனத்துக்குக் கொண்டுவரப்பட்டார்கள். பாலஸ்தீன மண்ணின் மைந்தர்களும் புத்திரிகளும்

**ஹர்த்தால்களின் விளைவாக சிங்களவர்களின் உடைமைகளுக்கு சேதம் ஏற்படுமானால் ஏற்பாட்டாளர்களே அதற்கு பொறுப்பேற்க வேண்டிருக்கும் என்று பயமுறுத்திய ஓமல்பே சோபித தேரர் அளுத்கமவிலும் பேருவளையும் முஸ்லிம்களுக்கு எதிராக பொதுபலசேனா குண்டர்களினால் கட்டவிழ்த்துவிடப்பட்ட அட்டூழியங்கள் பற்றி ஒரு வார்த்தைகூடப் பேசவில்லை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படுகொலை செய்யப்பட்டதுடன் இலட்சக்கணக்கானவர்கள் அகதிகளாக வெளியேறி முகாம்களில் தஞ்சமடைந்தார்கள். பாலஸ்தீன மண்ணில் யூதர்கள் குடியேற்றப்பட்டார்கள். அமெரிக்கா, பிரிட்டன், ஐக்கிய நாடுகள் சபை ஆகியவற்றின் வஞ்சகத்தனமான கைங்கரியங்களினால் பாலஸ்தீனம் இனவெறி பிடித்த இஸ்ரேல் என்ற நாடாக மாற்றப்பட்டது.

இன்று பாலஸ்தீனர்கள் அகதி முகாம்களில் வாழ்கிறார்கள். அவர்களுக்கு பயங்கரவாதிகள் என்று பட்டஞ்சூட்டப்பட்டிருக்கின்ற அதே வேளை, 1930களில் இருந்து எண்ணற்ற தடவைகள் பாலஸ்தீன மக்களை படுகொலை செய்த யூதப் பயங்கரவாதிகள் கௌரவமான மக்களாக உலகினால் ஏற்கப்பட்டிருப்பதைக் காண்கிறோம். இதே மொழியில் தான் ஜாதிக ஹெல உறுமயவும் பொதுபலசேனாவும் அவர்களின் ஞானத்தந்தையர்களும் அளுத்கமவிலும் பேருவளையிலும் முஸ்லிம்கள் மீதான தங்கள் குற்றச்செயல்களை மூடிமறைப்பதற்குப் பேசிக்கொண்டிருக்கிறார்கள்.

ஜூன் 20 வெள்ளிக்கிழமை முஸ்லிம் ஒருவருக்குச் சொந்தமான நவீன ஆடையகம் தீயில் பொசுங்கியது. 30 கோடி ரூபாவுக்கும் அதிகமான பெறுமதிகொண்ட ஆடைவகைகள் அதற்குள் இருந்ததாகக் கூறப்படுகிறது. தீயணைப்புப் படையினருக்கு நேரகாலத்தோடு அறிவிக்கப்பட்ட போதிலும் அவர்கள் இரண்டரை மணித்தியாலங்களுக்குப் பின்னரே அந்த இடத்துக்கு வந்து சேர்ந்தார்கள் என்று ஆடையகத்தில் இருந்தவர்கள் மூலம் அறியக்கூடியதாக இருக்கிறது. இத்தகைய தண்டனையைப் பெறுவதற்கு அந்த ஆடையகத்தின் அப்பாவி உரிமையாளர் செய்த குற்றம் தான் என்ன? சுமார் 2600 வருடங்களாக புத்தமதம் செழித்து வளர்ந்த இந்த தம்மதுவீபத்தில் எத்தகைய வக்கிரத்தனம் தலைவிரித்தாடுகிறது பாருங்கள். இந்த ஈனச் செயல்களையெல்லாம் செய்த இனவெறிக் குண்டர்கள் மனிதப் பிறவிகளுக்கு இருக்கக்கூடிய உணர்வுகளில், பண்புகளில் எந்தவொன்றையுமே கொண்டிராதவர்கள் போல் தெரிகிறது. சட்டத்தை மதிக்காத இத்தகைய காட்டுமிராண்டித்தனம் நினைத்துப்பார்க்கவே முடியாத விளைவுகளைக் கொண்டுவரப் போகிறது என்பதையும் நாடு முழுவதுமே நாசமாகப் போகிறது என்பதையும் இவர்கள் விளங்கிக் கொள்வார்களா?

இதுதான் பேரினவாதிகளின் மனோநிலையாக இருக்கிறதென்றால், பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியினர் என்ன செய்தார்கள் என்று பாருங்கள். பாதிக்கப்பட்ட முஸ்லிம்களின் அவலத்தைப் பார்ப்பதற்கு அளுத்கமவுக்கும் பேருவளைக்கும் விஜயம் செய்வதற்கு ஐ.தே.க. அரசியல்வாதிகளுக்கு நேரம் கிடைக்கவில்லை. ஆனால், மிருகங்களின் பிரச்சினைகளைக் கண்டறிய அவர்கள் தெஹிவளை மிருகக்காட்சிச் சாலைக்குச் சென்றார்கள். இன்றைய இலங்கையின் அரசியல் இந்தளவுக்கு அருவருக்கத்தக்கதாகமாறியிருக்கிறது.

முஸ்லிம் மக்களுக்கு எதிராகக் கட்டவிழ்த்துவிடப்பட்ட வன்முறைகளின் விளைவான அழிவுகளையும் சேதங்களையும் ஊடகங்களும் இருட்டடிப்புச் செய்துவிட்ட வெட்கக்கேடான செயலையும் கண்டோம். ஒரு காலத்தில் பெருமைப்படக் கூடியவையாக இருந்த இலங்கையின் பிரதான ஊடகங்கள் இப்போது முஸ்லிம்களுக்கு எதிரான சதிச் செயல்களிலும் நாசகாரச் செயல்களிலும் ஜாதிக ஹெல உறுமயவுக்கும் பொதுபலசேனாவுக்கும் உடந்தையாகச் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றன. ஆரம்பத்தில் இருந்தே முஸ்லிம்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படுகின்ற நடவடிக்கைகள் தொடர்பில் பக்கச்சார்பான முறையிலேயே செய்திகள் வெளியிடப்பட்டுக் கொண்டிருப்பதை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது.

எவ்வாறெனினும், ஒரு விடயம் மாத்திரம் நிச்சயமானது. 1983 கறுப்பு ஜூலைக்குப் பிறகு தமிழர்களில் பெரும் எண்ணிக்கையானவர்கள் வெளிநாடுகளுக்கு ஓடிச் சென்றதைப் போன்று முஸ்லிம் சமூகம் ஓடிவிடப்போவதில்லை. நிர்மூலஞ் செய்யப்பட்ட உடைமைகளை தங்கள் வெறுங்கைகளால் என்றாலும் மீழக் கட்டியெழுப்ப முஸ்லிம்கள் தீர்மானித்து விட்டார்கள். அல்லாவின் ஆசீர்வாதத்தைவேண்டி அவர்கள் கைகளை மேலே உயர்த்தும் போது முஸ்லிம்கள் தங்களது உடைமைகளுக்குத் தீவைத்த இனவெறிக் குண்டர்களுக்காகப் பரிதாபப்படவும் செய்கிறார்கள். குணப்படுத்த முடியாத புற்றுநோய் போன்று மாறிவிட்ட இனவெறிப்போக்கு சொர்க்கபுரியாக விளங்கிய இந்த அழகிய இலங்கைத் தீவை நரகமாக மாற்றுவதற்கு இனவெறியர்கள் கங்கணம் கட்டி நிற்கிறார்கள். ■




**1915 சிங்கள-முஸ்லிம் கலவரங்களின் நூற்றாண்டு நிறைவைக் குறிக்கும் முகமாக 2015இல் சிங்கள-முஸ்லிம் கலவரம் ஒன்று தவிர்க்க முடியாமல் மூளும் என்று உதயகம்பன்பில ஒன்றரை வருடங்களுக்கு முன்னர் எதிர்வு கூறியிருந்தார். அது சரியாகிவிட்டது பாருங்கள்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊடகச் சுதந்திரத்தின் வரையறைகள்



பேராசிரியர்
சி.சிவசேகரம்




> "நமது கருத்துகள் எம்மைச் சூழவுள்ளோரை எவ்வாறு பாதிக்கக்கூடும் என்பதை கருத்தில் கொண்டு அவற்றை கூறுவது நல்லது. சரி–பிழைகளுக்கு அப்பால் சமூக நலன் பற்றிய பார்வையும் முக்கியமானது. நம்மிடையே உள்ள மூட நம்பிக்கைகளை பிறரிடம் தொற்ற வைப்பது சமூகக்கேடானது."

ஒரு சமூகத்தில் ஜனநாயகம் இருப்பதற்கு அங்கு கருத்துச் சுதந்திரம் இருந்தாக வேண்டும். கருத்துச் சுதந்திரம் என்பதை நாம் கட்டற்ற சுதந்திரமாகக் கொள்ள இயலாது. ஏனெனில் அது வலிந்து பொய்யுரைப்பதற்கான சுதந்திரமுமாகலாம். எனவே கருத்துச் சுதந்திரம் என்பது கூறப்பட்ட ஒரு கருத்தின் உண்மைத் தன்மையைச் சார்ந்தே அமைகிறது. பிழையான தகவலுக்கும் பொய்யான தகவலுக்கும் பெரும் வேறுபாடுண்டு. இங்கு முக்கியமான விடயம் என்னவெனின் பிழையானதைக் கூறுபவர் அது உண்மையென்று நம்பிக் கூறுகிறார். பொய்யானதைக் கூறுபவர் அதன் பொய்மையை அறிந்து அதைக் கூறலாம் அல்லது திட்மிட்டுப் பரப்பப்படும் ஒரு பொய் தனக்கு உவப்பானது என்பதால் அதை விசாரியாமலே பிறரிடம் பரப்பலாம். எவ்வாறாயினும் தவறான தகவல்கள் திருத்தப்பட வேண்டும். பொய்யானவை கண்டிக்கப்படவேண்டும். தனி மனிதர்களாக நாங்கள் கூறும் ஒவ்வொரு கருத்திற்கும் அதன் நேரடி, மறைமுக விளைவுகட்கும் நாம் பொறுப்பானவர்கள். சில சமயங்களில் நாம் சொல்லுகிற பொய்கட்காக நாம் தண்டனை பெறுகிறோம். சில சமயங்களில் நாம் சொல்கிற உண்மைகளும் நம்மைத் தண்டனைக்கு உட்படுத்தலாம். அது நம்மைப் பயமுறுத்தலாகாது.




> பரவலான கருத்துப் பரிமாற்றத்திற்கும் பொது விவாதத்திற்குமான களங்கள் இல்லாத வரை ஜனநாயகம் குறைபாடுடைய தாகவே இருக்கும்.

எவ்வாறாயினும், நம்முடைய கருத்துகள் நம்மைச் சூழவுள்ளோரை எவ்வாறு பாதிக்கக்கூடும் என்பதைக் கருத்திற்கொண்டு அவற்றைக் கூறுவது நல்லது. இவ்விடத்துச் சரிபிழைகட்கும் அப்பால் சமூக நலன் பற்றிய ஒரு பார்வையும் முக்கியமானது. நம்மிடையேயுள்ள மூடநம்பிக்கைகளை நாம் பிறரிடம் தொற்றவைப்பது சமூகக் கேடானது என்பது என்னுடைய மதிப்பீடு. அதேவேளை சமூகப் பயனுள்ள தகவல்களைப் பிறருடன் பகிர்வதும் உண்மை-பொய்களை விசாரிப்பதும் சமூக நலன் தருவதாகும். தனிமனிதத் தகவற் பரிமாற்றங்கள் தாக்கம் மிக்கன எனின் ஒரு பெரிய சமூகப் பரப்பில் இயங்கும் தகவற் பரிமாற்ற வசதியான செய்தி ஊடகங்களின் பொறுப்பு எத்தகையதென நான் கூறவேண்டியதில்லை.

தனியொருவருக்குள்ள கருத்துச் சுதந்திரம் போன்று ஊடகங்கட்கும் கருத்துச் சுதந்திரம் முக்கியமானது. அதேவேளை, தனிமனிதர்கள் தமது கருத்துகட்குப் பொறுப்பானவர்களாயிருப்பது போல, ஊடகங்கள் தாம் வழங்கும் தகவல்கட்கும் பரப்பும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருத்துகட்கும் பொறுப்பாயிருக்க வேண்டும். இப்பொறுப்பு தனி மனிதப் பொறுப்பைவிடப் பன்ம டங்கு பெரிது. ஏனெனில் ஒரு பத்திரி கையோ தொலைபரப்பு ஊடகமோ மின் ஊடகமோ கூறுகிற தகவல்கள் துரிதமாகப் பலரையும் சென்றடை கின்றன. ஒரு தவறான தகவல் ஏற்ப டுத்தும் தாக்கங்களை அத் தகவலைப் பின்னர் திருத்துவதன் மூலம் சரிப்ப டுத்த இயலாது. அதனாலேயே நமது அச்சு ஊடகத்துறையில் 'பத்திரிகை தர்மம்' என்ற ஒரு கருத்தாக்கம் பல காலமாகப் பேசப்பட்டது.

ஊடகத்துறை என்பது மிக வணிக மயமாகிவிட்டது. ஆனாலும், ஊட கங்கட்கான அறவிழுமியங்களையும் தகவல் நம்பகத்தையும் பேண இய லும். ஊடகங்கட்கான கண்காணிப்பு அமைப்புகள் உள்ளன. ஒழுங்கீன மான முறையிற் தகவல் சேகரித்தல் (லஞ்சம், அத்துமீறல்கள், ஆள்மா றாட்டம் போன்ற முறைகள்), அவ தூறு, பொய்த் தகவல்கள், விஷமப் பிரசாரம் போன்றவை பல நாடுக ளில் ஊடக நிறுவனங்களின் ஒத்து ழைப்புடன் கண்காணிக்கப்படுகின் றன. எனினும் ஊடகங்களின் ஜன நாயகம், முக்கியமான பல இடங்க ளில் மீறப்படுகிறது.

ஒரு பத்திரிகையை நடத்தும் செல வைச் சமாளிக்க அதன் விற்பனை வருமானம் போதாது. விற்பனை வருமானத்தில் பெரும் பகுதியை விநியோகச் செலவுகள் விழுங்கி விடுகிற போது, நாளேடுகள் முற்றி லும் தனியார் விளம்பர வருமானத் தையும் சில சமயம் அரசாங்க விளம் பரங்களையும் நம்பியே நடக்கின்றன. இதற்கு விலக்கானவை அரசியற் கட்சி ஏடுகள். அவை கட்சிகளின் ஆதரவாளர்களை மட்டுமே எட்டு கின்றன.

மக்கள் எதை அறியத்தகும், எதை அறியத் தகாது என்பதை ஊடகங்கள் தீர்மானிக்கின்றன. ஆனால் ஊடகங் கள் எதைத் தீர்மானிக்கின்றன என் பதை ஊடக முதலாளிகளும் அவர்க ளுக்கு ஆதரவாக உள்ள பெரிய கம்பனிகளும் தீர்மானிக்கின்றன. நாளேடுகளை விட முக்கியமாகத் தொலைக்கட்சிச் செய்திகள் மீதும் நிறுவன ஆதிக்கம் அதிகம். மக்கள் அறிய வேண்டிய உண்மைகள் உரிய நேரத்தில் அவர்களைச் சென்றடை யாமற் தடுப்பதிற் பெரிய ஊடகங்கள் ஒரு முகமாகவே இயங்குகின்றன. விலக்காக நடக்கிற சில நாளேடுகள் உள்ளன. ஆனால் அவையும் தம் மைத் தேசத்துரோகக் குற்றத்திற்கு ஆளாக்காதபடி கவனமாக இருக்கின் றன. உதாரணமாக விக்கிலீக்ஸ் தக வல்கட்கும் ஸ்னோடனின் அம்பலப் படுத்தல்கட்கும் இடம் வழங்கிய 'கார்டியன்' நாளேடு பிரித்தானிய ஸ்கொட்லன்ட் யாட் பொலிஸ் உளவுப் பிரிவின் ஆக்கினைக்கு உட் பட்டது. எனினும் கார்டியன், தி இன் டிபென்டன்ற் போன்ற ஏடுகள் முத லாளிய நிறுவனத்துக்கு எதிரான நிலைப்பாட்டை எடுப்பதில்லை. அதைவிடச் சில நாடுகளைப் பற்றி (குறிப்பாக வடகொரியா, ஸிம்பாப்வே, சிரியா, ஈரான், சீனா, ரஷ்யா ஆகியவற்றைப் பற்றி) ஏலவே நிறுவப்பட்ட தவறான கருத் துகளைத் திருத்தவோ மேற்குலக ஆட்சியினரின் கிரமமான விஷமங் களை அம்பலப்படுத்தவோ அதிகம் முயல்வதில்லை. சில தனிப்பட்ட பத்திரிகை எழுத்தாளர்கள் விடாது பயனுறக் குறுக்கிடுகிறார்கள். பொது விடயங்களில் அக்கறையுடையோர் அந்த எழுத்துகளைத் தேடி வாசிக் கின்றனர். எனினும், பெருவாரியான நாளேடுகள் வலதுசாரிச் சிந்தனை யையும் வெள்ளை இனவாத உணர் வையும் ஊக்குவிப்பன. தொலை பரப்பு ஊடகங்களின் கதையும் அதுவே. நம்மிடையே பி.பி.சி. வானொலியும் தொலைக்காட்சியும் பற்றிய மயக்கங்கள் இன்னமும் உள்ளன. லண்டன் ரைம்ஸ் பத்திரி கையின் பக்கச் சார்பின்மை பற்றிய மயக்கங்களும் உள்ளன. ஆனால் குறிப்பான சில தருணங்களில் அவை தம்முடைய நடுநிலைத் தோற்றத்தை நழுவவிடுகின்றன. நெருக்கடிகளி டையே அவற்றால் தமது அரசியல் நிலைப்பாட்டை நுட்பமாகப் பேண இயலாது போகிறது. எவ்வாறாயி னும் இணையத்தள ஊடகங்களில் ஒரு ஜனநாயக இடைவெளி உள்ளது. ஆனால் அதை ஒரு எல்லைக்கப்பால் விரிவாக்க இயலுவதில்லை. டுவிட் டர், ஃபேஸ்புக் போன்றவை மூலமும் குறுந்தகவல்கள் மூலமும் வட ஆபி ரிக்காவில் கிளர்ச்சிகளைத் தூண்ட முடிந்தது. ஆனால் அக்கிளர்ச்சிகளை அவற்றின் தர்க்க ரீதியான முடிவுக்கு வழிநடத்த இயலவில்லை.



பரவலான கருத்துப் பரிமாற்றத்துக் கும் பொது விவாதத்துக்குமான களங்கள் இல்லாத வரை, சனநாயகம் குறைபாடாகவே இருக்கும்.

மேற்குலகில் எவ்வாறோ ஒரு ஜன நாயகத் தோற்றம் இருக்கிறது. அரச அடக்குமுறைக்கும், ஜனநாயகத்தின் அடிப்படையில் நியாயங் கற்பிக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவை இருக்கிறது. தரக்குறைவான ஊடகங்களும், சில கட்டுப்பாடுகளைப் பேண வேண்டியுள்ளது. எவ்வாறாயினும், பத்திரிகையின் தரமும் அதன் தகவல்களின் செம்மையும் வணிக நிர்ப்பந்தங்களுக்குப் பணிகின்றன.

நமது நிலைமைகளுடன் ஒப்பிடுவோமெனில், நாற்பது ஆண்டுகட்கு முன்பு வரை ஊடகங்களிற் பேணப்பட்ட தராதரங்களை இன்று காணுவது கடினமாகவுள்ளது. ஊடகங்களின் பக்கச்சார்பு எவ்வாறு இருந்த போதும், பத்திரிகைத் தகவல்கள், பொதுவாகச் செய்திக்கும் அபிப்பிராயத்துக்கும் வேறுபாட்டைத் தெளிவாகக் காட்டின. பத்திரிகைகளின் செய்தித் தொகுப்பும் செய்தித் தலைப்புகளும் பரபரப்பை அல்லாமல் விடயப் பரப்பைச் சார்ந்து அமைந்தன. அன்றைய பத்திரிகையாளர்கள் ஊடகத்துறையில் வரன்முறையான பயிற்சி பெற்றவர்களல்ல. பின்பற்ற உகந்த முன்மாதிரியானவர்களிடமிருந்து அவர்கள் கற்றார்கள். கணினி வசதிகள் இல்லாத ஒரு காலத்தில் ஒரு சொற்பிழையோ வாக்கியப் பிழையோ வராதளவுக்கு கவனம் இருந்தது. அதற்கெல்லாம் என்ன நடந்தது என்று தெரியவில்லை.

எனினும், நமது சூழலின் ஜனநாயகப் பலவீனங்கள் நமது ஊடகத் துறையிலும் வலுவாகப் புலப்படுகின்றன. செய்தித் தெரிவிலும் காலம நிந்து சில செய்திகளை வெளிப்படுத்துவதிலும் அரசியல் நோக்கங்கள் கடுமையாகச் செயற்பட்டுள்ளன. லேக்ஹவுஸ் நிறுவனம் இடதுசாரிக் கட்சிகளை மட்டுமன்றி ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியையும் பகைமையுடனேயே நடத்தியது. தமிழரசுக் கட்சியையும் 1950களிலும் 1960களின் முற்பகுதியிலும் அது பகைமையாகவே நோக்கியது. எனினும் வெளித் தோற்றமான ஒரு நடுநிலையைக் காட்டுவதில் அது கவனமாயிருந்தது. தேர்தல் காலங்களிலும் அரசியல் நெருக்கடிகளின் போதும் லேக்ஹவுஸ் நிறுவனத்தின் அரசியற் சார்பு தெளிவாகப் புலப்படும். லேக்ஹவுஸ் நிறுவனத்தை 1964 இல் தேசியமயமாக்க ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி அரசாங்கம் எடுத்த முயற்சி ஜனநாயக விரோதமானது என்று விமர்சிக்கும் பலரும் லேக்ஹவுஸ் தனது பத்திரிகை உலக ஏகபோகத்தை எவ்வளவு ஜனநாயகமாயும் நேர்மையாயும் பயன்படுத்தியது என்பதை மறந்துவிடுகின்றனர்.

குணசேன நிறுவனம் நடத்திய சன், தவஸ, தினபதி ஆகிய ஏடுகள் அப்பட்டமாகவே ஒரு பேரினவாத அரசியல் வேலைத்திட்டத்தின் அடிப்படையில் வெளியானவை. அந்த நிறுவனத்திடமும் இடதுசாரி எதிர்ப்பு இருந்தது. அரசியலுக்கு அப்பாற்பட்ட காரணங்களால் 1973 அளவில் அரசாங்கத்துடன் ஏற்பட்ட பிணக்கு 1974-75 காலப்பகுதியில் வரட்சியால் ஏற்பட்ட உணவுநெருக்கடியின் போது, அரசாங்கம் முன்னெடுத்த உணவு உற்பத்தி இயக்கத்தைத் திட்டமிட்டே சீர்குலைக்கும் நோக்கில் அப்பத்திரிகைகள் செய்தித் திரிப்பில் இறங்கின. இலங்கையின் ஊடகத் துறை வரலாற்றில் முதன் முதலாக நாட்டின் பிரதான அச்சு ஊடகம் ஒன்று இனப் பகையைத் தூண்டும் விதமாகத் தொடர்ந்து செய்திகளை வெளியிட்டதெனில் 'அப்பெருமை' சன், தவஸ பத்திரிகைகளையே சாரும்.

குணசேன நிறுவனத்தின் அச்சகத்தை அரசாங்கம் சீல்வைத்து மூடுமளவுக்கு ஒரு நிர்ப்பந்தம் 1975இல் ஏற்பட்டது. குணசேன நிறுவனம் யூ.என்.பி. ஆட்சியின் கீழ் மீண்டும் நாளேடுகளைப் பிரசுரிக்கத் தொடங்கினாலும் அது இயங்கிய வாசக வெளியை ஐலன்ட், திவயின ஆகிய ஏடுகள் கைப்பற்றிவிட்டன. எனவே சன், தவஸ ஆகியன நிலைக்கவில்லை.

ஊடகத்துறையின் சரிவிற்கு நாட்டிற் பேரினவாதத்தின் எழுச்சியும் ஒரு முக்கிய பங்களித்தது எனலாம். அதற்குத் துணையாக, 1977 தேர்தலில் யூ.என்.பி.பெற்ற வெற்றியும் ஏறத்தாழ சர்வாதிகார ஆட்சி என்று சொல்லக்கூடிய ஜனாதிபதி முறையின் கீழான ஆட்சியும் அமைந்தன.

1977 முதல், முக்கியமாக 1983 தொட்டு பேரினவாத வன்முறையையடுத்து முக்கிய சிங்கள, ஆங்கில ஊடகங்களின் செய்திகளும் கருத்துரைகளும் அப்பட்டமாகப் பேரினவாதத்தைத் தூண்டின. இச்சூழலில் வடக்கில் ஒரு ஜனநாயகப் பத்திரிகைச் சூழல் உருவானமை மெச்சத்தக்கது. 'ஈழநாடும்' அதன் சகோதர வார ஏடான 'சற்றடே றிவ்யூவும்' மாற்றுக்கருத்துகளுக்கு களமமைத்துச் சமூகப் பொறுப்புடன் நடந்தன. அதனாலேயே ஈழநாடு நிறுவனம் ஆயுதப்படையினரது தாக்குதலுக்கு இலக்காயிற்று.

எவ்வாறாயினும் 1983க்குப் பிற்பட்ட பேரினவாத அரச அடக்குமுறையும் ஆயுதமேந்திய தமிழ் இளைஞர் இயக்கங்களின் அதிகாரப் போக்கும் வடக்கில் எஞ்சியிருந்த ஊடக ஜனநாயகச் சூழலுக்கு வேட்டு வைத்தன.

இன்று நமது ஊடகத்துறை பேரினவாத அரசியலாற் பிளவுண்டிருக்கிறது. தேசிய இனப்பிரச்சினையின் அமைதியான தீர்வுக்கு ஆதரவாகச்

**நமது ஊடகங்களில் நாம் காணுகிற ஜனநாயமின்மை எந்த ஊடக நிறுவனத்தின் மேலிடத்தாலும் தொடர்ந்து திணிக்கப்படுவது அல்ல. மாறாக அது இன்று ஊடகப்பண்பாட்டின் ஒரு அம்சமாக மாறிவிட்டது. தாங்கள் கேட்க விரும்பாத செய்தியை பிறரும் கேட்கலாகாது என்கிற அணுகுமுறை ஒரு நல்ல ஊடகத்திற்குரியதல்ல**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிங்கள, ஆங்கில ஊடகங்கள் செயற்படத்தவறியமைக்கு, அவற்றின் சொந்தப் பேரினவாத நிலைப்பாடு கட்கும் மேலாக அவை உருவாக்க உதவிய ஒரு இனப்பகைச் சூழலும் ஒரு காரணமாகும்.

தமிழ்ப்பிரதேசங்களில், முக்கியமாக வடக்கில், விடுதலைப் புலிகளின் ஜனநாயக மறுப்பு ஊடகத்துறையில் ஏற்படுத்திய தாக்கத்தினின்று தமிழ் ஊடகங்கள் இன்னமும் விடுபடவில்லை. அரசாங்கத்தரப்பு ஏடுகளை விட்டால் குறுகிய தமிழ்த்தேசியவாதத்தை வரித்துக்கொள்ளாத தமிழ் நாளேடுகள் இல்லை எனலாம். அதற்கும் மேலாகத் தமிழ் ஊடகத்துறையின் பாரம்பரிய இடதுசாரி விரோதம், சீனவிரோதம் என்பனவும் இந்திய, மேற்குலகக் குறுக்கீடுகள் பற்றிய குருட்டு விசுவாசங்களும் செய்திகளின் தெரிவிலும் அவற்றை வழங்கும் முறையிலும் புலனாகின்றன. தகவல் திரிப்புக்கள் திட்டமிட்டே பல வடிவங்களிலும் இடம்பெறுகின்றன.

குறுந்தமிழ்த் தேசியத்திற்கு மாற்றான எந்த அரசியலும் மேலெழுவதைத் தமிழ் அச்சு ஊடகத்துறை விரும்பவில்லை. தொலைபரப்பு ஊடகங்கள் பேரினவாத அரசாங்கத்தை மீறிச் செயற்பட இயலாதுள்ளன. இணையத்தள ஊடகங்கள், தமக்கான ஜனநாயக இடைவெளியைச் சரிவரப் பயன்படுத்த இயலாது திணறுகின்றன.

நமது ஊடகங்களில் நாம் காணுகிற ஜனநாயகமின்மை எந்த ஊடக நிறுவனத்தின் மேலிடத்தாலும் தொடர்ந்து திணிக்கப்படுவதல்ல. மாறாக அது இன்று நமது ஊடகப் பண்பாட்டின் ஒரு அம்சமாக மாறிவிட்டது. தாங்கள் கேட்க விரும்பாத செய்தியைப் பிறரும் கேட்கலாகாது என்ற அணுகுமுறை ஒரு நல்ல ஊடகத்திற்குரியதல்ல. ஆனால் இவற்றுக்கு மேலாக ஓரிரு தொலைபரப்பு ஊடகங்கள் குறிப்பிட்ட சில அரசியற் பிரமுகர்களை ஊதிப்பெருப்பித்துக் காட்டியும் வேறு சிலரைக் கேட்போருக்கு அருவருப்பூட்டுமளவுக்கு நிந்தித்து இழிவு செய்தும் வருகின்றன. இதைப்போன்ற ஜனநாயகச் சிதைப்பை ஒரு பண்பட்ட சமூகம் பொறுக்காது. நாம் பொறுத்துக் கொள்கிறோம். அது நாம் பண்பாட்டை இழந்துகொண்டு போகிறோம் என்பதாலா?

ஊடகத்துறையின் சீரழிவுகளையும் ஜனநாயகப் போதாமைகளையும் நன்கறிந்து கொண்டே ஊடகச் சுதந்திரத்தை இன்றும் பலர் வற்புறுத்துகின்றனர். ஏனெனில் ஊடகச் சுதந்திர மறுப்பு நம்மை எங்கே கொண்டு போய்விடும் என அவர்கள் அறிவார்கள்.

அதேவேளை, ஊடகங்கள் தமது நடத்தையால் தமது நம்பகத்தைக் குலைத்துக்கொண்டே போவார்களாயின், ஒரு அடக்குமுறை ஆட்சி, ஊடகங்களைக் கையகப்படுத்தும் போதோ ஊடகங்களை ஊமைகளாக்கும் போதே, ஊடகச் சுதந்திரத்திற்காகக் குரல் கொடுக்கும் அக்கறை சமுதாயத்தில் அறவே வற்றிவிடக்கூடும்.

ஊடகச் சுதந்திரத்திற்கான வற்புறுத்தல் ஜனநாயகத்திற்கான வற்புறுத்தலின் ஒரு பகுதி. ஊடகங்கள் ஜனநாயகத்தின் முழுமையான கருவிகளாக இயங்கும் போதே அவை தமது சுதந்திரத்திற்கான முழுமையான தகுதியைச் சம்பாதிக்கின்றன. ■

---

***(63ஆம் பக்கத்தொடர்ச்சி...)***

தொந்தரவு செய்யும்
மழைத்துளிகளுக்கு
அவை மன்னிப்பு
வழங்குவதால்
மேலுமொரு கவிதை
கற்பது
கண்ணைத் திறப்பதற்கு
கற்பிப்பது
அறிவாண்மை பெறுவதற்கு
அறிவு
சேர்த்து வைப்பதற்கல்ல
பிரவாகித்தோடுவதற்கு
அறிவுக்குச் சிறகுகளுண்டு
இரண்டுக்குமிடையில்
மிகப்பலமான
இணைப்புகள் உள்ளன
புலமைக்கு இனமில்லை - தனி
பிரதேசமில்லை
ஆட்சியாளரும் இல்லை
எவர், அவற்றைத் தரும் இறைவனைத் தேடுகிறார்களோ
அது, அவர்களுடைய
தோழனாகும்


என்று செய்யுளைத் தள்ளிவைத்து பிரார்த்தனை வடிவில் புதுக்கவிதைகளை யாத்துச் செல்கிறார் கவிஞர் ஜின்னா.

இன்று புதுக்கவிதை எழுதுவதென்பது மிக எளிதானதொன்றாக பலர் நினைப்பதால் தான் பல புதுக்கவிதைத் தொகுப்புகள் வந்தவண்ணம் உள்ளன. ஆனால் இவற்றை வாசிக்கும் விடயம் அறிந்தவர்கள் இவற்றை கவிதைகளாக எடுத்துக் கொள்ள மாட்டார்கள். காரணம் இவை குட்டித் துணுக்குகளாகவோ விடுகதைகளாகவோ அல்லது வெற்றுச் சொற்கோவைகளாகவோ வந்து விழுபவையே. உண்மையில் மரபுக் கவிதை எழுதுவதை விட புதுக் கவிதை எழுதுவதே மிகக்கடினமானதென்று என்று நான் சொல்வேன். மரபுக் கவிதை செய்யுளிற்குரிய எதுகை, மோனை, தளை என்பவற்றை அனுசரித்தால் போதும். அது கவிதையில் லாவிட்டாலும் கவிதை என்கிற மயக்கத்தை ஏற்படுத்தும். உதாரணமாக 'பாக்காவது கமுகம் பழம் பருப்பாவது துவரை, மேற்காவது கிழக்கே இருந்துபார்த்தால் அது தெரியும்' எனும் இந்த வரிகள் செய்யுள் அமைப்பை கேலி செய்வதாக அமைகிறது.

புதுக்கவிதையில் வெற்று ஓசை நிரப்பிகள் இல்லை. அதில் இடம் பெறும் ஒவ்வொரு சொல்லும் தன்னை நியாயப்படுத்திக் கொள்ளும். முக்கியத்துவம் உடையதாக் இருக்க வேண்டும். இவற்றை கருத்தில் கொண்டு ஜின்னா தனது எதிர்காலக்கவிதை முயற்சிகளை மேற்கொள்வார். தமிழுக்கு வளமூட்டுவார் என எதிர்பார்க்கிறோம். ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மோடியின் ஒரு மாத ஆட்சி தேவையற்ற சர்ச்சைகள்



அரசாங்கத்தின் செயற்பாடுகளை மதிப்பிடுவதற்கு ஒரு மாதகாலம் போதுமானது அல்ல. ஆனால் அரசாங்கம் எவ்வாறு செயற்படப்போகிறது என்பதை ஊகித்துக்கொள்வதற்கு போதுமான அறிகுறிகளை இந்த ஒருமாத காலத்திற்குள் காணக்கூடியதாக உள்ளது.






எம்.பி.வித்தியாதரன்

'இந்தியா வென்றுவிட்டது. நல்ல காலம் பிறக்கிறது'- பொதுத் தேர்தல் முடிவுகள் வெளியாக ஆரம்பித்ததும் தேசிய ஜனநாயகக் கூட்டணிக்கு பெரு வெற்றி கிடைக்கப்போகிறது என்பதற்கான அறிகுறிகள் தெரிய ஆரம்பித்த வேளையில் இவ்வாறு தான் நரேந்திரமோடி ருவிட்டரில் பதிவுசெய்தார். முடிவுகள் முற்றாக அறிவிக்கப்பட்டபோது தேசிய ஜனநாயகக் கூட்டணிக்கு லோக்சபாவில் மகத்தான பெரும்பான்மைப் பலம் மாத்திரம் கிட்டவில்லை. மோடியின் பாரதிய ஜனதா கட்சி தனியாகவே ஆட்சி அமைக்கக்கூடிய அறுதிப் பெரும்பான்மைப்பலத்தைப் பெற்றதையும் காணக்கூடியதாக இருந்தது. மோடி தேர்தல் பிரசார காலத்தில் அளித்த வாக்குறுதிகளை மக்கள் நம்பினார்கள் என்பதன் பிரகாசமான வெளிப்பாடு அது.

ஆனால், பதவியேற்பு வைபவத்துக்கு அயல்நாடுகளின் தலைவர்களையெல்லாம் அழைத்து விமரிசையாக பிரதமர் பதவியை மோடி ஏற்று ஒருமாதம் கடந்துவிட்ட நிலையில் இப்போது அதேமக்கள் 'நல்லகாலம் எதுவரை நீடிக்கும்' என்று கேட்க ஆரம்பித்துவிட்டார்கள்.

பிரதமர் மோடி தலைமையிலான அரசாங்கம் பதவியேற்று ஜூன் 25 ஆம் திகதியுடன் சரியாக ஒருமாதம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறைவடைந்துவிட்டது. ஒரு தலைவரினதும் அரசாங்கத்தினதும் செயற்பாடுகளை மதிப்பிடுவதற்கு இது போதுமான ஒரு காலம் அல்ல. ஆனால், அரசாங்கம் எவ்வாறு செயற்படப்போகின்றது என்பதை உய்த்துணர்ந்து கொள்ளக்கூடிய போதுமான அறிகுறிகளை இந்த ஒருமாதத்திற்குள் காணக்கூடியதாகவுள்ளது என்பதிற் சந்தேகமில்லை. மோடியும் அவரது கட்சியும் உறுதியளித்ததைப் போன்று இது உண்மையில் மாற்றத்தைக் கொண்டுவரப்போகின்ற ஒரு அரசாங்கமா? அத்தகைய ஒரு மாற்றத்துக்கான சமிக்ஞையைக் காட்டக்கூடிய எந்தவொரு நடவடிக்கையையும் அது எடுத்திருக்கிறதா? துரதிர்ஷ்டவசமாக இதுவரையில், உள்நாட்டுக் கொள்கைகளைப் பொறுத்தவரை எந்த நடவடிக்கையுமே இல்லை.

பத்துவருடகாலம் பதவியில் இருந்த மன்மோகன் சிங் தலைமையிலான ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசாங்கத்தை இந்திய மக்கள் ஏன் தோற்கடித்தார்கள்? மக்களின் வாழ்க்கையில் பெரும் கஷ்டங்களை ஏற்படுத்திய விலைவாசி அதிகரிப்புகளே அதற்குப் பிரதான காரணம். விலைவாசிகளைக் குறைப்பதாகவும் மன்மோகன்சிங் அரசின் முத்திரையாக மாறிவிட்ட ஊழல் மோசடிகளை இல்லாமற் செய்வதாகவும் மோடி மக்களுக்கு உறுதியளித்தார். தாங்கள் அன்றாட சீவியத்தை நடத்துவதற்கே கஷ்டப்படும்போது தலைவர்கள் ஊழல் மோசடிகள் மூலமாக பெரும் பணத்தைத் தேடிக்கொண்டார்கள் என்று மக்கள் ஆத்திரமுற்றிருந்தார்கள்.

மோடி முதலாவது அமைச்சரவைக் கூட்டத்திலேயே கறுப்புப் பணத்தை விசாரணை செய்வதற்காக விசேட விசாரணைக்குழுவொன்றை அமைக்கும் தீர்மானத்தை எடுத்தார். இது மிக மிகச் சரியான தீர்மானமே. தேர்தல் காலத்தில் பாரதிய ஜனதாவும் ஆம் ஆத்மி கட்சி போன்ற எதிரணிக் கட்சிகளும் கறுப்புப்பணம் தொடர்பில் பெரும் பிரச்சினையைக் கிளப்பிப்பிரசாரம் செய்தன. 'விஸ் வங்கிகளில் பெருந்தொகைப் பணத்தை வைப்புச் செய்திருக்கும் இந்தியர்களின் பெயர் விபரங்களைப் பெறுவதற்கு நிதியமைச்சர் அருண் ஜேட்லி அந்நாட்டு அரசாங்கத்துக்கு கடிதம் எழுதத் தீர்மானித்தார்.

ஆனால், இதுவரை நடந்தது அவ்வளவுதான். பொருட்களின் விலைகள் தொடர்ந்து அதிகரித்துக் கொண்டே போகின்றன. சாதாரண மக்களின் அன்றாட உணவுப் பொருட்களான வெங்காயம், உருளைக் கிழங்கு போன்றவற்றின் விலைகள் கணிசமான அளவுக்கு உயர்ந்துவிட்டன. விலை அதிகரிப்புகளைக் கட்டுப்படுத்துவதற்கு இதுவரையில் அரசாங்கத்தினால் எடுக்கப்பட்டிருக்கக் கூடிய நடவடிக்கைகள் பயனுறுதியுடையனவாக இருக்கவில்லை. முன்னைய அரசாங்கத்தைப் போலன்றி புதிய அரசாங்கம் சில நடவடிக்கைகளை எடுத்து விலைகள் அதிகரிப்பைக் கட்டுப்படுத்துவதற்கு முயற்சிக்கின்றது என்பது உண்மையே. ஆனால், அவற்றின் விளைவுகளை மக்களால் பார்க்கக்கூடியதாக இருக்கவில்லை.இத்தகையதொரு சூழ்நிலையில் மக்களில் பலரும் எதிரணிக்கட்சிகளும் 'நல்லகாலம் வந்து போய்விட்டது' என்று கிண்டலாகப் பேசுவதைக் காணக்கூடியதாக இருக்கிறது.

பல்வேறு சேவைகளின் கட்டணங்களை அதிகரிக்கும் கைங்கரியத்தில் அரசாங்கம் இறங்கியிருக்கிறது போலத் தோன்றுகிறது. ரயில்வே அமைச்சர் சதானந்த கவுடா ரயில் பயணிகள் கட்டணங்களை 14சதவீதத்தினாலும் சரக்குக் கட்டணங்களை 6 சதவீதத்திற்கும் அதிகமாகவும் உயர்த்தியிருக்கிறார். ரயில்வே இலாகா போதியளவு நிதி இல்லாமல் நெருக்கடியை எதிர்நோக்குகிறது என்பதும் அதன் செயற்பாடுகளை மேம்படுத்துவதற்கு கூடுதல் நிதி தேவைப்படுகிறது என்பதும் உண்மையே. ஆனால், அதற்காக மக்களுக்கு மேலும் சுமையை அதிகரிக்கக்கூடியதாக கட்டணங்களை உயர்த்துவதா வழி? கர்நாடக மாநிலத்தின் முன்னாள் முதலமைச்சரான கவுடா இன்னும் சில தினங்களில் லோக்சபாவில் ரயில்வே பட்ஜெட்டை சமர்ப்பிக்கவிருக்கும் நிலையில் கட்டணங்களை அதிகரிப்பது பொருத்தமற்றது என்று நினைக்க





ரயில் கட்டணங்கள் அதிகரிக்கப்பட்டதை ஆட்சேபித்து பஞ்சாப் தலைநகர் சண்டிகாரில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தின் போது ரயில்வே அமைச்சர் சதானந்த கவுடாவின் கொடும்பாவி எரிக்கப்பட்ட காட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வில்லையே!

ஒரு வருடத்துக்கு முன்னர் காங்கிரஸ் அமைச்சர் பி.கே.பான்சால் ரயில் கட்டணங்களை அதிகரித்தபோது இதே தந்திரோபாயத்தையே கடைப்பிடித்தார். அப்போது பாரதிய ஜனதாவினரும் மோடியும் கூட, பட்ஜெட்டுக்கு முன்னதாக கட்டணங்களை அதிகரித்த அரசாங்கத்தின் செயலைக் கடுமையாகக் கண்டித்தார்கள். இப்போது அதே பாரதிய ஜனதாவும் அதன் பிரதமரும் பட்ஜெட்டில் கட்டண அதிகரிப்பைத் தவிர்த்து மக்களை ஏமாற்றுவதற்காக அதே தந்திரோபாயத்தைக் கடைப்பிடித்திருப்



மனிதவள மேம்பாட்டுத்துறை அமைச்சர் ஸ்மிருதி இரானி

பதைக் காணக்கூடியதாக இருக்கிறது. பான்சால் செய்த அதிகரிப்பு மிதமான 6 சதவீதமாக இருந்தது. ஆனால் மோடியின் அரசாங்கம் செய்திருக்கும் அதிகரிப்பு 14 சதவீதமாக இருக்கிறது. ரயில்சேவைகளை மேம்படுத்துவதற்கான எந்தவொரு செயற்திட்ட அறிக்கையையும் முன்வைக்காமலே கட்டணங்கள் அதிகரிக்கப்பட்டிருப்பது துரதிர்ஷ்டவசமானதாகும். கவுடா இருவாரங்கள் பொறுத்திருந்து ரயில்வேயின் சேவைகளை மேம்படுத்துவதற்கான திட்டங்களை பட்ஜெட்டில் அறிவிக்கும் வேளையில் கட்டண அதிகரிப்புகளையும் செய்திருந்தால் பொருத்தமானதாக இருந்திருக்கும்.

அதிகாரத்துக்கு வந்துவிட்டால் அரசியல்வாதிகள் அநேகமாக ஒரேமாதிரியாகத்தான் செயற்படுகிறார்கள் போலும், ரயில்வே சரக்கு கட்டணங்கள் அதிகரிக்கப்பட்டிருப்பதையடுத்து பொருட்களை இடத்துக்கிடம் எடுத்துச்செல்வதற்கான போக்குவரத்துச் செலவும் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதனால் விலைவாசி மேலும் அதிகரிக்கப்போகிறது. இது இவ்வாறிருக்க, மானிய அடிப்படையிலான டீசலின் விலையை மாதாந்தம் 50 பைசாவினால் அதிகரிப்பதற்கு முன்னைய அரசாங்கம் எடுத்த தீர்மானத்தை ரத்துச் செய்யாமல், தொடர்ந்து நடைமுறைப்படுத்துவதற்கு மோடி அரசாங்கமும் முடிவெடுத்திருக்கிறது.

கரும்பு விவசாயிகளுக்கு உதவும் நோக்குடன் சீனி விலையையும் அதிகரிக்கப்போவதாக இன்னொரு அமைச்சரான ராம் விலாஸ் பஸ்வான் அறிவித்திருப்பதையும் காணக்கூடியதாக இருக்கிறது. விவசாயிகள் எந்த வித நிவாரணத்தையும் பெறுவதற்கு முன்னதாகவே சீனியின் விலை அதிகரிக்கத் தொடங்கிவிட்டது. சீனி ஆலை உரிமையாளர்களே இதனால் பயனடைந்திருக்கிறார்கள் என்றுதான் கூறவேண்டும்.

மன்மோகன்சிங் அரசாங்கத்தினால் தீர்மானிக்கப்பட்டதன் பிரகாரம் எரிவாயுவின் விலைகளையும் புதிய அரசாங்கம் அதிகரிக்க ஏற்பாடுகளைச் செய்கிறது. எண்ணெய் அமைச்சர் தர்மேந்திரா பரதனுடனும் பெட்ரோலியம் செயலாளர் சவுராப் சந்திராவுடனும் மோடி இது தொடர்பில் இருசுற்று கலந்தாலோசனைகளை நடத்தியிருக்கிறார். எரிவாயு விலைகளின் அதிகரிப்பு மின்சக்திக்கான செலவையும் உயர்த்தும். இதனால் மின்சாரக் கட்டணங்களும் உயரும்.

முன்னைய அரசாங்கம் எரிவாயுவின் விலைகளை அதிகரிக்க நடவடிக்கை எடுத்த போது, முகேஷ் அம்பானியின் றிலையன்ஸ் இன்டஸ்ரீஸுக்கு உதவுவதற்காகவே அவ்வாறு ஆட்சியாளர்கள் செய்தார்கள் என்று குற்றஞ்சாட்டப்பட்டது. இது தொடர்பில் பெரும் வாதப்பிரதிவாதமே மூண்டிருந்தது. அரவிந்த் கெஜ்ரிவா



பிரதமர் அலுவலக இணை அமைச்சர் டாக்டர் ஜிதேந்தர் சிங்

லின் ஆம் ஆத்மி கட்சியினால் தாக்கல் செய்யப்பட்ட மனுவொன்றையடுத்து தேர்தல் ஆணையகம் எரிவாயு விலைகளை அதிகரிப்பதற்கான அந்த நடவடிக்கையை தடுத்து நிறுத்தியது. தொழிலதிபர்கள் அம்பானியும் அடானியும் மோடிக்கு நெருக்கமானவர்கள் என்றும் பாரதிய ஜனதாவின் தேர்தல் பிரசாரங்களுக்கு அவர்கள் இருவரும் கோடிக் கணக்கில் பணத்தைக் கொட்டிக் கொடுத்தார்கள் என்றும் கெஜ்ரிவால் தேர்தல்காலத்தில் குற்றஞ்சாட்டியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இப்போது எரிவாயு விலைகளில் செய்யப்பட்க்கூடிய எந்தவொரு கணிசமான அதிகரிப்பும் தேர்தல் காலத்தில் அந்தத் தொழிலதிபர்களிடமிருந்து பெற்ற உதவிக்கு மோடி செய்யும் கைம்மாறு என்றே நிச்சயமாக எதிரணியினால் அர்த்தப்படுத்தப்படும் என்பதில் சந்தேகமில்லை. ஏற்கனவே மின்சாரக் கட்டணங்களின் அதிகரிப்புக் குறித்தும் தேசியத் தலைநகர் டில்லியில் கடுமையான மின்வெட்டு குறித்தும் மக்கள் விசனமடைந்திருக்கிறார்கள். இந்நிலையில் எரிவாயு விலைகளில் செய்யப்படக்கூடிய அதிகரிப்பு பெருமுதலாளித்துவ நிறுவனங்களுக்கும் அரசாங்கத்துக்கும் இடையே இருக்கும் தொடர்பு குறித்து பிழையான ஒரு செய்தியை மக்களுக்குக் கூறுவதாகவே இருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






**இணையமைச்சர் நிகால் சந் மெக்வாலுக்கு எதிராக டில்லியில் பாரதிய ஜனதா கட்சியின் தலைமையகத்திற்கு முன்னாள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருக்கும் காங்கிரஸ் தொண்டர்கள்**

### தேவையற்ற சர்ச்சைகள்

விலைவாசி அதிகரிப்பும் மன்மோகன்சிங் அரசாங்கத்திடமிருந்து மோடி அரசாங்கம் பெற்றுக்கொண்ட மோசமான நிலையில் உள்ள பொருளாதாரமும் ஒருபுறமிருக்க, அரசாங்கமும் அதன் அமைச்சர்களும் அவர்களின் 'தேனிலவு' காலகட்டத்திற்குள்ளேயே தேவையற்ற சர்ச்சைகளில் ஈடுபடுவதைக் காணக்கூடியதாக இருக்கிறது.

பெரும் எடுப்புடன் நடந்த அமைச்சரவை பதவியேற்புக்கு மறுநாளே, பிரதமர் அலுவலகத்தின் அமைச்சர் ஜிதேந்தர் சிங் அரசியலமைப்பின் சரத்து 370 குறித்து தெரிவித்த கருத்து தொடர்பில் சர்ச்சை மூண்டது. இந்த சரத்து இந்தியாவின் ஏனைய மாநிலங்களைவிடவும் ஜம்மு-காஷ்மீர் மாநிலத்துக்கு விசேட அந்தஸ்தை வழங்குகிறது. அது குறித்து விவாதம் ஒன்று முன்னெடுக்கப்படவேண்டும் என்று மோடி தேர்தல் காலத்தில் பேசியிருந்தார். சரத்து 370 நீக்கப்படுமானால் இந்திய யூனியனில் இருந்து ஜம்மு- காஷ்மீர் மாநிலம் பிரிந்து செல்லும் நிலை ஏற்படலாம் என்று முதலமைச்சர் ஒமர் அப்துல்லா அப்போது எச்சரிக்கை செய்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

ஜம்மு-காஷ்மீர் மாநிலத்திலிருந்து தெரிவுசெய்யப்பட்ட ஜிதேந்தர் சிங் சரத்து 370ஐ நீக்குவதற்கான செயன்முறைகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுவிட்டன என்று கூறினார். இச்சரத்தை அரசியலமைப்பில் இருந்து நீக்க வேண்டுமென்ற கருத்தை கடுமையாக எதிர்ப்பவர்கள் இந்த விவகாரம் தொடர்பில் அரசாங்கம் ஒளிவு மறைவு இல்லாமல் தெட்டத்தெளிவாக அதன் நிலைப்பாட்டைக் கூற வேண்டுமென்று கோரினார்கள். விசேட அந்தஸ்தை வழங்குகின்ற சரத்தை நீக்குவதை ஜம்மு-காஷ்மீரில் உள்ள பிராந்தியக்கட்சிகள் சகலதுமே எதிர்க்கின்றன. இதுதொடர்பான சர்ச்சைக்குள் பிரவேசிப்பதில் மோடியும் ஏனைய தலைவர்களும் மறுத்துவிட்டதால் அது மெதுமெதுவாகத் தணிந்து போய்விட்டதைக் காணக்கூடியதாக இருக்கிறது.

இதையடுத்து, மத்திய மனிதவள அபிவிருத்தி அமைச்சர் ஸ்மிருதி இரானியின் கல்வித் தகைமை குறித்து ஒரு சர்ச்சை மூண்டது. ஏற்கனவே இந்த அமைச்சுக்கு பள்ளம் ராஜூ சஷி தரூர் போன்று கலாநிதி பட்டம் பெற்றவர்களே பொறுப்பாக இருந்தார்கள். அதற்கு முன்னர் முன்னாள் மாநில முதலமைச்சரும் ஆளுநருமான அர்ஜுன் சிங்கின் பொறுப்பில் அந்த அமைச்சு இருந்தது. வாஜ்பாய் அரசாங்கத்தில் ஒரு பேராசிரியரான முரளி மனோகர் ஜோஷியின் வசமே மனிதவள மேம்பாட்டுத்துறை அமைச்சு இருந்தது. நடிகையாக இருந்து அரசியல் வாதியாக மாறிய ஸ்மிருதியிடம் அந்த அமைச்சின் பொறுப்பைக் கையளிப்பதற்கு பிரதமர் மோடி தீர்மானித்தபோது பலரும் ஆச்சரியப்பட்டனர். ஆளும் பாரதிய ஜனதாவைச் சேர்ந்தவர்களுக்கும் கூட ஆச்சரியமே. ஸ்மிருதியினால் சமர்ப்பிக்கப்பட்ட சத்தியக்கடதாசிகளில் காணப்பட்ட முரண்பாடுகளே சர்ச்சைக்குக் காரணம். 2004 லோக்சபா தேர்தலில் போட்டியிட்டபோது அவர் தன்னை 1996ஆம் ஆண்டு டில்லி பல்கலைக்கழகத்தின் அஞ்சல் கல்வி பாடசாலையில் சித்தியடைந்த ஒரு கலைப்பட்டதாரி (பி.ஏ) என்று குறிப்பிட்டிருந்தார். ஆனால், இவ்வருட லோக்சபா தேர்தலில் போட்டியிட்டபோது தனது கல்வித் தகைமையை அவர், டில்லி பல்கலைக்கழகத்தின் வெளிவாரி பாடசாலையில் 1994ஆம் ஆண்டு சித்தியடைந்த வர்த்தகத்துறைப்பட்டதாரி (பகுதி I) என்று குறிப்பிட்டிருந்தார்.

ஸ்மிருதியை கல்வித்துறைக்குப் பொறுப்பான மனிதவள மேம்பாட்டு அமைச்சராக மோடி நியமித்தபோது காங்கிரஸ் கட்சி அவர் ஒரு பட்டதாரியே கூட அல்ல என்று கூறியது.

அடுத்து புலனாய்வுப் பணியகம் 'கிறீன்பீஸ்' போன்ற அரசாங்கச் சார்பற்ற தொண்டர் நிறுவனங்கள் அபிவிருத்தித்திட்டங்களுக்கு முட்டுக்கட்டைகளைப் போடுகின்றன என்று விடுத்த அறிக்கை ஒரு சர்ச்சையைத் தோற்றுவித்தது. சுற்றாடல் பாதுகாப்பு தொடர்பில் பணிகளை முன்னெடுக்கின்ற சர்வதேச தொண்டர்

*(60ஆம் பக்கம் பார்க்க...)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மோடி அரசின் 30 நாட்கள்

## இவர்கள் என்ன சொல்கிறார்கள்?



## அண்டை நாடுகள் மத்தியில்



**சி.பி.ராதாகிருஷ்ணன்**
முன்னாள் தலைவர், தமிழக பாரதிய ஜனதா கட்சி

இந்திய தேச முன்னேற்றத்திற்கு ஏற்பட்ட இடையூறுகளை நீக்க ஒருங்கிணைந்த முயற்சி இல்லாதது, பல நேரங்களில் எடுக்கப்படும் முடிவுகள் துறைகளுக்கிடையே ஒத்துழைப்பு இல்லாமல் தோல்வியைச் சந்தித்தது போன்ற நிலையை மாற்றி நாட்டை முன்னேற்றப் பாதையில் செலுத்த ஒரு மாற்று வேண்டும் என்ற நிலையில் வந்த முதல் பிரதமர்தான் நரேந்திர மோடி.

அவர் பதவியேற்றவுடன் கறுப்புப் பணத்தை வெளியே கொண்டு வர கொடுத்த வாக்குறுதிப்படி நடவடிக்கை எடுத்தார். அதற்கு ஒருங்கிணைந்த முயற்சி தேவை என்பதால்தான் உச்சநீதிமன்றத்தின் ஓய்வு பெற்ற நீதிபதி ஷா அவர்கள் தலைமையில் சி.பி.ஐ, அமலாக்கப்பிரிவு, வருமான வரித்துறை என்று பல் வேறு துறைகளையும் ஒருங்கிணைத்து ஒரு சிறப்பு விசாரணைக் குழுவை அமைத்துள்ளார். எடுத்த நல்ல காரியங்கள் அனைத்தையும் வெற்றிகரமாக நடைமுறைப்படுத்த தன்னிகரற்ற உணர்வு பிரதமர் அவர்களுக்கு இருக்கிறது.

இதன்மூலம் நிர்ணயிக்கப்பட்ட இலக்குகளை எட்டும் பயணத்தில் தேவையில்லாத தடங்கல்கள் குறுக்கிட முடியாத வகையில் நிர்வாக அமைப்பை உருவாக்கியிருக்கிறார். ஒரு அரசு இலக்கை நோக்கி தங்குதடையற்ற பயணம் வெற்றிக்கு மட்டுமே வழி வகுக்கும். இதுவே மோடியின் முதல் வெற்றி.

இரண்டாவது மாநிலங்கள், மத்திய அரசுடன் மோதக்கூடாது. மத்திய அரசும் மாநிலங்களுடன் மோதக்கூடாது. இரு மாநிலங்களுக்கு இடையிலும் மோதல் வரக்கூடாது. அது வளர்ச்சிக்கு உதவாது என்பது பிரதமரின் உறுதியான நம்பிக்கை. ஏனென்றால், அவரைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சென்னை மெயில்





முத்தையா
காசிநாதன்

நரேந்திரமோடி தலைமையிலான இந்திய அரசு பதவியேற்று 30 நாட்கள் நிறைவுபெற்றிருக்கிறது. காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு செய்த அத்தனையும் தவறு என்ற கோஷத்தை முன்வைத்து இந்தியா முழுவதும் ஒரு மோடி மோகத்தை உருவாக்கி, வெற்றி பெற்றது பாரதிய ஜனதாக் கட்சி. வெற்றி பெற்றது மட்டுமல்ல, தனித்து ஆட்சியமைக்கும் அளவிற்கு எம்.பி.க்களின் ஆதரவைப் பெற்றது.

அண்டை நாடுகளுடனான உறவாக இருக்கட்டும், உள்நாட்டுப் பிரச்சினைகளாக இருக்கட்டும் அனைத்திலும் ஒரு வித்தியாசமான நிர்வாகத்தைக் கொடுக்கப் போகிறார் என்ற மக்களின் நம்பிக்கையுடன் ஆட்சிக்கு வந்த பிரதமர் நரேந்திரமோடியின் 30 நாட்களின் செயற்பாடுகள் எப்படியிருக்கிறது என்பது ஒரு புறம். இன்னொரு புறம் தமிழகத்தின் முக்கிய பிரச்சினைகள் பலவற்றிற்கும் தி.மு.க. மத்திய அரசில் இருந்ததுதான் காரணம் என்ற பிரசாரத்தை முன்வைத்து அ.தி.மு.க. களமிறங்கியது.

அதில் வெற்றியும் அடைந்து, 37 எம்.பி.க்களை வரலாறு காணாத அளவிற்குப் பெற்றது. பா.ஜ.க. மத்திய அரசு முறையை மாற்றிக் காட்டுகிறேன் என்று சபதம் செய்தது. அ.தி.மு.க.வோ, எங்களுக்கு வாய்ப்புக் கொடுங்கள். தமிழக பிரச்சினைகளை சாதித்துக் காட்டுகிறோம் என்று மக்களுக்கு வாக்குறுதி கொடுத்தது. காவிரிப் பிரச்சினையில் இன்னும் தீர்வு எட்டப்படவில்லை. மொழிப் பிரச்சினை திடீரென்று சூடுபிடித்து அனைத்து தலைவர்களும் எதிர்த்துக் குரல் கொடுக்க வேண்டிய கட்டாயம் எழுந்தது.

இந்நிலையில் இந்த முப்பதுநாளில் இந்தச் சபதங்கள், வாக்குறுதிகள் எல்லாம் எந்த அளவிற்கு சாத்தியமாகியிருக்கிறது? அல்லது சாத்தியப்படும் அளவிற்கு சூழ்நிலைகள் உருவாகியிருக்கிறது? 30 நாளில் மோடி அரசாங்கம் சாதித்தது என்ன? இங்கே தமிழக அரசியல் தலைவர்கள் காரசாரமாக விவாதிக்கிறார்கள்.

# இந்தியாவின் பெருமை உயர்வு

பொறுத்தமட்டில் நாட்டின் வளர்ச்சி மாநிலத்தின் வளர்ச்சி.

மாநிலங்களின் வளர்ச்சி ஒட்டு மொத்த மாநிலங்களின் வளர்ச்சியாக மாறுகிறது என்பதில் அசைக்க முடியாத நம்பிக்கை கொண்டவர். ஒவ்வொரு மாநிலமும் வளர்ச்சி மையமாக .வைத்து போட்டியிட வேண்டும் என்பது மோடியின் விருப்பம். இந்த அணுகுமுறை தேச வளர்ச்சியில் ஒரு பெரிய மாற்றத்தை ஏற்படுத்தப் போகிறது.

அண்டை நாடுகளுடன் நட்புறவு என்பது அனைத்து மத்திய அரசுகளுமே எல்லா நேரங்களிலும் கடைப்பிடிக்கின்ற விடயம்தான். அதில் எந்த மாற்றுக் கருத்தும் இருக்க முடியாது. அண்டை நாடுகளுடன் நல்லுறவு என்பது சம மரியாதையிலும், இரு நாட்டு நலனிலும் அக்கறை உள்ளதாக இருக்க வேண்டும். சீனா, பாகிஸ்தான் மட்டுமன்றி ஏன் பக்கத்தில் இருக்கும் குட்டி நாடான மாலைதீவுகள் கூட இந்தியாவை மதிக்காத போக்கு ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு இருந்த போது நிலவியது.

இந்நிலையில் மோடி பிரதமரானவுடன் ஒரு செய்தி அண்டை நாடுகளுக்குச் சென்றிருக்கிறது. அனைத்து நாடுகளுடனும் இந்தியா நட்புறவுடன் இருக்கவே விரும்புகிறது. அதே நேரத்தில் இந்தியாவுடன் எந்த நாடும் தேவையற்ற உரசல்களை வைத்துக்கொள்வதோ, இந்தியாவைச் சீண்டிப்பார்ப்பதோ கூடாது.

அதை ஒரு போதும் இந்தியா அனுமதிக்காது என்ற செய்தி வலுவாகப் போய்ச் சேர்ந்திருக்கிறது. இதுவே ஒரு மிகப்பெரிய வெற்றி. இலங்கை ஜனாதிபதி ராஜபக்ஷ போன்றவர்கள் மொழி சிறுபான்மை சமுதாயமாக இருக்கின்ற தமிழர்களுக்கு சம உரிமையைத் தந்தாக வேண்டும். அப்படி அவர் தர மறுத்தால் அதற்குரிய விலையை இலங்கை அரசு தர வேண்டியதிருக்கும் என்பதை உணர்த்தியிருக்கிறோம்.

இது அண்டை நாடுகளுடனான உறவில் இந்தியாவின் அணுகுமுறை அன்போடும், பண்போடும் இருக்கின்ற அதே நேரத்தில் தன்மான உணர்வோடும் இருக்கும் என்பதை உணர்த்தியிருக்கிறது. பொறுப்பேற்ற 30 நாட்களில் அண்டை நாடுகள் மத்தியில் இந்தியாவின் பெருமையை உயர்த்தியிருக்கிறார் பிரதமர் மோடி. அதுவே பெரும் சாதனை! ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதல் பட்ஜெட்டிற்கு முன்பே



திருச்சி செல்வேந்திரன்
தலைமைக் கழக வெளியீட்டுச் செயலாளர்
திராவிட முன்னேற்றக் கழகம்

மோடியின் 30 நாள் ஆட்சியில் அவசரப்பட்டு அனைத்து மத்திய அரசு சமூக வலைத்தலங்களிலும் இந்தி பயன்படுத்தப்பட வேண்டும் என்று போட்ட தேவையில்லாத உத்தரவுதான் வந்திருக்கிறது. முதல் பட்ஜெட்டை மோடி தாக்கல் செய்யும் முன்பே பட்ஜெட்

# முடிந்தது மோகம், ஆசைக்காக காத்திருப்போம்

இந்தியா போன்ற பெரிய அரசு நிர்வாகத்தில் 30 நாட்கள் என்பது குறுகிய காலம். அதை வைத்து செயல்பாட்டை அரசியலில் எடை போடுவது சரியல்ல. ஆனால் மத்திய அரசு செய்து வரும் செயல்களைப் பார்க்கும் போதும், மத்திய அமைச்சர்கள் பேசும் பேச்சுகளைக் கேட்கும் போதும் மோடி அரசு எதையும் புதிதாக, மாறுபாடுள்ளதாகச் செய்யப் போவதாகத் தெரியவில்லை. ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு ஏற்கனவே கடைப்பிடித்து வந்த பல்வேறு பொருளாதாரக் கொள்கைகளையே மோடியும் பின்பற்றப் போகிறார் என்பது தெரிகிறது. வட்டி விகித குறைப்பு, பெட்ரோல், டீசல் விலையினை சந்தை விலைக்கு சரியாக சமன்படுத்தும் முயற்சி, ரயில்வே கட்டணம் மற்றும் அத்தியாவசியப் பொருள்களின் விலை போன்றவற்றைக் கூட்டும் முயற்சி என்ற அனைத்திலுமே ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு செய்ததைத்தான் நாங்களும் செய்கிறோம் என்று மோடி அரசு கூறி வருவது மக்களை முட்டாள்களாக்கும் முயற்சி. இவற்றையெல்லாம் மாற்றி அமைத்து நல்ல அரசை உருவாக்குவோம் என்று கூறித்தான் ஆட்சிக்கு வந்தார்கள். ஆனால் இப்போது கசப்பு மருந்து என்று கூறி, புதிய மொந்தைகளில் பழைய கள்ளையே அடைத்து விற்பனை செய்கிறார்கள்.

ஆளுநர்களை உடனடியாக மாற்றும் முயற்சி, மோடிக்கு எதிராக வாதாடிய வழக்கறிஞரை உச்சநீதி மன்ற நீதிபதியாக பணியமர்த்த உச்சநீதிமன்றமே பரிந்துரை செய்தும் அதை தடை செய்தது. ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசில் முக்கியமான பதவியில் இருந்த அதிகாரிகளை மீண்டும் அது போன்ற பதவிகளில் நியமிக்கக் கூடாது என்று உத்தரவிட்டது போன்றவை மோடி அரசு குறுகிய பார்வையுடனேயே அரசு நிர்வாகத்தை நடத்த முயற்சி செய்கிறது என்று தெரிகிறது.



பீட்டர் அல்போன்ஸ்
முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்
தமிழ்நாடு காங்கிரஸ் கட்சி

மோடி தேர்தல் பிரசாரத்தில் பேசியதற்கும், பிரதமரான பிறகு மோடி பேசுவதற்கும் முன்னுக்குப் பின் மிகுந்த முரண்பாடுகள் உள்ளன. இலங்கையில் நடைபெற்ற பொதுநலவாய உச்சி மகாநாட்டிற்கு பிரதமர் செல்லக்கூடாது என்று உச்சக்குரலில் ஆட்சேபனை எழுப்பிய பாரதிய ஜனதா மோடி பதவியேற்பு விழாவிற்கு இலங்கை ஜனாதிபதி ராஜபக்‌ஷவை அழைத்து பெருமைப்படுத்தியது. அஜ்மீர் தர்காவிற்கு வருகைதந்த பாகிஸ்தான் பிரதமருக்கு சர்வதேச விருந்தோம்பல் மரபின் அடிப்படையில் வரவேற்று உபசரித்ததை எல்லையில் நம் வீரர்கள் கொலையுண்ட போது, பாகிஸ்தான் பிரதமருக்கு பிரியாணி விருந்து ஏன் என்று கேள்வி எழுப்பியது. இன்று தன் பதவியேற்பு விழாவிற்கு பாகிஸ்தான் பிரதமரை அழைத்து அவரது தாயாருக்கு விலை உயர்ந்த பட்டுச்சால்வை பரிசாகக் கொடுத்து வழியனுப்பி வைத்தார் மோடி.

அண்டை நாடுகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவது, அண்டை நாடுகளின் தலைவர்களோடு நட்போடு இருப்பது போன்றவற்றை காங்கிரஸ் ஒருபோதும் வேண்டாம் என்று சொன்னதில்லை.

ஆனால் அன்று அப்படிச் சொன்னவர்கள் இன்று எப்படி மாறிக் கொண்டார்கள் என்பதை சுட்டிக்காட்டவே இதைச் சொல்கிறேன். எனவே நடந்து முடிந்த 30 நாட்களைப் பார்க்கும் போது மோடி அரசு எதையும் பெரிதாக சாதித்து விடும் என்று நான் நம்பவும் இல்லை. எதிர்பார்க்கவும் இல்லை. அப்படி சாதிக்க முடிந்தால் மகிழ்ச்சி. நம் கிராமங்களில் ஆசை 60 நாள். மோகம் 30 நாள் என்று ஒரு பழமொழி உண்டு. இப்போது மோகம் 30 நாள் முடிந்து விட்டது. ஆசைக்கான 60 நாள் முடியட்டும். நல்லது நடக்கிறதா என்று பொறுத்திருந்து பார்ப்போம். ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வந்த இந்தி திணிப்பு

டிற்கு அப்பாற்பட்ட பிரச்சினை ஒன்றில் உத்தரவு போட்டு உடனடி எதிர்ப்பை தமிழகத்தில் அவர் சம்பாதித்துக் கொண்டார். பாரதிய ஜனதாக் கட்சி இந்திக் கட்சி, இந்தி மொழிக்காக உள்ள கட்சி என்பது தெரிந்திருந்தாலும், இதைச் செய்திருக்க வேண்டியதில்லை.

இந்தி திணிப்பு தமிழகத்தில் ராஜாஜி காலத்திலிருந்தே வரும், போகும். அது ஒரு தொடர்கதை.. இன்றைக்கு மட்டும் இந்தியை தமிழக மக்கள் எதிர்க்கவில்லை. அன்றைக்கு நடைபெற்ற மிகப்பெரிய போராட்டத்தின் விளைவாகத்தான், இந்தி பேசாத மாநில மக்கள் விரும்புகிற வரை இந்தி திணிப்பு இருக்காது என்று நேரு உறுதிமொழி கொடுத்தார். அந்த உறுதிமொழியே பித்தலாட்டம் என்று நான் கூறுவேன். ஏனென்றால் இந்தியை

# 30 நாளென்ன 300 நாளிலும் எதுவும் நடக்காது

நாடாளுமன்றத் தேர்தல் முடிந்து விட்டது. அ.தி.மு.க. வெற்றி பெற்று முதலமைச்சர் ஜெயலலிதா தோல்வியடைந்தும் விட்டார். ஏன் தோல்வி என்று சொல்கிறேன் என்றால் அவருடைய கட்சி வேட்பாளர்களாக போட்டியிட்டவர்கள் எல்லாம் மாநிலப் பிரச்சினைகளைத் தீர்ப்போம் என்று கூறி வாக்குகளைப் பெறவில்லை. மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளை தீர்க்கப்போகிறோம். இலங்கைக் கடற்படையால் கைது செய்யப்படும் மீனவர்கள் பிரச்சினையை தீர்க்கப் போகிறோம், முல்லைப் பெரியாறு அணை பிரச்சினையை தீர்க்கப்போகிறோம், தமிழகம் முழுவதும் நான்கு வழிச்சாலைகள் போடப் போகிறோம், இருப்புப் பாதைகளை இரட்டை வழிப் பாதைகளாக ஆக்கப் போகிறோம் என்றெல்லாம் கூற வில்லை. மாறாக எங்கள் அம்மாவை பிரதமராக்கப் போகிறோம் என்று கூறி வாக்குகளைப் பெற்றார்கள். அவர் பிரதமராக முடியவில்லை என்பதால் தோல்வி என்கிறேன். புதிய அரசு மோடி தலைமையில் உருவாகி 30 நாட்கள் முடிந்து விட்டாலும், ஜெயலலிதாவும், அவர் கட்சியின் சார்பில் வெற்றி பெற்றுள்ள 37 எம்.பி.க்களும் அம்மா பிரதமராக முடியவில்லையே என்ற அதிர்ச்சியில் இருந்து மீளவில்லை.



பொன்குமார்
*தலைவர்,*
*தமிழ்நாடு விவசாயிகள்-தொழிலாளர்கள் கட்சி*

வெற்றி பெற்றுச் சென்றிருக்கின்ற 37 எம்.பி.க்களில் ஒரு சிலர் தவிர மற்ற அனைவரும் பாராளுமன்றத்தைப் பார்த்தே பயப்படுபவர்கள். இவர்கள் எல்லாம் எழுந்து நின்று தமிழக உரிமைகள் பற்றி இந்த 30 நாளில் எந்தக் குரலும் எழுப்பவில்லை. ஏனென்றால் அவர்கள் எல்லாம் ஒன்றியச் செயலாளர்களாக இருந்துவிட்டுப் போயிருப்பதால், பெரும் தலைவர்கள் இருக்கின்ற இடத்தில் பேசவே பயப்படுகிறார்கள். நாடாளுமன்றம் வேறு. சட்டமன்றம் வேறு. ஆகவே இந்த 37 எம்.பி.க்கள் 30 நாளில் என்ன 300 நாட்கள் ஆனாலும் கூட தமிழகத்திற்காக எதையும் பேச மாட்டார்கள். எதையும் சாதிக்க மாட்டார்கள்.

மோடி அரசு பதவியேற்ற இந்த முப்பது நாட்களுக்குள் தமிழக மீனவர்கள் பிரச்சினையில் எந்த மாற்றமும் இல்லை. ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு காலத்தில் இருந்ததை விட கொடூரமாக தமிழக மீனவர்கள் இலங்கைக் கடற்படையால் தாக்கப்படுகிறார்கள். துன்புறுத்தப்படுகிறார்கள். படகுகளையே பறிமுதல் செய்து வைத்துக் கொள்ளுகிறார்கள். அதற்காக 37 எம்.பி.க்களை வைத்துள்ள ஜெயலலிதா என்ன செய்கிறார்? கடிதம் மட்டும் எழுதிக் கொண்டிருக்கிறார். சென்ற தி.மு.க. ஆட்சியின் போது கடிதம் எழுதுவதைத் தவிர வேறு என்ன செய்தார் கருணாநிதி என்று கலைஞரைச் சாடிய ஜெயலலிதா இப்போது கடிதம் மட்டுமே எழுதிக் கொண்டிருக்கிறார். இதுவரை காவிரி மேலாண்மை வாரியம் அமைக்கப்படவில்லை. மேட்டூர் அணையும் திறக்கப்படவில்லை. காவிரி டெல்டா விவசாயிகள் கண்ணீர் சிந்துகிறார்கள். கர்நாடகாவில் அனைத்துக் கட்சிக் கூட்டத்தைப் போட்டு அங்குள்ள முதலமைச்சர் சீத்தாரமைய்யா நாங்கள் எல்லாம் ஒற்றுமையாக இருக்கிறோம் என்று பிரதமரை பயமுறுத்துகிறார். ஆனால் ஏழரைக் கோடி மக்களும் காவிரிப் பிரச்சினையில் ஒற்றுமையாக இருக்கிறோம் என்பதை உணர்த்துவதற்குக் கூட ஒரு அனைத்துக் கட்சிக் கூட்டத்தைக் கூட்ட மறுத்து விட்டார் ஜெயலலிதா. 37 எம்.பி.க்களைக் கொடுத்த தமிழக மக்களுக்கு அவர் காட்டும் நன்றி இதுதான். 30 நாளில் முதலமைச்சரே புதிய ஆட்சியிடமிருந்து எதையும் சாதிக்க முடியாத போது, இந்த 37 எம்.பி.க்கள் என்ன சாதித்து விடப்போகிறார்கள்? ஆகவே மோடியின் 30 நாள் ஆட்சியில் தமிழகத்திற்கு எதுவும் நடக்கவில்லை. 37 எம்.பி.க்களைப் பெற்ற முதலமைச்சரும் எதுவும் பெற்றுத் தரமுடியவில்லை! ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திணிக்க மாட்டோம் என்பதை அரசியல் சட்டத்தில் நாலு வார்த்தை சேர்த்து விட்டுப் போக வேண்டியது தானே. ஏன் உறுதிமொழி? மக்கள் விரும்புகிற வரை என்றால் அப்படி விரும்புகிறார்களா என்பதை கண்டு பிடிக்க வாக்கெடுப்பு நடத்தப் போகிறார்களா? என்ற கேள்வி எழும். ஆகவேதான் இந்த உறுதிமொழியை நான் பித்தலாட்டம் என்று கூறுகிறேன். இது மட்டுமல்ல, நாட்டில் நடந்த பல பித்தலாட்ட அரசியலுக்கும் நேருதான் காரணம்.

அன்று இந்தி திணிக்கப்பட்டபோது தமிழகத்தில் அது மாணவர்கள் போராட்டமாக முதலில் உருவெடுத்தது. அவர்கள் குழுக்கள் உருவாக்கி, கூட்டம் போட்டு, கிளர்ச்சி செய்தார்கள். மாணவர் போராட்டத்தை முன்நின்று நடத்திய விருதுநகர் பெ. சீனிவாசனைக் கண்டதும் சுட உத்தரவு போட்டது அப்போது இருந்த அரசாங்கம். அதன்பிறகுதான் அரசியல் தலைவர்கள் இந்தி எதிர்ப்புப் போராட்டத்தைக் கையிலெடுத்தார்கள். அப்போது முதலமைச்சராக இருந்த பக்தவத்சலம், எதிர்க்கட்சிகள்தான் இந்தி எதிர்ப்பு போராட்டத்தைத் தூண்டிவிடுகின்றன என்று சட்டமன்றத்தில் பேசினார். எதிரே அமர்ந்திருந்த கலைஞர், இப்படி வாய் புளித்ததோ மாங்காய் புளித்ததோ என்று கூறக் கூடாது. யார் தூண்டிவிடுகிறார்கள் என்று ஆதாரம் இருந்தால் பெயரைச் சொல்லுங்கள் என்றார். உடனே, நீங்கள்தான் என்று கலைஞர் மீது குற்றம் சாட்டினார் பக்தவத்சலம். அப்படிப்பட்ட வரலாறுகளைக் கொண்டது இந்த இந்தி எதிர்ப்புப் போராட்டம். இன்று மாணவர்கள் களத்திற்கு வரவில்லை. காரணம் நடைமுறையில் இந்தி புகுந்து விட்டது. செக்புக், மணி ஆர்டர்கள், சென்டிரல் பள்ளிகள் அனைத்திலும் தமிழகத்திலேயே இந்தி வந்து விட்டது. ஆனாலும் தமிழ் மொழி மீதுள்ள பற்றும், இந்தி மொழி மீதுள்ள வெறுப்பும் தமிழகத்தில் குறையவில்லை. அவ்வளவு உணர்வு பூர்வமான போராட்டத்தை சந்தித்த தமிழகத்தில் ஆட்சிக்கு வந்த முப்பது நாட்களுக்குள்ளேயே திடீரென்று இந்தி திணிப்பு என்ற உத்தரவை மோடி அரசு போட்டிருக்கத் தேவையில்லை என்பது என் கருத்து. இந்த உபத்திரவம் தவிர, தமிழகத்திற்கு வேறு நன்மைகள் கிடைத்தது மாதிரி தெரியவில்லை. ■

---

*(55ஆம் பக்கத்தொடர்ச்சி...)*

நிறுவனமான 'கிரீன்பீஸ்' அறிக்கையில் தெரிவிக்கப்பட்ட குற்றச்சாட்டை நிரா கரித்தது. குஜராத் மாநிலத்தை மையமாகக் கொண்டியங்கும் பல்வேறு அரசாங்கச் சார்பற்ற தொண்டர் நிறுவனங்கள் அரசாங்கத்துக்கு எதிரான பிரசாரங்களில் ஈடுபட்டதாகவும் புலனாய்வுப் பணியக அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது.

மோடியின் அமைச்சரவையின் ஒரு உறுப்பினர் பாலியல் வல்லுறவு சம்பவமொன்று தொடர்பில் குற்றஞ்சாட்டப்பட்டிருக்கிறார் என்று தெரிவிக்கப்பட்ட முறைப்பாட்டைப் பயன்படுத்தி உச்சபட்ச அரசியல் ஆதாயம் அடைவதற்கு எதிரணிக்கட்சிகள் முயற்சிக்கின்றன.

ஜெய்ப்பூரைச் சேர்ந்த திருமணமான 24 வயதுப் பெண்மணியொருவரினால் செய்யப்பட்ட பூர்வாங்க முறைப்பாடொன்றில் அமைச்சர் நிகால்சந்த் மெக்வாலும் வேறு 16 பேரும் குற்றஞ்சாட்டப்பட்டிருக்கிறார்கள். 2011 ஆம் ஆண்டில் செய்யப்பட்ட இம்முறைப்பாட்டில் அந்தப் பெண் அமைச்சர் தன்னை பாலியல் ரீதியாக துஷ்பிரயோகம் செய்ததாக குறிப்பிட்டிருக்கிறாள். பெண்களுக்கெதிரான குற்றச்செயல்கள் தொடர்பில் பிரதமர் மோடி வெளியிடுகின்ற அறிக்கைகள் எல்லாம் வெறும் கடதாசிகளே என்று அவரின் அரசியல் எதிரிகள் ஏளனம் செய்கிறார்கள்.

பெண்களுக்கு எதிரான குற்றச்செயல்களுக்கு முடிவுகட்ட வேண்டுமென்று மோடி உண்மையிலேயே மானசீகமான அக்கறைகொண்டவராக இருக்கிறாரென்றால் பாலியல் வல்லுறவு தொடர்பில் குற்றஞ்சாட்டப்பட்ட ஒருவரை அமைச்சரவையில் தொடர்ந்தும் வைத்திருக்கக்கூடாது.

அத்தகைய குற்றச்சாட்டுகளுக்கு முன்னால் மோடி எதையும் செய்ய முடியாதவராக இருக்கிறார். இந்த விவகாரம் தொடர்பில் அவர் இதுவரை எந்த நடவடிக்கையையும் எடுக்கவுமில்லை. கருத்தையும் வெளியிடவில்லை.


அடுத்த சர்ச்சை பாரதிய ஜனதா கட்சியின் தலைவர் ராஜ்நாத் சிங்கின் பொறுப்பில் உள்ள உள்துறை அமைச்சினால் வெளியிடப்பட்ட சுற்றுநிருபம் ஒன்றுதொடர்பானதாகும். சகல அமைச்சுகளும் அரசாங்க நிறுவனங்களும் வங்கிகளும் சமூக ஊடகங்களில் அவற்றின் தகவல்களை வெளியிடும்போது ஆங்கிலத்தை விட ஹிந்தி மொழிக்கு முன்னுரிமை கொடுக்க வேண்டும் என்று இந்த சுற்று நிருபத்தின் மூலம் அறிவுறுத்தப்பட்டது. ஹிந்தி பேசாத மாநிலங்களில் இருந்து இதற்கு கடுமையான கண்டனங்கள் கிளம்பின. குறிப்பாக, திராவிடமுன்னேற்றக்கழகத்தலைவர் கலைஞர் மு.கருணாநிதி, முதலமைச்சர் ஜெயலலிதா மற்றும் தமிழ்நாட்டைச்சேர்ந்த பாரதிய ஜனதாவின் கூட்டணிக் கட்சிகளும் ஆட்சேபனைகளைத் தெரிவித்தனர்.

ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசாங்க காலத்திலேயே இந்தச் சுற்று நிருபம் முதலில் அனுப்பப்பட்டது என்று கூறிமோடி அரசாங்கம் தப்பித்துக்கொள்ள முயற்சித்தது. ஆனால், அது எடுபடவில்லை.

தனது அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்படக்கூடிய எந்த நடவடிக்கையையும் சிறுபான்மையினங்கள் சந்தேகக் கண்கொண்டே நோக்கும் என்பது பாரதிய ஜனதாவுக்கு நன்கு தெரியும். இத்தகைய சூழ்நிலையில் அநாவசியமான கருத்துகளை அமைச்சர்கள் தவிர்த்திருக்க வேண்டும். ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## இலக்கிய விமர்சனம்




# கவிஞர் ஜின்னா ஷெரிபுதீன் கவிதைகள்

# மரபால் கட்டுண்டு போதுமா? விட்டுவிடுதலையாகி எழுமா?

'வரலாறு திரிபடைந்து வருவது, மாற்றப்படுவது இயல்பாகிப் போயுள்ள இன்றைய காலத்தில் எமது பூர்வீகத்தையும் வரலாற்றுத் தொன்மையையும் மீண்டும் உறுதி செய்ய வேண்டிய கட்டாயத்துள் நாமும் உள்ளோம். இதனடிப்படையில் தான் எனது பல காவியங்கள் உருவாக்கம் பெற்றுள்ளன' என்று கூறும் கவிஞர் ஜின்னா ஷெரிபுதீன், இதன் விளைவாகவே தனது பத்தாவது காவியமான எல்லாளர் மன்னன் பற்றிய வரலாற்றை 'எல்லாள காவியம்' என்ற தலைப்பில் வெளிக்கொணர்ந்துள்ளார் என்பதையும் அறிகிறோம்.


மு.பொ.

எமது வரலாறு திரிபடையாது பார்த்துக் கொள்ள வேண்டும். எமது வரலாற்றை நாம் நன்கறிந்திருக்க வேண்டும் என்று கவிஞர் கூறுவது நிச்சயமாக வரவேற்கப்பட வேண்டிய ஒன்றே. ஆனால் இந்த வரலாற்று நிகழ்வுகளை நாம் இலக்கியமாக மக்களுக்குத் தரும்போது அதற்கான ஊடகத்தேர்வு முக்கியமானது. வரலாறு சிறுகதையாக அல்லது நாவலாக (எல்லாள காவியம் செங்கை ஆழியானின் நாவலைத் தழுவி எழுதப்பட்டது என்று குறிக்கப்படுகிறது) அல்லது நாடகமாக அல்லது நெடுங் கவிதையாக வெளிவரலாம். ஆனால் இங்கே கவிஞர் ஜின்னா தனது பத்து காவியங்களையும் (காப்பியம்) பழைய காவிய மரபை அடியொற்றி அதில் இருந்து சற்றும் பிறழ்வுறாது மரபு காத்து செய்யுளில் தந்துள்ளார்.

இதுவே இன்று கவிஞர் ஜின்னாவின் கவிதையாற்றலுக்கு ஊறுவிளைவிப்பதாய் இருப்பதாகச் சொல்வோர் பலர். மற்றும் இவ்வாறான போக்கில் காவியங்கள் எழுதுவது அவசியமா என்று நவீன இலக்கியத்தில் பரீட்சயம் உடையவர்கள் கேட்கும் கேள்விகள் வேறு. இதனால் இவ்வாறு இவர் மரபு வழிவரும் செய்யுளை இறுக்கிப்பிடித்தபடி காவியங்களை எழுதுவதால் இவர் காவியங்கள் கூறும் செய்திகள் வாசகரை எட்டுவதற்கு இவரே தடையாக இருக்கிறார் என்று சொல்வோரும் உண்டு.


அப்படியானால் இவரது சமகாலக் கவிஞர்களும் இவருக்குச் சற்று முந்தியவர்களுமான மஹாகவி, முருகையன், நீலாவணன், தான்தோன்றி ஆகியோர் மரபுவழியிலேயே நீண்ட காவியங்கள் எழுதியுள்ளனர். ஆனால், அவர்கள் கவிதைகளுக்கு வைக்காத விமர்சனங்களை ஜின்னாவின் ஆக்கங்கள் மீது ஏன் திருப்புவான் என்று கேட்டால் அதற்குப் பலர் கொடுத்த பதில் பின்வருமாறு;

1. இவர் காவியம் (காப்பியம் எழுதுவதற்காக நாம் கோபப்படவில்லை, ஆனால் இன்று சற்றும் பொருந்தாத பழைய காப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிய முறைகளான காப்பு, அவைய டக்கம், பாயிரம், நூன்முகம், நாட்டுப் படலம், நகர்ப்படலம், கிராமத்துப் படலம், கதை தொடங்கு படலம் என்று அலுப்பும் தரும் விதத்தில் பழைய காப்பிய இலட்சணங்களை பின்பற்றுவது நமக்கு வேண்டாம் வேண்டாமென்று போகிறது.

2. மரபுக் கவிதையே எமது பொறு மையைச் சோதிக்கும் போது அதற் குள் இவ்வாறு காவிய இலட்சணங்க ளையெல்லாம் அள்ளிவந்து இளம் சந்ததியினருக்கு அறிமுகப்படுத்துவ




தாகக் கூறி அவர் தனது காவிய ஓட் டத்தையும் நமது வாசிப்பு ஓட்டத்தை யும் ஒட்ட நறுக்க வேணுமா?

3. பழையவற்றை இன்றைய தலை முறையினருக்கு அறிமுகப்படுத்த வேண்டும் என்ற தவிர்க்க முடியாத உந்துதல் இருந்தால் ஒன்றிரண்டு காவியங்களை பரீட்சார்த்தமாகச் செய்துவிட்டு இன்றைய தேவையை நோக்கி திரும்பக்கூடாதா?

4. கவிஞர் முருகையன் 'மாடும் கயிறுகள் அறுக்கும்' தொகுதியில் பின்வருமாறு மரபுக்கவிதைகள் பற் றிச் சொல்கிறார். 'செய்யுளின் எல் லைகளுக்குள்ளே நடமாடியவாறே பாட்டுப் படைப்பது பெரும்பாலான தருணங்களில் மிகவும் இலகுவான காரியமாகி விடுகிறது. என்னைப் பொறுத்தவரையில் யாப்பினை விட் டால் எழுதுவது கடினமான வேலை யாவதையும் நான் அவதானித்துள் ளேன்'. இது செய்யுள் கைதி நிலைக் குள் நின்று எழுதும் மரபுக் கவிஞர்க ளின் நிலைபற்றி விளக்குகிறது. செய் யுளை விட்டால் இவர்கள் கவிதை எழுத முடியாத நிலைக்குள் தள்ளப் படுகிறார்கள் என்றால் இவர்களிடம் இருந்து எந்த தற்புதுமையான கவித் துவ எழுச்சியும் ஏற்படப்போவ தில்லை என்பதே உண்மை. காரணம் மாற்றத்திற்குள்ளாகும் கவிதையிய லின் போக்கை உணர்கின்ற தரிசனம் ஓர் கவிஞரிடம் இல்லாவிடில் புதிய தற்புதுமையான படைப்புகளைப் படைக்க முடியாது என்பது இன்றைய இளம் பரம்பரையினரின் வாதம். டி.எஸ். எலியட்டின் கவிதைகளைப் படிப்பவர்கள் இதை நன்கு உணர லாம். ஆரம்பத்தில் மரபு ரீதியான கவிதைகள் எழுதிய போதும் அதற்கு புது மெருகூட்டினார். (The Love Song Of J.Alfred Prufrock) பின் னர் தனக்கென ஓர் புது எழுத்துச் சொல் முறையையே வளர்த்தெடுத் தார். இதற்கு உதாரணங்களாக The Waste Land, Four Quartets என்ப வற்றைக் காட்டலாம்.

5. மரபுக் கவிதைகள் எழுதுவோர் தாம் எடுத்துக்கொண்ட கருப்பொரு ளில் இருந்து (அல்லது கருத்துகளில் இருந்து) எதுகை, மோனைகளின் இழுப்புக்கிரையாகி அள்ளுப்பட்டுப் போவதுண்டு. கவிதையில் வரும் எதுகை, மோனைகள் இன்னும் சந்தத் தைத் தூக்கி நிறுத்துவதற்காக முட்டுக் கொடுக்கப்படும். முருகையன் வார்த் தைகளில் சொல்வதானால் வெற்று ஓசை நிரப்பிகளாக வரும் சொற்கள் என்பவை கவிதையை செயற்கைத் தனமானதாக்கிச் சீரழித்து விடுகின் றன. இந்த வெற்று ஓசை நிரப்பிக ளில் இருந்து முருகையன், மஹாகவி கூட தப்பிவிடவில்லை. இதற்கு உதா ரணங்களைப் பார்க்க வேண்டுமா னால் எனது 'யதார்த்தமும் ஆத் மார்த்தமும்' என்னும் நூலில் மஹாகவியின் கவிதைகள் பற்றி கூறிச் செல்வதைக் காணலாம். இதே பாணியில் கவிஞர் எம்.ஏ.நுஃமான் முருகையன் கவிதை பற்றி எழுதுகை யில் அவரது 'கடூழியத்தில்' வரும்

''வதங்கி நீ சோர வேண்டாம்
வலியதோர் கருவி வேண்டும்
புதன்கிழமைக்கு முன்னால்,
தோழரும் அதைத்தான் சொன்
னார்'' என்னும் வரிகளைக் காட்டி இங்கே 'புதன்கிழமைக்கு முன்னால்' என்ற தொடருக்கு என்ன அவசியம் என்று கேட்கிறார். கவிதை - கவிதை யியல் பற்றிய தெளிவான பார்வை இல்லாதவர்கள் பெருக்கெடுத்துப் பாயும் காலத்தின் பாய்ச்சலை புரிந்து கொள்ளாதவர்கள். அதை பின்னிழுப் பவர்களாகவே மரபுக் கவிதைக்குள் சிக்கிச் சுழல்கின்றனர்.

சமூகவியலாளர்கள் இன்றைய சமூகத்தை மூன்று வகையாகப் பிரித் துள்ளனர். முதலாவது வகை மற்ற வர்களால் இயக்கப்படுபவர்கள், (Other Directed) இரண்டாவது வகை மரபால் இயக்கப்படுபவர்கள் (Tradition Directed) மூன்றாவது வகை தன்னால் இயக்கப்படுபவர்கள் (Inner Directed) நான் மேற்கூறிய மூன்று வகைகளுள் முதல் இரண்டும் சமூகத்தை முற்போக்கான பாதையில் அழைத்துச் செல்ல வலுவற்றவை. ஒரு பெரியவர் சொல்லிவிட்டார் என் பதற்காக அதை வேத வாக்காகக் கொண்டு அதுபற்றிய விசாரணை யின்றி செயற்படுபவர். அல்லது பல நூல்களை வாசித்து அதில் வருப வற்றை மேற்கோள் காட்டுபவர். அதில் உள்ள ஆங்கிலச் சொற்களு க்கு தமிழ் மொழி பெயர்ப்புத் தருப வர். ஆனால் இவற்றிற்கு எல்லாம் தீர் வாக இவரது சொந்த கருத்தென்ற ஒன்றை அதில் காணமுடியாது. இன்று அநேக பேராசிரியர்கள் இத னையே செய்கின்றனர். இவர்களே நான் கூறிய மற்றவர்களால் இயக்கப் படுபவர்களுக்கு நல்ல உதாரணம். கருத்து முதல் வாதிகளும் சரி மார்க் ஸியவாதிகளும் சரி மரபால் இயக் கப்படுபவர்களுக்கு நல்ல உதார ணம். நல்ல காலம் சோவியத் புரட்சி யின் போது லெனினோ ட்ரொக் சியோ மரபைக் கட்டிப்பிடிக்காது ஒக்டோபர் புரட்சியை சோஷலிசப் புரட்சியாக வளர்த்தெடுத்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கே கவிஞர் ஜின்னாவும் மரபின் ஆதிக்கத்தைப் பெரிதாகப் போற்றும் வ.அ. இராசரத்தினம், சோ. பத்மநாதன் செங்கை ஆழியான், எல்லாளன் காவியம் வெளியீட்டு விழாவில் பழைய மரபு வழிவரும் முயற்சியை பாட்டி காய்ச்சித் தரும் கூளுக்கு ஒப்பிட்டு முகஸ்துதிக்காக பாராட்டியோரின் பாராட்டுகளால் அள்ளுப்படுதல் பலவீனமானது என்பேன். தமிழ் பேசும் மக்களின் விடுதலைப் போராட்டமே தலைமையைச் சூழ்ந்திருந்து புகழ்பாடிய கூட்டத்தாலேயே அழித்தொழிக்கப்பட்டதாக ஒரு ஆங்கில விமர்சகர் கூறியது முற்றிலும் உண்மை என்றே எனக்குப்படுகிறது.

இங்கே நாம் கூறியவற்றின் பின்னணியில் இருந்து நமது கவிஞர் ஜின்னாவின் கவிதை ஆற்றல் எத்தகையது என்ற கேள்வி எழுவது நியாயமானது. மரபுவழி வரும் ஜின்னாவின் பாடல்கள் பல்லுடைக்கும் பாஷையிலேயே எழுதப்படாது எளிமையான கவிதை (செய்யுள்) நடையில் எழுதப்பட்டவை. பேச்சோசைப் பாங்கான போக்கும் அதிலுண்டு. (வாத்தியார், மாப்பிள்ளை) பிற சமயங்கள் பற்றிய நல்லறிவுண்டு. அதனால் அடிப்படைவாதப் போக்குகள் தலைகாட்டுவதில்லை என்று பல சிறப்புகளைச் சொல்லிக்கொண்டு போகலாம். ஆனால் அதற்காக இவரது கவித்துவ ஆற்றலை நான் பாராட்டப்போவதில்லை. காரணம் இவை எதிர்காலம் கோரும் பல்வகை விரிவிற்கு ஈடுகொடுக்க முடியாதவை. அதனால் இவரது கவித்துவ ஆற்றலை இவரது வேறொரு ஆக்கத்தில் இருந்தே பார்க்கப்போகிறேன்.

> கவிஞர் முருகையன் சொல்வது போன்று யாப்பை விட்டால் கவிதை எழுதுவது கடினமான வேலையாகி விடும் என்று ஜின்னா சொல்வதில்லை. அவ்வாறே யாப்பிற்கு எதிராக நீலாவணன், மகாகவி ஆகியோர் சென்ற வழியை இவர் சிக்கனப்பிடித்தவரும் அல்ல

கவிஞர் முருகையன் சொல்வது போல் 'யாப்பை விட்டால் கவிதை எழுதுவது கடினமான வேலையாகி விடும்' என்று ஜின்னா சொல்வதில்லை. அவ்வாறே யாப்பிற்கு எதிராக நீலாவணன், மஹாகவி ஆகியோர் சென்ற வழியை இவர் சிக்கெனப் பிடித்தவரும் அல்ல. தென்னிலங்கை கவிதை நூலை சோ.பத்மநாதன் மொழிபெயர்த்த போது எவ்வாறு செய்யுளை உதறிவிட்டு கவிதைக்கு விடுதலை தந்து தான் எடுத்துக் கொண்ட பிறமொழிக் கவிதைகளை நல்ல கவிதைகளாக மொழி பெயர்த்துத் தந்தாரோ அவ்வாறே ஜின்னாவும் அத்தகைய முயற்சியில் ஈடுபட்டு மரபு வழிவரும் செய்யுளைக் கைவிட்டு விடுதலைப்பாங்கில் இனிய கவிதைகளை மொழிப் பெயர்ப்பாகத் தந்துள்ளதானது அவர் கவிதை ஆளுமை மரபு வழிச் செய்யுளிற்குள் தான் இயங்கும் என்றில்லாது, புதுக்கவிதை வடிவினையும் தனது அரங்காக்கி மேலான விதத்தில் இயங்கவல்லது என்பதையும் காட்டியுள்ளது. இவர் மொழி பெயர்த்த நூல் ஏ.சி.எஸ்.ஹமீத்தால் ஆங்கிலத்தில் The Spring Of Love and Mercy என்ற தலைப்பில் எழுதப்பட்ட நூலாகும். இதை தமிழில் 'அன்பின் கருணையின் பேரூற்று' என்று தந்திருக்கிறார் கவிஞர் ஜின்னா. பிரபல அரசியல்வாதியாகவும் இராஜதந்திரியாகவும் (1977-1988) இலங்கையின் வெளிநாட்டு விவகார அமைச்சராகவும் இருந்த ஹமீத் அவர்களுள்ளே புதைந்திருந்த ஆன்மீக உணர்வை மிக நேர்த்தியாக ஜின்னா தமிழில் வெளிக்கொணர்ந்திருப்பதே சிறப்பு.

ஒருவனுடைய இலக்கிய ஆளுமையை அளப்பதற்கு அவன் கையாண்ட அனைத்து இலக்கிய வடிவங்களையும் ஒருங்குசேர வைத்துப் பார்ப்பதே அவசியம் என்கிறார் மேற்குலக விமர்சகர்களில் ஒருவரான ஜோன் வையின். இதன் பின்னணியில் தான் கவிஞர் ஜின்னாவின் கவிதைகளைப் பார்க்க வேண்டும். சோ.பத்மநாதனுடைய தென்னிலங்கை கவிதைகள் சிவசேகரம், எம்.ஏ.நுஃமான் ஆகியோரின் பலஸ்தீன கவிதைகள் எவ்வாறு ஈர்ப்புடையனவாய் இருக்கின்றனவோ அவ்வாறே கவிஞர் ஜின்னாவின் மொழிபெயர்ப்பில் வெளியான ஏ.சி.எஸ்.ஹமீதின் கவிதைகளும் உள்ளன. முன்னையவை அரசியல் மற்றும் எதிர்ப்பு இலக்கிய வகைகளைச் சார்ந்தவை. இதன் தளங்கள் மறைமுக நேரடி நினைவு கூறல்களால் (Allude) விசாலிக்கப் படக்கூடியவை. ஆனால் பின்னது ஆத்மீகத்துக்குரியது. இது விசாலிக் கப்படக்கூடியது என்பதை விட ஆழமாகப் பாய்ந்து அகத்துள் ஓடுவது. இது எல்லாரிலும் தொற்றவைக்கக்கூடியதுமல்ல. தொற்றவைக்க புதுச் சொற்களைக்கோரி நிற்பது இத்தகைய ஆத்ம விசாரத் தேடல் சார்ந்த கவித்துவ வெளிக்காட்டல்களையே கவிஞர் ஜின்னா கட்டட்ட கவிதைகளாக தமிழில் தந்துள்ளார். இதோ இரண்டொரு கவிதைகள்

ஓ இறைவா!
சூரியோதயத்தோடு வந்து
மாறு வேடத்தில் அகலும்
வெளிறிய
இருளிலிருந்து
என்னைக் காப்பாற்று
இரவின் இருள் தெளிவானது
ஆனால்
பகலின் இருட்டுக்கு
நான் பயப்படுகிறேன்
இதோ இன்னொரு கவிதை
வழங்குவது
வடிவானது
மன்னிப்பது
மிக அழகானது
அடிவானத்தில்
சூரியன் அமிழ்வதைப்
பார்க்கின்றேன்.
நனைந்துபோன இலைகளுக்கு
நிலாவொளி
போர்வையொன்றைப்
போர்த்துகின்றது
இரவு முழுதும்
அவற்றைத்

(51ஆம் பக்கம் பார்க்க...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரைவிமர்சனம்




# பாலியல் அங்கத அழகியல்

ச.இராகவன்

இதுவரை வெளிவந்த தமிழ்த் திரைப்படங்களில் பாலியல் குறித்த விடயங்களைத் தமிழ்க் கலாசார எல்லையை மீறாமல் வெகு நிதானமாகவும் தீவிரமாகவும் காட்சிப்படுத்திய திரைப்படமென ஏதாவதொன்றைக் குறிப்பிட முடியுமா? அநேகமாக இல்லையென்றே சொல்லத்தோன்றுகிறது. ஆனால் பாலியல் குறித்த காட்சிகளோ வசனங்களோ இடம்பெறாத தமிழ்த் திரைப்படமொன்றைக் கூடக் குறிப்பிட முடியாதளவிற்கு அது நீக்கமற நிறைந்துள்ளதென்பதுதான் இங்கே கவனிக்க வேண்டிய முரண் நகையாகும். கவர்ச்சி நடனம் மற்றும் குத்தாட்டப் பாடல்கள் வழியாகவும், அரைகுறையாடைகள் மற்றும் நீச்சலுடைகளில் கதாநாயகிகளைத் தோன்றவைத்தும், முத்தக்காட்சிகளைப் புகுத்தியும், கதைக்கு அவசியமென்று சொல்லிப் படுக்கையறைக் காட்சிகளைச் சொருகியும் திரைப்படத்தின் வியாபார ரீதியிலான வெற்றியொன்றையே முதன்மைப்படுத்தி பாலியல் குறித்த விடயங்களை வெறும் கேளிக்கைப் பொருளாக்கி வந்திருப்பதே தமிழ் சினிமாவின் துயர்மிகு வரலாறாகும். சில்க்ஸ்மிதா என்ற திறமையான நடிகையை இக்கேளிக்கையின் குறியீடாக்கி மோசமான ரசனையைக் கட்டமைத்திருந்ததுடன் கே.பாக்கியராஜ் முந்தானை முடிச்சில் பாலியல் குறியீடாக முருங்கைக்காயைக் கொண்டுவந்ததிலிருந்து இன்றுவரை அதைக்குதூகலமாக ஏற்றுக்கொண்டு கொண்டாடிவருவது வெட்கக்கேடாகத் தோன்றவேயில்லை. இந்நிலையில்தான் கல்யாண சமையல் சாதம் முக்கியமாகக் குறிப்பிட வேண்டியதொரு திரைப்படமாக அமைகிறது. இத்திரைப்படம் ஒரு கத்திமுனை நகர்வாக பாலியல் ரீதியான அகவயச் சிக்கலொன்றை வெகு நிதானமாக அதேவேளை நகைச்சுவையுணர்வோடு இயல்பாக வெளிப்படுத்தியுள்ளது. இந்தக் கத்திமுனை நகர்வில் சிறிதேனும் சமநிலை குழம்பியிருந்தாலும் ஒரு மூன்றாந்தர ஆபாசப்படமாக மாறிவிடக்கூடிய ஆபத்தையுணர்ந்து அவதானமாகக் கையாண்டுள்ள இயக்குநர் பிரசன்னா பாராட்டப்படவேண்டியவர்.



கதைப்படி ரகு (பிரசன்னா) என்ற இளைஞனுக்கு மீராவுடன் (லேகா வாஷிங்டன்) திருமணம் நிச்சயமான பின்னர் இருவரும் தனிமையில் சேர்ந்திருக்க நேரும் நாளொன்றில் மீராவுடன் பாலுறவில் ஈடுபட முனையும் போது அவனால் இயலாமல் போகிறது. இதனால் தனக்கு ஆண்மைக்குறையுள்ளதோ என்ற சந்தேகத்திற்குள்ளாகி அதிலிருந்து மீள்வதற்கு வழிதேடி அலைகிறான். நண்பர்களின் அசட்டுத்தனமான ஆலோசனைகளைப் பின்பற்றித் தீர்வு கிட்டாத நிலையில் மீராவின் தந்தை (டெல்லிகணேஷ்) பக்குவமான ஒரு தீர்வுக்கு வழிகாட்டுகிறார். இடையிடையே ஏற்படும் நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்து மீராவை முறைப்படி திருமணம் செய்து அந்தப்பாலியல் சிக்கலிலிருந்து மீட்கிறான்.

கதாநாயகன் என்பவன் ஆண்மையின் குறியீடாக விம்பமாக்கப்படும் தமிழ் சினிமாக்களில் ரகு என்ற பாத்திரம் மிகச்சவாலானதொன்று. அப்பாத்திரத்தில் நடிப்பதற்கு ஒரு வித அசட்டுத்துணிச்சல் தேவை. அப்பாத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரமேற்று நடித்துள்ள பிரசன்னா குறிப்பிட வேண்டிய நடிகர். தனது இயல்பான உடல்மொழியால் அப் பாத்திரத்தை மெருகேற்றிச் செல்கி றார்.

அஞ்சாதே திரைப்படத்தில் பிர சன்னா ஏற்று நடித்திருந்த காமுகண் பாத்திரமும் கல்யாண சமையல் சாதத்தில் அவர் ஏற்று நடித்திருக்கும் ரகு பாத்திரமும் கதாநாயக விம்பத் தைக் கொண்டிருக்கும் எந்தவொரு நடிகனும் ஏற்று நடிக்கத் துணியாத சவாலான பாத்திரங்கள். பிரசன்னா தமது அழுத்தமான நடிப்பினால் பாத் திரங்களை உரியவகையில் சமன் செய்துவிடுகிறார். இத்திரைப்படத் தில் குறிப்பிடப்படவேண்டிய இன் னொருவர் லேகா வாஷிங்டன். நளி னமும் நுட்பமும் கலந்த வெகு இயல் பான உடல்மொழி வியப்பிலாழ்த்து கிறது.

ரகு பாலுறவிலீடுபட முடியாமல் தோற்று மன அழுத்தத்திற்குள்ளாகும் போது அதை வெகு இயல்பாக எடுத் துக் கொண்டு முதலுறவில் ஏற்படும் பதற்றமே அதற்குக் காரணமென விளங்க வைக்கும் மீராவின் பாத்தி ரத்தை தனது நடிப்பினால் இரு அச



லாக்கிவிடுகிறார். முக்கியமாக புதிய தலைமுறையின் இயல்பாக மாறி வரும் பாலியல் குறித்த உரையாட லின் ஓர் அங்கமாக பாலியல் பற்றி பெண் வெளிப்படையாக உரையாடு வதும் இத்திரைப்படத்தில் தான் இடம்பெறுகிறது. இது கல்யாண சமையல் சாதத்தை கூடுதல் முக்கி யத்துவமுடைய திரைப்படமாக்குகி றது. மீரா, 'செக்ஸ் இல்லைன்னா கஷ் டமாகத்தானிருக்கும்' என்று சொல் வது இதுவரைக்குமான தமிழ்த்தி ரைப்படக் கதாநாயகிகளின் விம் பத்தை உடைத்தெறிந்து அதிர்வை ஏற்படுத்துகிறது. மேலும் ஆபாசமாகி விடுமென்று நினைக்கத் தோன்றும்

காட்சித் தருணங்களிலெல்லாம் இயல்பாகவே விரவும் நகைச்சுவையு ணர்ச்சிக் குறைபாடுகளையெல்லாம் நிரவிவிடுகிறது. மீராவின் தந்தை யாக வரும் டெல்லி கணேஷ் உளச் சிகிச்சை நிபுணராக வரும் கிரேஸி மோகன், ரகுவின் நண்பன் கௌதம் என இம்மூன்று நடிகர்களும் இந்நிர வலில் முக்கிய பங்காற்றுகின்றனர். ஒரு கத்திமுனை நகர்வில் தமிழ்த் திரைப்பட வரலாற்றில் முதலாவது பாலியல் அங்கதத்திரைப்படத்தைத் தந்திருக்கும் இயக்குநர் பிரசன்னா விடமிருந்து இன்னும் ஆவலுடன் எதிர்பார்க்கலாம். ■

---

*(66ஆம் பக்கத்தொடர்ச்சி...)*

விஞ்ஞானிகள் கூறியுள்ளனர். வடக்கு -கிழக்கு ஐக்கிய அமெரிக்கா வில் ஏற்பட்ட திடீர் பனிப் புயல்கள், தாய்லாந்தின் வெள்ளப்பெருக்கு காலநிலை மாற்றத்தின் விளைவுக ளே. தென்மேற்கு அமெரிக்கா, டெக் டாஸ் பகுதிகளில் ஏற்படும் வரட்சி க்கும் வெப்பமயமாதலே காரண மாகும். கணினி மாதிரிகளை அடிப்ப டையாகக் கொண்ட ஆய்வின்படி தற் போதைய காலநிலைப் போக்குகள் வரட்சியை மேலும் அதிகரிக்கும். காலநிலை மாற்றத்துடன் மொன்சூன் மேலும் செறிவடையும். வெப்பமான காற்று பெருமளவு நீரைத் தேக்கி வைத்திருக்கும். அத்துடன் அதிகள வான சக்தியை வானிலை ஒழுங்கி னுக்குள் செலுத்திவிடும். இதனால் புயல்களின் இயக்கமும் மாறிவிடும். உதாரணமாக, தாய்லாந்தில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கிற்கு மொன்சூன் மழைதான் காரணம். சனத்தொகை அதிகரிப்பு, நகர விருத்தி, ஆற்று முகாமைத்துவம், தாழ்நிலங்கள் ஆகி யவற்றின் பிரச்சினைகளும் குறிப் பிடத்தக்களவு பங்களித்துள்ளது. பூகோள வெப்பமடைதல் மோசமான வானிலை நிகழ்வுகளை தொடர்ச்சி யாக ஏற்படுத்தப்போகின்றது என்ப தற்கு தாய்லாந்து வெள்ளப்பெருக்கு ஒரு முன் உதாரணமாகும்.

வெப்பநிலை அதிகரிப்பினால் காலநிலை மாற்றம் இலங்கையிலும் நிச்சயம் பாதிப்புக்களை ஏற்படுத்தும். அதாவது, வரண்ட வலயங்களில் பிரதேச ரீதியான மழைவீழ்ச்சியில் மாறுபாடுகள் ஏற்படும். நீர்ப்பற்றாக் குறை பிரதான பிரச்சினையாகக் காணப்படும். விவசாயம் மாத்திர மன்றி நீர்வழங்கல், சுகாதாரம் நிலப்பயன்பாடு பெருந்தோட்டப்ப யிர்ச்செய்கைகளின் பாதிப்பு முதலி யவை ஏற்படும். தொடர்ந்து வெப்ப நிலை அதிகரிப்பினால் கடல் மட்டம் எழுச்சியடைவதால் சுற்றுலாத்துறை பாதிக்கப்படும். இலங்கையின் மொத்த சனத்தொகையில் 40சதவீத மான மக்கள் கரையோரப் பகுதிக ளில் வாழ்கின்றனர். இக்கரையோரப் பகுதிகளில் உள்ள நகரங்களுக்கு மேற்கொள்ளப்படும் நீர்விநியோகம் பிரச்சினைக்குரியவைகளாக மாறும். வரண்ட பகுதிகளில் உவர் நீரின் தாக் கம் அதிகரிக்கும்.

கரையோரப்பகுதிகளில் உள்ள பயிர் நிலங்களில் ஏலவே உவர்நீரின் தாக்கம் அறியப்பட்டுள்ளது. கொழும்பின் நீர் விநியோகத்தின் நீர் வெட்டுகளை ஏற்படுத்த வேண்டியி ருக்கும். ஆகவே நாம் உலக கால நிலை மாற்றங்கள் ஏற்படுத்தி வரும் சமூக மட்டத்தில் பல்வேறு விழிப்பு ணர்வு கருத்தாடலை விரிவாக்க வேண்டும். ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கடைசிப் பக்கம்

# காலநிலை மாற்றம்



பேராசிரியர்
எஸ்.அன்ரனி நோர்பேட்

இன்று உலகம் எதிர்கொள்ளும் முக்கியமான சவால்களில் ஒன்று பூகோள வெப்பமயமாதல் ஆகும். காலநிலையில் ஏற்படும் மாற்றங்களுக்காக புவியின் வெப்பநிலையில் ஏற்படும் சராசரி அதிகரிப்பினையே பூகோளம் வெப்பமடைதல் எனக் குறிப்பிடலாம். அதிகரிக்கும் வெப்பநிலை காரணமாக பௌதிக பண்பாட்டு கட்டமைப்புகளில் மாற்றங்கள் ஏற்பட்டு வருகின்றன. இவ் வெப்ப அதிகரிப்பினால் தாவரங்கள், விலங்குகள், மனிதர்கள் மிக மோசமாகப் பாதிக்கப்படுவர். உலக வளிமண்டலவியல் நிறுவனம் (WMO) ஐக்கியநாடுகளின் சூழல் நிகழ்ச்சித் திட்டம் (UNEP) ஆகியவற்றின் ஆதரவுடன் இரண்டாயிரத்திற்கு மேற்பட்ட உலக காலநிலை விஞ்ஞானிகளின் குழுவொன்றும், அவுஸ்திரேலியாவின் 'அனைத்து அரசாங்கங்களுக்கிடையிலான காலநிலை மாற்றம் பற்றிய ஆயுவுக்குழுவும்' (IPCC பூகோள காலநிலையை ஆய்வு செய்து வளிமண்டலத்தில் காணப்படும் பச்சை வீட்டு வாயுக்களே வெப்பமடைவதற்கு பிரதான காரணம் என உறுதிப் படுத்தியது. எதிர்காலத்தில் பச்சைவீட்டு வாயுக்களின் மட்டம் உயர்நிலைக்குச் செல்லும் பொழுது காலநிலை மாற்றத்தில் திடீர் அல்லது சடுதியான ஆச்சரியங்கள் ஏற்படுவதற்கு வாய்ப்புகள் உள் என. கடந்தகால நிலைபற்றிய ஆய்வுகள் இதனை புலப்படுத்துகின்றன. அந்தாட்டிக்கா கிரீன்லாந்து பனிப் படத்தில் இரண்டுமயில் ஆழத்திற்கு துளைகளை இட்டு பனிப்பட உள்மைய மாதிரிகளைச் சேகரித்து ஆய்வுகளை மேற்கொண்டுள்ளனர்.

பூகோளம் வெப்பமடைதல் போக்கினை நிர்ணயிக்கும் பிரதான சக்தியாக மனிதனே விளங்குகின்றான். இயற்கைக் காரணிகளான எரிமலை வெடிப்புகள், ஞாயிற்றுச் சக்தியில் ஏற்படும் தளம்பல்கள் என்பன கடந்தகால வெப்பநிலையில் முக்கிய செல்வாக்கினைக் கொண்டிருந்தாலும் மனித நடவடிக்கைகளினால் குறிப்பாக பச்சை வீட்டு வாயுக்களில் ஏற்பட்ட அதிகரிப்பு இன்று முக்கிய பங்கினைக் கொண்டிருப்பதைக் காணலாம்.

இருபதாம் நூற்றாண்டின் புவியின் வெப்பநிலையில் 0.75பாகை செல்சியஸ் அதிகரிப்பும் கடல் மட்டத்தில் 22 செ.மீற்றர் உயர்ச்சியும் ஏற்பட்டு வந்துள்ளன என காலநிலை மாற்றம் பற்றிய அரசாங்கங்களுக்கிடையிலான ஆய்வுக்குழுவின் (IPCC) அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. அத்துடன் இவ்வறிக்கையில் 2100 இல் பூகோள வெப்பநிலை 1.1-6.4பாகை செல்சியஸிற்கு இடையில் உயர்வடையும் என்றும் எதிர்வுகூறப்பட்டுள்ளது.

பூகோள வெப்பமடைதல் என்பது கடந்த சில வருடங்களாக பூகோளப் பிரச்சினைகளில் மிக முக்கியமானதாகக் கருதப்படுகிறது. பூகோள வெப்பநிலை அதிகரிப்புத் தொடர்பான தகவல்கள் அடிக்கடி வெளியிடப்பட்டு வருகின்றன. உலகில் பிராந்திய ரீதியாக அமைக்கப்பட்டுள்ள பல்வேறு நிலையங்கள் மற்றும் கடல் மேற்பரப்பு வெப்பநிலை தரவுகளின்படி 1980இல் இருந்து மிகவும் வெப்பமாகக் காணப்பட்ட ஏழு வருடங்கள் அடையாளம் செய்யப்பட்டுள்ளன. பூகோள வெப்பமடைதலினால் நீரியல் வட்டத்தில் மாற்றங்கள் ஏற்படும். உப அயனப் பகுதிகளில் மழைவீழ்ச்சியில் வீழ்ச்சிப்போக்கு காணப்படும். அயனப்பகுதிகளில் 0.3 சதவீதம் அதிகரிப்பு ஏற்படும். ஆசிய ஆபிரிக்க நாடுகளில் வறட்சியின் நிகழ்வுகளும் செறிவும் கடுமையான போக்கும் அதிகரிக்கும். எல்நினோ நிகழ்வுகள் அதிகரிக்கும். பூகோள ரீதியான வெப்பநிலை 1990 - 2025இல் 0.4 - 1.1 பாகை செல்சியஸுக்கும் 1990 -2050 இல் 0.8-2.6 பாகை செல்சியஸுக்கும் இடையில் அதிகரிக்கும் என எதிர்வு கூறப்பட்டுள்ளது. இவ்வெப்பநிலை அதிகரிப்பின் காரணமாக 2050இல் சீனாவின் பனியாறுகளில் 64 சதவீதம் மறைந்துவிடும். அயனப் புயல்களின் செறிவு 8-16 சதவீதத்திற்கும் அதிகரிக்கும். மழைவீழ்ச்சியானது புயலின் மையத்தில் இருந்து 60 மைல் வரை 12 - 26 சதவீதமாக அதிகரிக்கும். கடல் மட்ட உயர்ச்சியினால் கரையோரம் 400 அடி உட்பகுதி நோக்கி நகரும். கடந்த 50 வருடங்களில் அந்தாட்டிக்கா, ரஷ்யாவில் வெப்பநிலை 2பாகை செல்சியஸால் அதிகரித்துள்ளது.

சர்வதேச காலநிலை பற்றிய அறிக்கைகளின்படி வானிலை அழிவுகள் பில்லியன் டொலர் செலவுகளை ஏற்படுத்தும் எனக் கூறப்படுகின்றது. எதிர்காலத்தில் மிகத் தீவிரமான மலைப்புயல்கள் ஏற்படக் கூடுமென நாசா காலநிலை

(65ஆம் பக்கம் பார்க்க...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்கள் அபிமான **சமகாலம்** இப்பொழுது உங்கள்

Tablet மற்றும் Android phone களில்





இப்பொழுதே Download செய்யுங்கள்!

Available on
play.google.com

Available on
www.magzter.com

Feedback and comments : samakalam@expressnewspapers.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Printed and published by Express Newspapers (Ceylon) (Pvt) Ltd, at No.185, Grandpass Road, Colombo -14, Sri Lanka.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org